ஏப்ரல் - 2024

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்







**1. அண்மையில், முதலாவது அணுவாற்றல் உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?**




அ. புது தில்லி


**ஆ. பிரஸ்ஸல்ஸ்** ✓

இ. மாஸ்கோ

ஈ. பெய்ஜிங்

★ மார்ச்.21 அன்று பிரஸ்ஸல்ஸில் அணுவாற்றல் உச்சிமாநாட்டிற்காக 34 நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடினர். பன்னாட்டு அணுசக்தி நிறுவனம் (IAEA) மற்றும் பெல்ஜியம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உச்சிமாநாடு, நிகர–சுழிய உமிழ்வு மற்றும் நீடித்த வளர்ச்சியை அடைவதில் அணுசக்தியை மேம்படுத்துவதற்கான உத்திகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தொழில்நுட்ப குழுக்கள் அணுசக்தியின் திறனை அதிகப்படுத்துவதில் தங்களது ஆய்வினை மேற்கொண்டுள்ளன.

**2. அண்மையில், தேசிய புலனாய்வு முகமையின் (NIA) இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. குல்தீப் சிங்

ஆ. காளிராஜ் மகேஷ் குமார்

இ. R S கிருஷ்ணா

**ஈ. சதானந்த் வசந்த் ததே** ✓

★ மத்திய அரசு அண்மையில் முக்கிய நிறுவனங்களுக்கு புதிய தலைமை இயக்குநர்களை நியமித்து அறிவித்தது. மகாராஷ்டிராவைச் சேர்ந்த 1990ஆம் ஆண்டுத் தொகுதியைச் சார்ந்த இகாப அதிகாரியான சதானந்த் வசந்த் ததே, தேசிய புலனாய்வு முகமையின் (NIA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இராஜீவ் குமார் சர்மா, காவலர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**3. இந்தியாவின் பாதுகாக்கப்பட்ட பாசுமதி இரகங்களை பயிரிட்டதற்காக, எந்த நாட்டின்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் கோரியுள்ளது?**



அ. ஆப்கானிஸ்தான்

**ஆ. பாகிஸ்தான்** ✓

இ. மியான்மர்

ஈ. வங்காளதேசம்

★ 2024 மார்ச்சில், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் அதன் மேம்படுத்தப்பட்ட பாசுமதி அரிசி இரகங்களை அங்கீகாரம் இல்லாமல் பயிரிட்டதற்காக பாகிஸ்தான்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியது. இந்தியாவின் $5.5 பில்லியன் டாலர் ஏற்றுமதி சந்தைக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில், பாகிஸ்தான், 'சட்ட விரோதமாக' இந்த இரகங்களை பயிரிட்டு வருவதாக IARI கவலை தெரிவித்துள்ளது. பூசா–1121 மற்றும் 1509 போன்ற பாசுமதி இரகங்கள் பாகிஸ்தானில் புதிய பெயர்களில் வளர்க்கப்படுவதாக IARI கண்டறிந்துள்ளது.

**4. லெபனானின் பெய்ரூட்டில் நடந்த WTT ஃபீடர் பெய்ரூட் – II 2024 போட்டியில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**



**அ. ஸ்ரீஜா அகுலா** ✓

ஆ. சாரா டி நட்டே

இ. சூ ஹியோ

ஈ. ஐஹிகா முகர்ஜி

★ உலகளவில் 47ஆம் இடத்தில் உள்ள ஸ்ரீஜா அகுலா, லெபனானில் நடந்த WTT Feeder Beirut II, 2024இல் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை, லக்சம்பேர்க்கின் சாரா D நட்டேவை வீழ்த்தி வென்றார். 25 வயதான அவர், 6–11, 12–10, 11–5, 11–9 என்ற கணக்கில் இவ்வெற்றியை உறுதிசெய்தார். முன்னதாக அவர் போட்டியில் முதலிடத்தில் இருந்த தென் கொரியாவின் சு ஹியோ வோனை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. இது அவரது 2ஆவது WTT ஒற்றையர் பட்டமாகும்.


**5. Solar and Heliospheric Observatory (SOHO) என்பது கீழ்காணும் எந்த இரண்டு விண்வெளி நிறுவனங்களுக்கு இடையேயான பன்னாட்டு ஒத்துழைப்புத் திட்டமாகும்?**

அ. JAXA மற்றும் ISRO

ஆ. CNSA மற்றும் ROSCOSMOS

**இ ESA மற்றும் NASA** ✓

ஈ. CNSA மற்றும் ISRO



★ அண்மையில் Solar and Heliospheric Observatory (SOHO)இன் தரவைப் பயன்படுத்தி 5,000ஆவது வால்மீனை ஒரு அறிவியலாளர் கண்டுபிடித்துள்ளார். ESA மற்றும் NASA இடையேயான கூட்டுப்பணியான SOHO, 1995இல் முதல் லாக்ராஞ்சியன் புள்ளியில் இருந்து சூரியனை ஆய்வுசெய்ய தொடங்கியது. 12 அறிவியல் கருவிகள் பொருத்தப்பட்ட இது சூரியனின் வளிமண்டலம், சூரியப்பரப்பு அலைப்பகுப்பாய்வு மற்றும் சூரியவளி ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிக்கிறது. 1998இல் அதன் பணி நிறைவடைந்த போதிலும், SOHO தொடர்ந்து, சூரியனின் இயக்கவியல் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கிவருகிறது. இதன்மூலம் ஏராளமான வால்மீன்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**6. MGNREGA, 2005 திட்டத்தின்கீழ், திறம்குறைந்த தொழிலாளர்களுக்கு 2024–2025ஆம் நிதியாண்டுக்கான புதிய ஊதிய விகிதங்களை அறிவித்த அமைச்சகம் எது?**

**அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்** ✓

ஆ. வேளாண் அமைச்சகம்

இ. மின்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ MGNREGA, 2005 திட்டத்தின்கீழ், திறம்குறைந்த தொழிலாளர்களுக்கு 2024–2025ஆம் நிதியாண்டுக்கான புதிய ஊதிய விகிதங்களை ஊரக வளர்ச்சி அமைச்சகம் அறிவித்துள்ளது. MGNREGA திட்டமானது வயதுவந்த கிராமப்புற குடும்ப உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் ஊதியத்துடன்கூடிய 100 நாட்கள் வேலைவாய்ப்பை உறுதிசெய்கிறது. MGNREGAஇன் பிரிவு–6 விதிகளின்படி, CPI–AL மாற்றங்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் மாநில வாரியான ஊதிய விகிதங்களை ஊரக வளர்ச்சி அமைச்சகம் சரிசெய்கிறது. இது கிராமப்புற தொழிலாளர்களுக்கு நியாயமான இழப்பீட்டை உறுதிசெய்து, பணவீக்க விகிதங்களுக்கு ஏற்ப அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுகிறது.

**7. பிராண்ட் பைனான்ஸ் – 2024 அறிக்கையின்படி, உலகின் வலிமையான காப்பீட்டு நிறுவனம் எது?**

அ. ஓரியண்டல் ஜெனரல் இன்சூரன்ஸ்

**ஆ. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC)** ✓

இ. HDFC ஆயுள் காப்பீடு

ஈ. மேக்ஸ் ஆயுள் காப்பீடு

★ '2024–பிராண்ட் பைனான்ஸ் இன்சூரன்ஸ் 100' அறிக்கையின்படி, ₹816 பில்லியன் மதிப்பிலான காப்பீடுகளுடன் உலகின் வலிமையான காப்பீட்டு நிறுவனமாக இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) மாறியுள்ளது. கேத்தே ஆயுள் காப்பீட்டு நிறுவனம் அதற்கடுத்த நிலையில் உள்ளது. இதற்கிடையில், பிங் ஆன், சீன காப்பீட்டு நிறுவனம் மற்றும் சிபிஐசி போன்ற சீனக் காப்பீட்டாளர்கள் அடுத்தடுத்த நிலையில் உள்ளன. நிறுவன மதிப்புகளின் அடிப்படையில் ₹2799 பில்லியன் மதிப்புடன் பிங் ஆன் நிறுவனம் முன்னணியில் உள்ளது.

**8. 2024 – உணவுக்கழிவுக் குறியீட்டறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**



அ. UNEP ✓

ஆ. UNDP

இ. WHO

ஈ. ILO

★ ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) 2024இல் அதன் 3ஆவது உணவுக்கழிவுக் குறியீட்டறிக்கையை வெளியிட்டது. கடந்த 2022இல் 1.05 பில்லியன் மெட்ரிக் டன் (19%) உணவு வீணடிக்கப்பட்டதாக இந்த அறிக்கை தெரிவித்துள்ளது. உலகளவில் 783 மில்லியன் மக்கள் பட்டினியால் அவதியுறும் வேளையில் இந்தச்சதவீதம் முற்றிலும் கவலைக்கு உரியதாக உள்ளதாக UNEP தெரிவித்துள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கு (SDG) 12.3ஐ அடைய உணவுக்கழிவுகளை கையாளவேண்டியதன் அவசியத்தை UNEP வலியுறுத்துகிறது. 60% உணவு வீணாக்கலுக்கு குடும்பங்களே அதிகம் பங்களித்துள்ளன. தனிநபர் ஓராண்டில் விரயம் செய்யும் உணவின் அளவு 79 கிகி என மதிப்பிடப்பட்டுள்ளது.

**9. அண்மையில், எந்தெந்த இடங்களில் புதிய அணுக்கடிகாரங்களை இந்திய அரசு நிறுவவுள்ளது?**




அ. சென்னை, மதுரை, கோயம்புத்தூர்

ஆ. கோழிக்கோடு, கண்ணனூர் மற்றும் வயநாடு

இ. பெங்களூரு, போபால் மற்றும் லக்னோ

ஈ. புவனேசுவரம், ஜெய்ப்பூர் மற்றும் ஐதராபாத் ✓

★ அமெரிக்க அடிப்படையிலான வழங்கிகளை நம்பியிருப்பதை எதிர்த்து, அனைத்து சாதனங்களும் இந்திய தரநிலை நேரத்துடன் ஒத்திசைக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக, இந்திய அரசு நாடு முழுவதும் அணுக்கடிகாரங்களைப் பயன்படுத்தவுள்ளது. நான்கு நாடுகளால் உருவாக்கப்பட்டு, 1955இல் அணுக்கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. புது தில்லியின் CSIR–NPL ஏழு அணுக்கடிகாரங்களைப் பராமரிக்கும் இந்தியாவின் நேரக்கண்காணிப்பாளராகும். பரிதாபாத் மற்றும் ஆமதாபாத்தைத் தொடர்ந்து புவனேசுவரம், ஜெய்ப்பூர் மற்றும் ஐதராபாத் ஆகிய இடங்களில் தற்போது புதிய அணுக்கடிகாரங்கள் நிறுவப்படவுள்ளன.

**10. அண்மையில், சீனாவின் ஷாங்ராவோவில் உள்ள உலக பில்லியர்ட்ஸ் அருங்காட்சியகத்தின் வாழ்த்தரங்கில் இணையப்பெற்றவர் யார்?**



அ. கீத் சிறீராம் சேத்தி

ஆ. ருடால்ஃப் வால்டர் வாண்டரோன்

இ. ஏர்ல் ஸ்ட்ரிக்லேண்ட்

ஈ. பங்கஜ் அத்வானி ✓

★ 2024 மார்ச்சில், இந்திய பில்லியர்ட்ஸ் வீரரான பங்கஜ் அத்வானி, சீனாவின் ஷாங்ராவோவில் அமைந்துள்ள உலக பில்லியர்ட்ஸ் அருங்காட்சியகத்தின் வாழ்த்தரங்கில் இணைக்கப்பட்டார். சீனாவில் 26ஆம் IBSF பட்டத்தை வென்ற பிறகு பங்கஜ் அத்வானி அவ்வாழ்த்தரங்கில் இணைக்கப்பட்டார். 13,500 சமீ பரப்பளவைக் கொண்டுள்ள இந்த அருங்காட்சியகம், ஸ்னூக்கரின் வரலாறு, உபகரணங்கள், நிகழ்வுகள், கலாச்சார மரபுகள் மற்றும் மக்கள் பற்றிய கண்ணோட்டத்தை வழங்குகிறது.

**11. அண்மையில், எந்த ஆற்றில், 'டான்டலம்' என்ற அரிய உலோகம் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ. கோமதி ஆ. சட்லெஜ் ✓




இ. காவேரி ஈ. கோதாவரி

★ மின்னணு துறையில் முக்கியமான ஓர் அரிய உலோகமாகப் பார்க்கப்படும் டான்டலத்தின் தடயங்கள், சட்லெஜ் ஆற்றில், பஞ்சாபின் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்து ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. திறன்பேசிகள் மற்றும் மடிக்கணினிகள்போன்ற சாதனங்களில் மின்தேக்கி மற்றும் மின்தடையங்களாக டான்டலம் பயன்படுத்தப்–படுகிறது. சட்லஜ் ஆற்றங்கரைக்கு அடியில் பயன்படுத்தப்படாத கனிம வளங்களின் இருப்பை இந்தக் கண்டுபிடிப்பு குறிக்கிறது. டான்டலத்தின் தனித்துவமான பண்புகள் அதை மதிப்புமிக்கதாக ஆக்குகின்றன.

**12. அண்மையில், கொரோனா வைரஸ்களுக்கான, 'CoViNet' என்ற புதிய வலையமைப்பை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**




அ. உலக வங்கி

ஆ. WHO ✓

இ. WTO

ஈ. UNICEF

★ உலக சுகாதார அமைப்பு (WHO) 'CoViNet'ஐ அறிமுகப்படுத்தியது. இது மனிதர்கள், விலங்கு மற்றும் சுற்றுச்சூழலில் கொரோனா வைரஸ் கண்காணிப்பில் நிபுணத்துவம் வாய்ந்த ஆய்வகங்களின் உலகளாவிய வலையமைப்பைக் கொண்டுள்ளது. புதிய திரிபுகள், இடர் மதிப்பீட்டை மேம்படுத்துதல் மற்றும் WHO கொள்கைகளைத் தெரிவிப்பது உள்ளிட்ட வளர்ந்துவரும் கொரோனா வைரஸ்களைக் கண்டறிந்து கண்காணிப்பதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. 'CoViNet' கண்காணிப்பு திறன்களை விரிவுபடுத்தும், குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் நாடுகளில், MERS–CoV மற்றும் பிற குறிப்பிடத்தக்க கொரோனா வைரஸ்களைக் கண்காணிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்காளர் பட்டியலில் பெயர் விவரம் அறிய பிரத்யேக செயலி.**

வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கிறதா, உங்களது வேட்பாளர் மீதுள்ள வழக்கு விவரங்கள் ஆகியன குறித்து அறிய தனித்தனியான செயலிகளை தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

Voter Helpline என்ற பிரத்யேக செயலி மூலமாக வாக்காளர் பட்டியல் பெயர்களை உறுதி செய்யலாம். இதேபோன்று, தேர்தல் நடத்தை விதிகள் மீறப்பட்டால் அதுகுறித்த புகார்களைத் தெரிவிக்க, 'cVIGIL' எனப்படும் பிரத்யேக செயலி பயன்பாட்டில் உள்ளது. வாக்காளர்கள், தங்களது தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களையும் அறிந்திடலாம். இதற்கென, 'சுவிதா' என்ற பெயரில் பிரத்யேக செயலி பயன்பாட்டில் உள்ளது.

---

தமிழ்நாட்டில் தொற்றுநோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒருங்கிணைந்த சுகாதார இணையதளம், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்ட இணையதளங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. இதில், நோய்ப்பரவல்குறித்து பொதுமக்களே நேரடியாக தெரிவிக்கும் வகையிலான வசதி உள்ளது.

---

**2. தமிழ்நாட்டில் 15 ஆண்டுகளில் 11,002 உறுப்புமாற்று சிகிச்சைகள்.**

தமிழ்நாட்டில் கடந்த 15 ஆண்டுகளில் 11,002 உறுப்புமாற்று சிகிச்சைகள் நடைபெற்றுள்ளதாக மாநில உறுப்புமாற்று ஆணையம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 935 உறுப்புமாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் அதிகபட்சமாக சிறுநீரகமும், அதற்கு அடுத்தபடியாக விழிவெண்படலம், கல்லீரல் ஆகியவை உறுப்புமாற்று சிகிச்சைக்காக தானமாகப் பெறப்பட்டுள்ளன.

உறுப்புமாற்று அறுவை சிகிச்சை ஆணையம் என்ற முன்னோடி அமைப்பு நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் தொடங்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது. அதன்காரணமாக உறுப்புமாற்று அறுவை சிகிச்சையில் நாட்டின் தலைநகராகவே தமிழ்நாடு விளங்கி வருகிறது.


# IMPORTANT LINKS

## TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## WINMEEN: INSTALL THE WINMEEN APP
## DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், 'கலாம்–250'ஐ ISROஇன் உந்துவிசைப் பரிசோதனை தளத்தில் வெற்றிகரமாகச் சோதனை செய்த விண்வெளி நிறுவனம் எது?**




அ. பெல்லாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ்

ஆ. அக்னிகுல் காஸ்மோஸ்

**இ. ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்** ✓

ஈ. காவா ஸ்பேஸ்

★ ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் என்ற விண்வெளிசார் நிறுவனம் அண்மையில் ISROஇன் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில், 'கலாம்–250'ஐ வெற்றிகரமாக பரிசோதித்தது. விக்ரம்–1 விண்வெளி ஏவுகலத்தின் இந்த 2ஆம் நிலை கார்பன் கலவை இராக்கெட் மோட்டாரானது EPDM வெப்பப்பாதுகாப்பு மற்றும் துல்லியமான உந்துதல் திசையன் கட்டுப்பாடு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இது, ஏவுகலத்தை வளிமண்டலத்தில் இருந்து விண்வெளிக்குக் கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**2. ஐக்கிய நாடுகள் (UN) சபையின் பொதுச்செயலரால், பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**




அ. நிகில் சேத்

**ஆ. கமல் கிஷோர்** ✓

இ. ஷைலேஷ் தினகர்

ஈ. சத்யா S திரிபாதி

★ இந்திய நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரியான கமல் கிஷோர், பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சிறப்புப் பிரதிநிதியாக ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரஸால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் மாமி மிசுடோரி அப்பதவியிலிருந்தார். கமல் கிஷோர், தற்போது இந்திய அரசாங்கத்தின் NDMAஇன் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். UNDRRஇல் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான உதவிச்செயலராகவும், பொதுச்செயலாளரின் சிறப்புப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ள கமல் கிஷோரின் பங்கு உலகளாவிய பேரிடர் தணிப்பு முயற்சிகளில் முக்கியமானது என்று ஐநா செய்தித்தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் அறிவித்துள்ளார்.

**3. குட்டநாடு சதுப்புநில அமைப்பு அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா** ✓

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

★ கடல் மட்டத்திற்குக்கீழே நெல் சாகுபடி செய்வதற்கு பெயர் பெற்ற குட்டநாடு, மாசுபாடு, உப்புத்தன்மை மற்றும் சீரற்ற வானிலை காரணமாக கடுமையான நீர்ப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. கேரளத்து மேற்குக்கடற்கரையில் உள்ள கழிமுகமான குட்டநாடு, தனித்துவமான குட்டநாடு விவசாய முறையை பின்பற்றி நெல் சாகுபடியை செய்து வருகிறது. இது காரபாடம், காயல் மற்றும் காரி வயல்களை உள்ளடக்கிய, 'புன்செய் வயல்களில்' கடல் மட்டத்திற்குக் கீழே நெல்சாகுபடியை மேற்கொள்கிறது. இந்தப்பகுதி ராம்சர் தளமான வேம்பநாடு ஈரநில சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருபகுதியாக உள்ளது.

**4. தீவிர வெப்பம்குறித்த உலகளாவிய உச்சிமாநாட்டை நடத்திய அமைப்புகள் எவை?**




**அ. USAID மற்றும் செஞ்சிலுவை சங்கம்** ✓

ஆ. UNICEF மற்றும் UNDP

இ. UNEP மற்றும் WTO

ஈ. WHO மற்றும் ILO

★ பன்னாட்டு மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமை (USAID) மற்றும் செஞ்சிலுவை சங்கம் மற்றும் அதன் சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த தீவிர வெப்பம்குறித்த முதல் உச்சிமாநாடு, கடந்த 2023ஆம் ஆண்டில் நிலவிய அதிக வெப்பநிலையின் தாக்கங்களுக்குத் தீர்வுகாண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. IFRC மற்றும் USAID தீவிர வெப்பத்துக்கு தீர்வு காண்பதற்கான மையம், ஃபயர் கிராண்ட் சேலஞ்ச் பரிசு, FEWS NET ஆகியவற்றின் முன்னெடுப்புகளும் இதில் அடங்கும்.

### 5. கோரமங்களா–சல்லகட்டா பள்ளத்தாக்கு திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?



அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா** ✓

இ கேரளா

ஈ. கோவா

★ கழிவுநீரை மறுபயன்பாடு செய்வதற்கான கர்நாடகாவின் கோரமங்களா–சல்லகட்டா பள்ளத்தாக்கு திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்த நடுவண் அரசு இலக்குவைத்துள்ளது. இது பெங்களூரு–கிராமப்புறம், கோலாரு மற்றும் சிக்கபல்லாபுரா போன்ற வறண்ட மாவட்டங்களில் உள்ள ஏரிகளை நிரப்புகிறது.

★ நிலத்தடி நீரை மீளுருவாக்கம் செய்வதில் வெற்றிகண்ட இந்தத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு மாநிலங்கள் முழுவதும் உள்ள ஏரிகளை புத்துயிர் பெறச்செய்ய அமைச்சகம் பரிசீலித்து வருகிறது. இது அடல் பூஜல் திட்டத்தின்கீழ் பகுதியளவான நிதியைப் பெறுகிறது. இந்தியா நாள்தோறும் 72,368 MLD கழிவுநீரை உற்பத்தி செய்கிறது. சுஜலம் 2.0 என்ற கழிவுநீர் மறுசுழற்சி திட்டமானது சமையல், குளியல் மற்றும் சலவைக் கழிவுநீர்களை மறுபயன்பாடு செய்வதற்காக அண்மையில் தொடங்கப்பட்டது.

### 6. கௌதா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?



**அ. குஜராத்** ✓

ஆ. இராஜஸ்தான்

இ. ஒடிசா

ஈ. ஹரியானா

★ அதானி பசுமை ஆற்றல் நிறுவனம், குஜராத் மாநிலத்தின் ரான் ஆப் கட்ச்சில் உள்ள கௌதா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காவில் 1,000 மெகாவாட் சூரிய ஆற்றல் உற்பத்தியைத் தொடக்கியுள்ளது. 726 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இப்பூங்கா, காற்றாலைகள் மற்றும் சூரியவொளித்தகடுகளைக்கொண்ட உலகின் மிகப்பெரிய கலப்புமுறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காவாகும். 2026 டிசம்பருக்குள் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வரும் இந்தப் பூங்கா, விண்வெளியில் இருந்து தெரியும்படி அமைக்கப்பட்டுள்ளது. இது 30 ஜிகாவாட் (GW) பசுமை ஆற்றலை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 16.1 மில்லியன் வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும்; 58 மில்லியன் டன்கள் $CO_2$ உமிழ்வைத் தவிர்க்க முடியும்.

### 7. TATA மோட்டார்ஸ் மற்றும் HPCL ஆகியவை இணைந்து 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் எத்தனை EV மின்னேற்ற நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளன?



**அ. 5000** ✓

ஆ. 3000

இ. 8000

ஈ. 18000

★ TPEM மற்றும் HPCL ஆகியவை இணைந்து நாடு முழுவதும் EV மின்னேற்ற நிலையங்களை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 2024 மார்ச்.27 அன்று கையொப்பமிட்டன. டிசம்பருக்குள் HPCL நிலையங்களில் 5000 மின்னேற்றிகளை நிறுவுவது இதன் இலக்காகும். இந்தியா முழுவதும் 21,500 நிலையங்களுடன், மின்னேற்ற பயன்பாட்டுத் தரவைச் சேகரிப்பதன்மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் HPCL திட்டமிட்டுள்ளது. TPEM ஆனது மின்னேற்றிகளை நிறுவுவாதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும்.

### 8. கியால்சங் திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?



அ. நேபாளம்


ஆ. மியான்மர்

**இ. பூடான்** ✓

ஈ. இலங்கை

★ கியால்சங் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 2ஆவது தவணையாக ₹500 கோடியை பூடானுக்கு இந்தியா வழங்கியது. பிரதமர் நரேந்திர மோதியின் சமீபத்திய பூடான் பயணம், மார்ச்.23 அன்று நிறைவடைந்தது மற்றும் பூடானின் வளர்ச்சிக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை அது வலியுறுத்தியது. பூடானுக்கு ஐந்தாண்டுகளில் ₹10,000 கோடி நிதி வழங்கப்படும் எனப் பிரதமர் நரேந்திர மோதி உறுதியளித்தார். இது அண்டை நாடுகளின் வளர்ச்சி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்தியாவின் ஆதரவை மறு உறுதி செய்கிறது.

### 9. 'MEGHAYAN–24' என்ற METOC கருத்தரங்கின் கருப்பொருள் என்ன?




**அ. At the Frontline of Climate Action** ✓

ஆ. The Future of Weather, Climate and Water across Generations

இ. Early Warning and Early Action

ஈ. The Ocean, Our Climate and Weather

★ வானிலை ஆய்வாளர்களின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் வகையிலும் 1950ஆம் ஆண்டில் உலக வானிலை அமைப்பு நிறுவப்பட்டதை நினைவுகூரும் விதமாகவும் மார்ச்.23 அன்று உலக வானிலை நாள் கொண்டாடப்பட்டது. அண்மையில், 'MEGHAYAN–24' என்ற METOC கருத்தரங்கு, இந்தியக் கடற்படை வானிலை ஆய்வுமையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்சமயம் அட்மிரல் R ஹரி குமார், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதன் அவசரத்தை வலியுறுத்தினார். "At the Frontline of Climate Action" என்பது இந்தக் கருத்தரங்கிற்கானக் கருப்பொருளாகும்.

### 10. அண்மையில், யுன்ஹாய்–3 02 என்ற சுற்றுச்சூழல் கண்காணிப்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?



அ. ரஷ்யா

**ஆ. சீனா** ✓

இ. ஜப்பான்

ஈ. இந்தியா

★ ஷாங்சி மாகாணத்தில் உள்ள தையுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து சுற்றுச்சூழல் கண்காணிப்பிற்காக யுன்ஹாய்–3 02 என்ற செயற்கைக்கோளை சீனா ஏவியது. இச்செயற்கைக்கோள், வளிமண்டலம் மற்றும் கடற்புறச் சூழல் கண்காணித்தல், விண்வெளிச் சூழல் கண்காணிப்பு, பேரிடர் தடுப்பு மற்றும் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

**11. கம்பம் பள்ளத்தாக்கு அமைந்துள்ள மாவட்டம் எது?**



அ. மதுரை

ஆ. தென்காசி

**இ. தேனி** ✓

ஈ. நீலகிரி

★ "தென்னிந்தியாவின் திராட்சை நகரம்" என்றழைக்கப்படும் கம்பம் பள்ளத்தாக்கு, நாட்டின் 85% 'பன்னீர் திராட்சை' உற்பத்திக்குப் பெயர் பெற்றதாகும். 1832இல் ஒரு பிரெஞ்சு பாதிரியாரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திராட்சைகள் பிற இடங்களைப் போலல்லாமல் ஆண்டு முழுவதும் செழித்து வளரும் தன்மையுடையன. அதன் விரைவான வளர்ச்சி மற்றும் முன்கூட்டிய பழுத்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட இது, 2023இல் புவிசார் குறியீட்டைப்பெற்றது. கம்பம் பள்ளத்தாக்கில் விளையும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பன்னீர் திராட்சைகள் தேறல், மதுபானங்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலையில் தேனி மாவட்டத்தில் இது அமைந்திருப்பது அதன் வசீகரத்தை மேலும் கூட்டுகிறது.

**12. அண்மையில் எந்த இடத்தில், இந்திய வான்படையால், 'ககன் சக்தி – 2024' என்ற பயிற்சி நடத்தப்பட்டது?**



அ. ஜெய்ப்பூர்

**ஆ. பொக்ரான்** ✓

இ. ஜோத்பூர்

ஈ. அஜ்மீர்

★ இந்திய வான்படையானது அனைத்து விமானப்படை நிலையங்களையும் உள்ளடக்கிய நாட்டின் மிகப்பெரிய வான் இராணுவப்பயிற்சியான, 'ககன் சக்தி–2024'ஐ அண்மையில் தொடங்கியது. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இது, 2024 ஏப்.01 அன்று பொக்ரான் தளத்தில் தொடங்கியது. ஏறக்குறைய 10,000 வான்படை வீரர்கள் பங்கேற்கும் இந்தப் பயிற்சியில், மேற்கு மற்றும் வடபுறங்களில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கர்ப்பிணிகள் நிதியுதவி திட்டம்: புதிய நடைமுறை அமல்.**

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கர்ப்பிணிகளுக்கு நிதியுதவி வழங்குவதில் புதிய நடைமுறை ஏப்.1 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை ஐந்து தவணைகளாக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இனி மூன்று தவணைகளாக வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் Dr முத்துலட்சுமி அம்மையார் மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ், கர்ப்பிணிகள் கருத்தரித்த 12 வாரத்துக்குள் ஆரம்ப சுகாதார செவிலியர்களிடம் ஆதார் அட்டை, வங்கிக்கணக்கு எண் விவரங்களை தெரிவித்து, பெயரைப் பதிவுசெய்து, 'பிக்மி' எண் பெறவேண்டும்.

பிரதமர் மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்தின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் தற்போது சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, இதற்கு முன்பு வரை ஐந்து தவணைகளாக வழங்கப்பட்டு வந்த ₹14,000 நிதியுதவி இனி மூன்று தவணைகளில் வழங்கப்படவுள்ளது. கர்ப்ப காலத்தின் நான்காவது மாதத்தில் ₹6 ஆயிரமும், குழந்தை பிறந்த நான்காவது மாதத்தில் ₹6 ஆயிரமும், குழந்தை பிறந்த 9ஆவது மாதத்தில் ₹2 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. அதேபோன்று பேறுகாலத்தில் மூன்றாவது மற்றும் ஆறாவது மாதங்களில் இருமுறை ஊட்டச் சத்து பெட்டகங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. சூரியக்கூடார உலர்த்தி அமைக்க மானியம்: வழிமுறைகள் வெளியீடு.**

உழவர்களுக்கு மானியத்துடன் சூரியக்கூடார உலர்த்திகள் அமைக்கும் வழிமுறையை தமிழ்நாடு வேளாண்துறை வெளியிட்டுள்ளது. உழவர்கள் சாலைகளில் பயிர்களை உலர்த்துவதை தடுக்கும் வகையிலும், பயிர்களின் தரத்தை உயர்த்தும் வகையிலும் சூரியக்கூடார உலர்த்தி அமைக்க வேளாண்துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது.

சூரியக்கூடார உலர்த்திகள் அமைக்க (400 முதல் 1000 அடி வரை) சிறு, குறு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 60 சதவீதமும், பிற விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், சர்வதேச செஸ் கூட்டமைப்பால் (FIDE) மதிப்பிடப்பட்ட செஸ் போட்டியை நடத்திய நிறுவனம் எது?**

**அ. ஐஐடி மெட்ராஸ் ✓**

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி தில்லி

ஈ. ஐஐடி ஹைதராபாத்

★ 2024 மார்ச்.30 முதல் 31 வரை சென்னையில் 6ஆவது சாஸ்த்ரா ரேபிட் FIDE செஸ் போட்டியை ஐஐடி மெட்ராஸ் நடத்துகிறது. ஆண்டுதோறும் ஓபன் ரேபிட் ரேட்டிங் செஸ் போட்டியை நடத்தும் இந்தியாவின் ஒரே ஐஐடி நிறுவனம் இதுவாகும். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளைச் சேர்ந்த சர்வதேச வீரர்களுடன் ஐஐடி மெட்ராஸைச் சார்ந்த 35–க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இப்போட்டியில் இணைந்துள்ளனர்.


**2. 'ஸ்டார்கேட்' என்றால் என்ன?**

அ. கருந்துளை

ஆ. வானிலை கண்காணிப்பு செயற்கைக்கோள்

**இ. AI அடிப்படையிலான மீக்கணினி ✓**

ஈ. அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்




★ மைக்ரோசாப்ட் மற்றும் OpenAI ஆகியவை கூட்டாக இணைந்து $100 பில்லியன் டாலர் மதிப்பில், 'ஸ்டார்கேட்' என்ற AI மீக்கணினியை உருவாக்குகின்றன. 2028இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ள இத்திட்டம், 2022இல் OpenAIஇன் AI மேம்படுத்தலைப் பின்பற்றி செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் தற்போதுள்ள தரவு மையங்களின் திறன்களை 100 மடங்கு விஞ்சிவிடும். ஐந்து கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்படும் இதன் ஒரு சிறிய வடிவம் 2026ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ளது.

**3. அண்மையில், 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச கலாச்சார விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?**

அ. ரிஸ்வானா ஹசன்

**ஆ. மீனா சரண்டா ✓**

இ. நஜ்லா மங்கூஷ்

ஈ. தைஃப் சமி முகமது



★ தில்லி பல்கலைக்கழகத்தின் காளிந்தி கல்லூரியின் முதலமைச்சர் பேராசிரியர் மீனா சரண்டா, கல்வி மற்றும் சமூக சேவைகளில் அவரது சிறந்த பங்களிப்புகளுக்காக, 2024ஆம் ஆண்டுக்கான, 'சர்வதேச கலாச்சார விருதை' பெற்றார். 2024 மார்ச்.30 அன்று இந்திய சர்வதேச மையத்தில் வைத்து அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**4. அண்மையில் கடற்கொள்ளையர்களிடம் இருந்து இந்திய கடற்படையால் மீட்கப்பட்ட ஈரானிய மீன்பிடிக்கப்பலின் பெயர் என்ன?**

அ. பயந்தோர்

ஆ. கைவன்

இ. சஹந்த்

**ஈ. அல் கம்பார் ✓**



★ இந்தியப் பெருங்கடலில் ஆயுதமேந்திய கடற்கொள்ளையர்களிடமிருந்து ஆபரேஷன் சங்கல்ப் நடவடிக்கையின்கீழ் ஈரானிய மீன்பிடிக்கப்பலான அல் கம்பார் மற்றும் அதன் 23 பாகிஸ்தான் பணியாளர்களை இந்திய கடற்படை மீட்டது.

★ INS சுமேதா மற்றும் INS திரிசூல் ஆகியவை சோகோத்ராவிலிருந்து தென்மேற்கே 90 கடல் மைல் தொலைவில், இந்த ஆபரேஷனை நடத்தின. ஏடன் வளைகுடாவிற்கு அருகிலுள்ள சோகோத்ரா தீவுக்கூட்டம் யேமனின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியாகும்.

### 5. *Cnemaspis vangoghi* சார்ந்த இனம் எது?

**அ. பல்லி** ✓

ஆ. சிலந்தி

இ. மீன்

ஈ. தவளை



★ இந்தியாவிலுள்ள தாக்ரே வனவிலங்கு அறக்கட்டளையைச் சேர்ந்த அறிவியலாளர்கள், தமிழ்நாட்டின் தென்மேற்குத் தொடர்ச்சி மலையில் *Cnemaspis vangoghi* என்றவொரு புதிய பல்லி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். வின்சென்ட் வான் கோக்கின் பெயரால் அழைக்கப்படும் இது, 3.4 செ.மீ நீள உருவ அமைப்பைக் கொண்டுள்ளது.

★ பாறை வாழ்விடங்களை விரும்பும் இதனை, கட்டிடங்கள் மற்றும் மரங்களிலும் காணலாம். *Cnemaspis vangoghi* உடன், *Cnemaspis sathuragiriensis* என்ற மற்றொரு உயிரினமும் அதே பகுதியில் அடையாளம் காணப்பட்டது. இந்த இரண்டு இனங்களும் திருவில்லிப்புத்தூர்–மேகமலை புலிகள் காப்பகத்தின் தாழ்நிலக்காடுகளில் வாழ்கின்றன.

### 6. சுற்றுச்சூழல்–நிவாஸ் சம்ஹிதா (ENS) என்ற குடியிருப்பு ஆற்றல் பாதுகாப்பு கட்டிடக் குறியீட்டை உருவாக்கிய அமைப்பு எது?

அ. இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (IREDA

ஆ. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR)

**இ. எரிசக்தித் திறன் பணியகம் (BEE)** ✓

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை

★ சுற்றுச்சூழல் நிவாஸ் சம்ஹிதா (Eco–Niwas Samhita) கட்டிடங்களில் வெப்பப்பரிமாற்றத்தை அளவிடும், Residential Envelope Transmittance Value (RETV) அறிமுகப்படுத்தியுள்ளது. இது எரிசக்தித் திறன் பாதுகாப்பு பணியகத்தின் (BEE) ஒரு குடியிருப்பு ஆற்றல் பாதுகாப்பு கட்டிடக் குறியீடு ஆகும்; இது ஆற்றல் திறன்கொண்ட குடியிருப்புகளுக்கான தரநிலைகளை நிறுவுகிறது. ENS 2018 (பகுதி 1) கூட்டு வடிவமைப்புகளில் கவனம் செலுத்துகிறது; அதே நேரத்தில் ENS பகுதி–2 (ENS 2021) குறியீடு இணக்கம் மற்றும் மின்–வேதி அமைப்புகளில் கவனம் செலுத்துகிறது. குறைந்த RETV மதிப்புகள் குளிர்ச்சியான உட்புற சூழல்களுக்கு வழிவகுப்பதோடு ஆற்றல் பயன்பாட்டையும் குறைக்கிறது.

### 7. கோடியக்கரை வனவிலங்கு சரணாலயமானது தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

அ. தஞ்சாவூர்

**ஆ. நாகப்பட்டினம்** ✓

இ. சிவகங்கை

ஈ. புதுக்கோட்டை



★ தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டத்தின் கோடியக்கரையில் அமைந்துள்ள கோடியக்கரை வனவிலங்கு சரணாலயத்தில் வனத்துறை ஆண்டுதோறும் வனவிலங்குகள் கணக்கெடுப்பினை நடத்தி வருகிறது. காலிமர் முனை என்றும் அழைக்கப்படுகிற இது, திருமறைக்காட்டிற்கு தெற்கே சுமார் 9 கிமீ தொலைவில் சோழமண்டலக் கடற்கரையில் அமைந்துள்ளது.

★ சோழர் காலத்தைச் சேர்ந்த திருக்கோடி குழகர் திருக்கோவில் மற்றும் 2004ஆம் ஆண்டு இந்தியப்பெருங்கடல் கடற்கோளின்போது அழிக்கப்பட்ட சோழர்களின் கலங்கரை விளக்கம்போன்ற அமைப்புகளுடன் இந்த நிலப்பகுதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இங்குள்ள காடுகள் கிழக்குத் தக்காண வறண்ட பசுமைமாறா காடுகளின் எச்சங்களாகும்.


### 8. அண்மையில், 'கமனே' என்ற வெப்பமண்டல சூறாவளியால் தாக்கப்பட்ட கிழக்கு ஆப்பிரிக்க நாடு எது?

**அ. மடகாஸ்கர்** ✓

ஆ. தான்சானியா

இ. கென்யா

ஈ. மொரிஷியஸ்



★ மடகாஸ்கரை தாக்கிய 'கமனே' என்ற வெப்பமண்டல சூறாவளியின் காரணமாக 18 உயிர்கள் பறிபோயின மற்றும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர் என்று அந்நாட்டின் பேரிடர் மேலாண்மை அலுவலகம் தெரிவித்துள்ளது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய தீவான மடகாஸ்கர், இந்தியப்பெருங்கடலில் 592,800 சகிமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. அதன் நிலப்பகுதி கிழக்குக் கடற்கரைப் பகுதி, மத்திய பீடபூமி மற்றும் மேற்கு தாழ்வான பீடபூமிகள் என 3 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

### 9. P-800 ஆனிக்ஸ் என்ற ஏவுகணையை உருவாக்கியுள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. ஜப்பான்

**இ. ரஷ்யா** ✓

ஈ. இந்தியா



★ ரஷ்யாவின் ஆனிக்ஸ் என்ற மீயொலி சீரவேக ஏவுகணையான, 'P-800 ஆனிக்ஸ்' அல்லது 'ஆனிக்ஸ்' என அழைக்கப்படுகிற இது, ஒரு புதிய இலக்கு தேடியுடன் கொடியதாக மாறவுள்ளது. மணிக்கு 3,000 கிமீட்டருக்குமேல் வேகத்தில் பயணிக்கும் இதனை இடைமறித்தல் என்பது மிகவும் கடினமான செயலாகும். தாழ்வான உயரத்தில் இயங்கும் இது, மறைந்திருந்து தாக்கும் கப்பல்கள் மற்றும் தரைப்பொருட்களை இலக்காகக் கொண்டு செயல்படும். 300 கிமீ வரையிலான தூர வரம்பை இது கொண்டுள்ளத.

### 10. 'INDRA App' என்றால் என்ன?

அ. விண்வெளி வீரர்கள் செயல்பாடுகளை மேற்கொள்ள உதவும் பன்னோக்கு செயலி

**ஆ. வானிலை தொடர்பான தகவல்களையும் முன்னறிவிப்புகளையும் பரப்பும் செயலி** ✓

இ. மாநிலங்களுக்கு டிஜிட்டல் நிதித்தரவை வழங்கும் செயலி

ஈ. அங்கன்வாடி பணியாளர்கள் தொடர்பான செயலி




★ உலக வானிலை நாள் கொண்டாட்டத்தின்போது, கடல்சார் பெருங்கடலியல் & வானிலை ஆய்வுப்பள்ளி மற்றும் தெற்கு கடற்படை கட்டளை மையத்தில் உள்ள இந்திய கடற்படை வானிலை ஆய்வு மையம் ஆகியவை இணைந்து வானிலை தொடர்பான தகவல்கள் மற்றும் முன்கணிப்புகளை அறிவிக்கின்ற INDRA செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. BISAG மற்றும் இந்திய கடற்படையால் உருவாக்கப்பட்ட இந்தச் செயலி விரைவான முடிவெடுக்க உதவுகிறது.

### 11. அண்மையில், செயற்கை நுண்ணறிவு துறைக்கு ஓர் ஆலோசனையை வழங்கிய அமைச்சகம் எது?

அ. தகவல் தொடர்பு அமைச்சகம்

**ஆ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்** ✓

இ. தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

ஈ. சட்டம் & நீதி அமைச்சகம்

★ மின்னணுவியல் & தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது AI தொழிற்துறைக்கு குறிப்பாக கூகுள் போன்ற முக்கிய தளங்களை குறிவைத்து ஓர் ஆலோசனையை வெளியிட்டுள்ளது. அந்த ஆலோசனையில் குறிப்பிட்ட அத்தளங்கள் 15 நாட்களுக்குள் செயல் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. AI மாதிரிகளைச் சோதிப்பதற்கு அனுமதி வேண்டுதல், சோதனைக்குட்பட்ட அல்லது நம்பத்தகாத AIக்கு வெளிப்படையான ஒப்புதல் பெறுதல் போன்றவை அந்த முக்கிய ஆலோசனைகளில் அடங்கும்.

### 12. மரவகண்டி அணை அமைந்துள்ள மாநிலம் எது?

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. தெலுங்கானா



★ மீன்பிடித்தல் நிறுத்தப்பட்டதை அடுத்து, நீலகிரி மாவட்டம் மரவகண்டி அணைக்கு வலசைப்பறவைகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தின் உதகமண்டலத்திலிருந்து 35 கிமீ தொலைவில் அமைந்துள்ள இது, சீகூர் ஆற்றின் கிளையாறான அரவரிகல்லா ஓடையின்மீது 1951ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த அணை மோயாறு நீர்மின்நிலையத்திற்கு முக்கிய நீராதாரமாக செயல்படுகிறது. இது புலம்பெயர் காலங்களில் பல்வேறு பறவையினங்களை விருப்ப இடமாக மாறுகிறது.

### 13. கீழ்காணும் எந்த இரு நாடுகளுக்கு இடையே கச்சத்தீவு அமைந்துள்ளது?

அ. இந்தியா மற்றும் வங்காளதேசம்

ஆ. இந்தியா மற்றும் மியான்மர்

**இ. இந்தியா மற்றும் இலங்கை** ✓

ஈ. ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ்




★ தமிழ்நாட்டின் பாரதிய ஜனதா கட்சித்தலைவர் K அண்ணாமலையால் RTI விண்ணப்பத்தின்மூலம் பெறப்பட்ட ஆவணங்கள், இலங்கையுடனான கச்சத்தீவு பிரச்சனையில் இந்தியாவின் முரண்பாடான அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றது. பாக் நீரிணையில் உள்ள சிறிய தீவான கச்சத்தீவு நிரந்தர குடியிருப்பும் நன்னீர் ஆதாரமும் இல்லாத ஒரு தீவாகும். வரலாற்று ரீதியாக இந்தியா மற்றும் இலங்கையால் நிர்வகிக்கப்பட்டு வந்த அந்தத் தீவின் எல்லையானது கடந்த 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்மூலம் நிர்ணயம் செய்யப்பட்டது.

### 14. 2024 – உத்கல நாளுடன் தொடர்புடைய மாநிலம் எது?

**அ. ஒடிஸா** ✓

ஆ. பீகார்

இ. ஜார்கண்ட்

ஈ. தெலுங்கானா



★ ஒடிஸா நாள் என்றும் அழைக்கப்படும் உத்கல நாள், 1936 ஏப்ரல்.01 அன்று ஒடிஸா உருவானதை நினைவுகூரும் விதமாக கொண்டாடப்படுகிறது. இது மாநிலத்தின் கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தை குறிக்கிறது; இது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் தனி அடையாளத்திற்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் முடிவைக் குறிக்கிறது. ஆண்டுதோறும் கொண்டாடப்படும் இந்த நாள், அலங்காரங்கள் மற்றும் கலாசார நிகழ்வுகள் உள்ளிட்ட விழாக்கள் மூலம் ஒடிஸாவின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்துகிறது.

**15. அண்மையில், குளோபல் ஜியோபார்க்ஸ் வலையமைப்பில் சேர்க்கப்பட்ட தளங்களின் எண்ணிக்கை என்ன?**

அ. 16

ஆ. 17

**இ. 18** ✓

ஈ. 19

★ 2024 மார்ச்சில், UNESCOஇன் நிர்வாக வாரியம் குளோபல் ஜியோபார்க்ஸ் வலையமைப்பில் 18 புதிய தளங்களைச் சேர்த்தது. இதன்மூலம் மொத்த தளங்களின் எண்ணிக்கை 213ஆக (48 நாடுகள்) ஆனது. இந்தப் புதிய தளங்கள் பெல்ஜியம், நெதர்லாந்து, பிரேசில், சீனா, குரோஷியா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், கிரீஸ், ஹங்கேரி, போலந்து, போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன. குளோபல் ஜியோபார்க்ஸ் என்பது பாதுகாப்பு, கல்வி மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றின் முழுமையான கருத்துடன் நிர்வகிக்கப்படுகின்ற ஒற்றை புவியியல் பகுதிகளாகும்.

**16. அண்மையில், நாட்டின் முதல் முப்படை பொது பாதுகாப்பு நிலையமாக ஆயுதப்படைகளால் நிறுவப்பட்ட நகரம் எது?**



அ. சென்னை

**ஆ. மும்பை** ✓

இ. வேலூர்

ஈ. பராக்பூர்

★ ராணுவம், கடற்படை மற்றும் இந்திய வான்படை ஆகியவற்றுக்கான இந்தியாவின் முதல் முப்படை பொது பாதுகாப்பு நிலையமாக மும்பையை மாற்ற ஆயுதப்படைகள் திட்டமிட்டுள்ளன. இந்தக் கூட்டிணைவு என்பது ஒருங்கிணைந்த கட்டளைகளை வழங்குவதற்கும் சேவைகளுக்கு இடையே கூட்டுத்தன்மையை வளர்ப்பதற்கும் நோக்கமாகக் கொண்டுள்ளது. போருக்கான வளங்களை மேம்படுத்த இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை திறன்களை ஒருங்கிணைப்பதையும் இது உள்ளடக்கியுள்ளது.

**17. அண்மையில், அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள ஹார்ட் ராக் அரங்கில் நடந்த போட்டியில், 2024 – மியாமி ஓபன் ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்றவர்கள் யார்?**



அ. கார்லோஸ் அல்கராஸ் மற்றும் சின்னர் ஜானிக்

**ஆ. ரோகன் போபண்ணா மற்றும் மேத்யூ எப்டன்** ✓

இ. டேனியல் மெட்வெடேவ் மற்றும் சி. நோரி

ஈ. இவான் டோடிக் மற்றும் ஆஸ்டின் கிராஜிசெக்

★ இந்திய டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணா, ஆஸ்திரேலிய வீரர் மேத்யூ எப்டனுடன், 2024 – மியாமி ஓபன் ஆடவர் இரட்டையர் பட்டத்தை 2024 மார்ச்.31 அன்று புளோரிடாவின் ஹார்ட் ராக் அரங்கில் வென்றார். அவர்கள் இவான் டோடிக் மற்றும் ஆஸ்டின் கிராஜிசெக் ஆகியோரை முறியடித்து, அப்பட்டத்தை வென்று ATP உலக நம்பர்.01 தரவரிசையை மீட்டெடுத்தனர். ரோகன் போபண்ணா, தனது சொந்த சாதனையை முறியடித்து, ATP 1000 மாஸ்டர்ஸ் சாம்பியன்ஷிப்பை வென்ற மிக வயதான வீரர் ஆனார்.

**18. அண்மையில், 2023ஆம் ஆண்டுக்கான கிளீன் எனர்ஜி டிரான்சிஷன்ஸ் புரோகிராம் ஆண்டறிக்கையை வெளியிட்ட அரசு நிறுவனம் எது?**

**அ. பன்னாட்டு எரிசக்தி முகமை (IEA)** ✓

ஆ. எரிசக்தித் திறன் பணியகம் (BEE)

இ. பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம்

ஈ. மின்சார அமைச்சகம்

★ பன்னாட்டு எரிசக்தி முகமை (IEA) அண்மையில் தனது 2023ஆம் ஆண்டுக்கான தூய ஆற்றல் மாற்றம் திட்ட அறிக்கையை வெளியிட்டது. 2017இல் நிறுவப்பட்ட இத்திட்டம், பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் ஐநாஇன் நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் (SDGs) இணைந்து, நிகர–சுழிய ஆற்றல் அமைப்பை நோக்கிய உலகளாவிய முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எண்ணெய் நெருக்கடிக்கு மத்தியில் 1974இல் நிறுவப்பட்ட IEA, OECD கட்டமைப்பிற்குள் செயல்படுகிறது. உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் தொழிற்துறைகளுடன் இணைந்து இது செயல்படுகிறது. 31 உறுப்புநாடுகளுடன், பாதுகாப்பான, நிலையான ஆற்றல் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இது கவனம் செலுத்துகிறது.

**19. சமீபத்தில், ஆறாவது ஆண்டு ஹாக்கி இந்தியா விருதுகளில் முறையே, ஆண்டின் சிறந்த வீராங்கனை மற்றும் சிறந்த வீரர் எனத் தெரிவு செய்யப்பட்டவர்கள் யார்?**

அ. குர்ஜித் கௌர் மற்றும் மன்பிரீத் சிங்

ஆ. இராணி இராம்பால் மற்றும் விவேக் பிரசாத்

**இ. சலிமா டெடே மற்றும் ஹர்திக் சிங்** ✓

ஈ. சவிதா புனியா மற்றும் கிரிஷன் பதக்



★ 2023 – ஹாக்கி இந்தியா விருதுகள் வழங்கும் நிகழ்வு 2024 மார்ச்.31 அன்று புது தில்லியில் நடைபெற்றது. சலிமா டெடே மற்றும் ஹர்திக் சிங் ஆகியோர் முறையே ஆண்டின் சிறந்த வீராங்கனை மற்றும் ஆண்டின் சிறந்த வீரர் எனக் கௌரவிக்கப்பட்டனர். கடந்த 2014இல் தொடங்கப்பட்ட இந்த விருதுகள் இந்தியாவின் தலைசிறந்த ஹாக்கி திறமைகளை கௌரவிக்கிறது. பஞ்சாப்பைச் சேர்ந்த துணைக் கேப்டன் ஹர்திக் சிங், FIH ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் சிறந்த நடுகள வீரர் ஆகிய விருதுகளை வென்றார். ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சலிமா டெடே, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தனது சாதனைகளுக்காக, AHF வளர்ந்துவரும் ஆண்டின் சிறந்த வீராங்கனை என கௌரவிக்கப்பட்டார்.

**20. அண்மையில், 2023-24 நிதியாண்டில் நாட்டின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 30 சதவீத பங்களிப்பை அளித்து, மின்னணுப் பொருட்களின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக உருவெடுத்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கர்நாடகா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. தெலுங்கானா




★ 2023–24 நிதியாண்டில் நாட்டின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 30 சதவீத பங்களிப்பை அளித்து, இந்தியாவின் மிகப்பெரிய மின்னணுப்பொருட்கள் ஏற்றுமதியாளராக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. 2023 ஏப்ரல் முதல் 2024 ஜனவரி வரை, தமிழ்நாட்டின் மின்னணுப்பொருட்கள் ஏற்றுமதி $7.37 பில்லியனாக உள்ளது; இது அதே காலகட்டத்தில் இந்தியாவின் மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களின் மொத்த ஏற்றுமதியில் 32.52% ($22.65 பில்லியன் மதிப்பிலானது) ஆகும். வரலாற்று ரீதியாக, 2021–22 நிதியாண்டு வரை இத்துறையில் உத்தர பிரதேசம் மற்றும் கர்நாடகாவை ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த நிலையிலேயே தமிழ்நாடு இருந்து வந்தது. ஆனால், சமீப ஆண்டுகளில், தமிழ்நாடு இந்தத் துறையில் சீரான வளர்ச்சியை சந்தித்து வருகிறது.

**21. நீர்மட்டம் காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற வைகை, மேட்டூர் மற்றும் பாபநாசம் அணைகள் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. மத்திய பிரதேசம்

ஈ. கோவா



★ வைகை, மேட்டூர், பாபநாசம் உள்ளிட்ட பல்வேறு அணைகளின் நீர்மட்டம் குறித்து அண்மைச் செய்திகள் எடுத்துக் கூறின. தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணை மதுரையின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்கிறது. சேலம் மாவட்டத்தில் பாய்ந்தோடும் காவிரியாற்றில் உள்ள மேட்டூர் அணை, கர்நாடகாவில் இருந்து வரும் நீர்வரத்துக்களுடன் இந்தியாவின் மிகப்பெரிய அணையாக விளங்கிவருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம் அணையானது சிவத்தலத்துடன் இணைந்து புனிதமாக கருதப்படுகிறது. இந்த அணை நெல்லை (திருநெல்வேலி) மற்றும் தூத்துக்குடி கழனிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது.

**22. சமயவிளக்கு விழாவுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ✓**

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. தெலுங்கானா



★ சமயவிளக்கு அல்லது கோட்டங்குளங்கரா திருவிழா என்பது கேரள மாநிலத்தில் அமைந்துள்ள பகவதி தேவி திருக் கோவிலில் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இந்த விழாவின்போது ஆண்கள் பெண்களின் உடைகளை அணிந்துகொண்டு, விளக்குகளை ஏந்தி ஊர்வலமாகச்செல்கின்றனர். தேவியின் மீதிருக்கும் பக்தியை உணர்த்தும் இந்தச் சமயவிளக்கை ஏந்தி பக்தர்கள் திருக்கோவிலை வலம்வருவார்கள். பகல்நேர சடங்கான காக்காவிளக்கு சடங்கிற்காக 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெண் வேடமிட்டனர்.

**23. அண்மையில், நைஜருக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. பங்கஜ் சரண்

ஆ. P R சக்ரவர்த்தி

இ. விக்ரம் மிஸ்ரி

**ஈ. சீதா ராம் மீனா ✓**



★ 2008ஆம் ஆண்டுத் தொகுதியைச் சார்ந்த IFS அதிகாரியான சீதா ராம் மீனா, நைஜர் குடியரசுக்கான இந்தியாவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் வெளியுறவு அமைச்சகத்தின் பிரதிச் செயலாளராக சீதா ராம் மீனா பணியாற்றி வந்தரர். சீதா ராம் மீனாவின் அரசியல் ரீதியான அனுபவமும் நிபுணத்துவமும் அவரை இந்தப் புதிய பதவியில் சிறப்பாக நிலைநிறுத்துகிறது; இது உலக அரங்கில் நைஜருடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**24. 2024 – உலக மதியிறுக்கம் (ஆட்டிசம்) குறித்த விழிப்புணர்வு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Empowering Autistic Voices ✓**

ஆ. The Transition to Adulthood

இ. Inclusive Quality Education for All

ஈ. Assistive Technologies, Active Participation




★ உலக மதியிறுக்கம் குறித்த விழிப்புணர்வு நாளானது ஆண்டுதோறும் ஏப்.02ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது. இது மதியிறுக்கங்கொண்ட நபர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அவர்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் வாதிடுகிறது. கடந்த 2007ஆம் ஆண்டு ஐநா தீர்மானத்தால் நிறுவப்பட்ட இந்த நாள், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது மற்றும் உள்ளடக்கிய செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது. "Empowering Autistic Voices" என்பது 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கனடாவில் காலை உணவுத் திட்டம்.**

தமிழ்நாடு அரசின் காலை உணவுத்திட்டம், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை ஈர்த்துள்ள நிலையில், இந்திய நாட்டைக் கடந்து வெளிநாடுகளிலும் அந்தத் திட்டம் வரவேற்பைப் பெற்றுள்ளது. கனடா நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது வலைதளப்பக்கத்தில் இத்திட்டம் குறித்து கூறியுள்ளார். கனடா நாட்டில் பள்ளிக்குழந்தைகளுக்கு தேசிய உணவுத்திட்டத்தை அறிமுகம் செய்து வைக்கவுள்ளதாக அவர் பதிவிட்டுள்ளார்.

---

**2. தேர்தல் குறித்த தகவல்களை சரிபார்க்க புதிய வலைதளம்.**

மக்களவைத் தேர்தல் குறித்து பரவும் தவறான தகவல்களைச் சரிபார்க்க, 'மித் வெர்சஸ் ரியாலிட்டி ரெஜிஸ்டர்' எனும் புதிய வலைதளத்தை இந்திய தேர்தல் ஆணையம் தொடங்கியது. நாட்டின் 18ஆவது மக்களவைத் தேர்தல் வரும் 19ஆம் தேதி தொடங்கி ஏழு கட்டங்களாக நடைபெறுகிறது.

---

**3. 2023–24 நிதியாண்டில் ஜிஎஸ்டி வசூல் ₹20.14 இலட்சம் கோடி: 11.7% வளர்ச்சி.**

2023 ஏப்ரல் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரையிலான நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக ₹20.14 இலட்சம் கோடி வசூலாகியுள்ளது. இது முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் 11.7 சதவீதம் கூடுதல் வசூலாகும். கடந்த 2023 ஏப்ரல் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவில் ₹1.87 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. இதுவே அதிகபட்ச ஜிஎஸ்டி வசூல் தொகையாக உள்ளது.

---

**4. தணிக்கை தலைமை இயக்குநராக G K அருண் சுந்தர் தயாளன் நியமனம்.**

நிதித்துறை கூடுதல் செயலராக உள்ள G K அருண் சுந்தர் தயாளனுக்கு, தணிக்கை தலைமை இயக்குநர் பொறுப்பு முழு கூடுதல் பொறுப்பாக அளிக்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும், கூட்டுறவு, பால் கூட்டுறவு தணிக்கை, உள்ளாட்சி நிதி தணிக்கை, இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ்நாடு அரசு நிறுவனங்களின் தணிக்கைத் துறைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட மாநில அரசின் சார்பில் தணிக்கை தலைமை இயக்குநர் பதவியிடம் கடந்த 2022ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

---

**5. மிக்ஜம் புயலால் பாதிக்கப்பட்ட 24 இலட்சம் குடும்பங்களுக்கு ₹1,487 கோடி நிவாரணம்: உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தகவல்.**

மிக்ஜம் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தலா ₹6,000 நிவாரண உதவி வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டிருந்தது. அது சுமார் 24 இலட்சம் குடும்பங்களுக்கு ₹1,487 கோடி நிவாரணத் தொகை வழங்கபட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தகவல் தெரிவித்துள்ளது.

---

**6. ரெயில் நிலையங்களில் UPI மூலம் பயணச்சீட்டு பெறலாம்.**

நாட்டில் உள்ள அனைத்து ரெயில் நிலையங்களிலும் UPI மூலம் பயணச்சீட்டு பெறும் வசதியை இந்திய ரெயில்வே நிர்வாகம் அறிமுகம் செய்துள்ளது. இவ்வசதி ஏப்ரல்.01 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன்மூலம் முன்பதிவில்லா பயணச்சீட்டுகளை UPI மூலம் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

**7. இந்திய பொருளாதாரம் 7.5% வளர்ச்சி: உலக வங்கி கணிப்பு.**

இந்திய பொருளாதார வளர்ச்சி 2023–24ஆம் நிதியாண்டில் 7.5 சதவீதமாக இருக்கக்கூடும் என்று உலக வங்கி கணித்துள்ளது. நடப்பு நிதியாண்டான 2024–25ஆம் ஆண்டில், தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சி 6.1%ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா பெரும் பங்கு வகிக்கிறது. இந்நிலையில், 2023–24ஆம் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2024–25ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**8. சி–விஜில் செயலியில் இதுவரை 1,694 புகார்கள்: கரூர் முதலிடம்.**

தேர்தல் நடத்தை விதிகளை மீறுவது தொடர்பாக புகார்களைத் தெரிவிப்பதில் கரூர் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் இருந்து எந்தப் புகாரும் வரவில்லை என்று மாநிலத் தேர்தல் ஆணையத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

---

**9. கோடை காலத்துக்கு ஏற்ற கரும்பு இரகங்கள்: வேளாண் துறை அறிவுறுத்தல்.**

கோடைகாலத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற கரும்பு வகைகளை தேர்ந்தெடுத்து பயிரிடுமாறு விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, எல்லா பட்டங்களுக்கும் ஏற்றதும், செவ்வழுகல் நோயை மிதமாக எதிர்ப்பதுமான, 'கோ 86032' என்ற இரகமும், வறட்சியை எதிர்த்து அதிக மகசூல்தரும், 'டிஎன்ஏயு SC SI 8' ஆகிய இரகமும் பயிரிடலாம். அதேபோல், தரமான சர்க்கரையை தருவதும், வறட்சியை தாங்கக்கூடியதுமான, 'கோ 0212' என்ற கரும்பு இரகத்தையும், 'கோ V09356' என்ற கரும்பு இரகத்தையும் ஏப்ரல்–மே மாதங்களில் விவசாயிகள் பயிரிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், 2023-24இல் சரக்கு கையாளுவதில் முன்னணி துறைமுகமாக உருவான துறைமுகம் எது?**



அ. காரைக்கால் துறைமுகம்

**ஆ. பாரதீப் துறைமுகம் ✓**

இ. காண்ட்லா துறைமுகம்

ஈ. கொச்சி துறைமுகம்

★ ஒடிஸா மாநிலத்தில் உள்ள பாரதீப் துறைமுக ஆணையம், 2023-24ஆம் ஆண்டில், இந்தியாவின் சிறந்த சரக்கு கையாளும் பெரிய துறைமுகமாக காண்ட்லாவில் உள்ள தீனதயாள் துறைமுக ஆணையத்தை விஞ்சியது. 145.38 MMT சரக்குகளைக் கையாண்டு, முந்தைய ஆண்டைவிட 7.4% வளர்ச்சியை அது பதிவுசெய்தது. இது 289 MMTஐ கையாளும் திறன்கொண்டதாகும். கடந்த 1962ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது, 1966இல் இந்தியாவின் 8ஆவது மிகப்பெரிய துறைமுகமாக ஆனது. தற்போது துறைமுக அமைச்சகத்தின் கீழ் இது செயல்பட்டு வருகிறது.

**2. ஜூடித் சுமின்வா துலுகா என்பவர் கீழ்காணும் எந்த நாட்டின் முதல் பெண் பிரதமரானார்?**



அ. அங்கோலா

ஆ. ஜாம்பியா

**இ. காங்கோ ✓**

ஈ. ருவாண்டா

★ ஜூடித் சுமின்வா துலுகா காங்கோ மக்களாட்சிக் குடியரசின் முதல் பெண் பிரதமரானார். இவருக்குமுன் ஜீன்-மைக்கேல் சாமா லுகோண்டே பிரதமராக இருந்தார். அதிபர் பெலிக்ஸ் சிசெகெடியின் இந்நியமனம் அவரது பிரச்சார வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. முன்னாள் திட்டமிடல் அமைச்சராக இருந்த ஜூடித் சுமின்வா துலுகா, ஜீன்-மைக்கேல் சாமா லுகோண்டே பதவி விலகியபின் மூன்று ஆண்டுகளாக அப்பதவியில் இருந்தார்.

**3. அண்மையில், 2024 – SKOCH ESG விருது வென்ற REC லிட் உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

**அ. மின்சார அமைச்சகம் ✓**

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. விவசாய அமைச்சகம்

ஈ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

आरईसी REC
असीमित ऊर्जा, अनन्त संभावनाएं
Endless energy. Infinite possibilities.

★ மத்திய மின்சார அமைச்சகத்தின்கீழ் உள்ள மத்திய மகாரத்னா பொதுத்துறை நிறுவனமும், வங்கிசாராத நிதிக்கழக முன்னணி நிறுவனமுமான ஊரக மின்மய கழகம், 'புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிதிப்பிரிவில்' ஸ்கோச் ESG விருது – 2024ஐ வென்றுள்ளது. இந்த விருது நிலையான நிதியுதவிக்கான ஊரக மின்மய கழகத்தின் (REC) அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. SKOCH ESG விருதுகள் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை (ESG) நடைமுறைகளில் சிறந்த செயல்திறனை நிரூபிக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கின்றன.

**4. ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சை முறையுடன் தொடர்புடைய நோய் எது?**

அ. டெங்கு

**ஆ. HIV/AIDS ✓**

இ. காசநோய்

ஈ. மலேரியா



★ இலவச ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சைமுறை முன்னெடுப்பின் 20 ஆண்டுகள் நிறைவு HIV/AIDS சிகிச்சையில் குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது. 2004 ஏப்ரல்.01இல் தொடங்கப்பட்ட இது, HIV (PLHIV) உடன் வாழும் நபர்களுக்கு சிகிச்சையளிக்கிறது. இம்முன்னெடுப்பு HIV நகலெடுப்பை அடக்குவதற்கு மருந்துகளின் கலவையைப் பயன்படுத்துகிறது; அதன் காரணமாக உலகளவில் HIV பரவல் மற்றும் புதிய தொற்றுநோய்களைக் குறைக்கிறது. 2023ஆம் ஆண்டில், 15–49 வயதுடையவர்களில் HIV பாதிப்பு 0.20%ஆகக் குறைந்தது. PLHIVஇல் இந்தியாவின் பங்கு 6.3%ஆகக் குறைந்துள்ளது.

**5. ஷிக்மோ பண்டிகை கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ. கர்நாடகா

ஆ. மத்திய பிரதேசம்

இ. ஒடிசா

**ஈ. கோவா ✓**



★ கொங்கன் பாரம்பரியத்தைக் கொண்டாடும் ஷிக்மோ திருவிழாவைத் தொடங்கும் விதமாக, கோவா மாநிலத்தில் வசந்த காலம் தொடங்கியுள்ளது. 2024 மார்ச்.26 முதல் ஏப்.08 வரை நீடிக்கும் இது, வசந்த காலத்தின் வெப்பத்தை வரவேற்கும் வகையிலும் விடைபெறுகிற குளிர்காலத்திற்கு பிரியாவிடைதரு விழாவாகவும் உள்ளது. ஹோலியின் உற்சாகம் மற்றும் திருவிழா பரபரப்பு ஆகியவற்றின் கலவையான ஷிக்மோ, நாட்டுப்புற நிகழ்ச்சிகள் மற்றும் புராண நிகழ்வுகளுடன் பிரமாண்டமாக கொண்டாடப்படுகிறது.

**6. 2023–24இல் 56ஆவது தேசிய கோ–கோ சாம்பியன்ஷிப்பை வென்ற மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. கர்நாடகா

**இ. மகாராஷ்டிரா ✓**

ஈ. மத்திய பிரதேசம்




★ தில்லியின் கர்னைல் சிங் அரங்கு மற்றும் இந்திராகாந்தி உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2023–24–க்கான 56ஆவது தேசிய கோ–கோ சாம்பியன்ஷிப் போட்டியின் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் மகாராஷ்டிர அணி ஆதிக்கம் செலுத்தியது. பரபரப்பான இறுதிப்போட்டியில் மகாராஷ்டிராவின் ஆண்கள் அணி இந்திய ரெயில்வே அணிக்கு எதிராக வென்றது. அதே சமயம் சம்பதா மௌரியா தலைமையிலான பெண்கள் அணி இந்திய விமான நிலைய ஆணைய அணியை வென்றது. இந்தச் சாம்பியன்ஷிப்பில் ஒவ்வொரு பிரிவிலும் 37 அணிகள் பங்கேற்றன; இந்திய கோ–கோ கூட்டமைப்பு இதனை ஏற்பாடு செய்தது.

**7. அண்மையில், டிஜிட்டல் இந்தியா டிரஸ்ட் ஏஜென்சியை (Digital India Trust Agency – DIGITA) இணையவெளிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய கருவியாக நிறுவிய நிறுவனம் எது?**

**அ. RBI ✓**

ஆ. CBI

இ. SEBI

ஈ. NABARD




★ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) இணையவெளிக் குற்றங்களை எதிர்கொள்வதற்காக டிஜிட்டல் இந்தியா டிரஸ்ட் ஏஜென்சியை (DIGITA) நிறுவ திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் செயலிக்கு சட்டப்பூர்வ அனுமதி பெறுவது மற்றும் சட்ட விரோதமான கடன்வழங்கும் செயலிகள் தடுக்கப்படும். எண்ம முறையில் கடன்வழங்கும் செயலிகளை சரிபார்ப்பது, ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வது DIGITAஇன் நோக்கமாகும்.

**8. அண்மையில், "A Decade of Documenting Migrant Deaths" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO)

ஆ. உலக வர்த்தக அமைப்பு (WTO)

இ. பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF)

**ஈ. புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM)** ✓

★ புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பானது 2014இல் தொடங்கப்பட்ட அதன் காணாமல்போன புலம்பெயர்ந்தோர் திட்டத்தின் பத்தாண்டுகால நிறைவைக் குறிக்கும் வகையில், "A Decade of Documenting Migrant Deaths" என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையில் மோதல் பகுதிகளிலிருந்து குடியேறியவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அடையாளம் தெரியாத முறையில் இறப்பைத் தழுவியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீரில் மூழ்குதல், விபத்துக்கள் மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவை இறப்புக்கான முக்கிய காரணங்களாக விவரிக்கப்பட்டுள்ளன.

**9. 'இணைவி எரிபொருள்' என்றால் என்ன?**

**அ. இயற்கை எரிவாயு** ✓



ஆ. நிலக்கரி

இ. வளியாற்றல்

ஈ. சூரிய ஆற்றல்

★ நிலக்கரி மற்றும் எண்ணெயிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவதில் நாடுகளுக்கு உதவும் காரணத்தால் இயற்கை எரிவாயு பொதுவாக 'இணைவி எரிபொருள்' என அழைக்கப்படுகிறது. சமுதாயம் தூய்மையான ஆற்றலை நோக்கி மாறும்போது, இயற்கை எரிவாயு போன்ற இணைவி எரிபொருட்கள் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இயற்கை எரிவாயு குறைவான பைங்குடில் (green house) வாயுக்களை வெளியிடும் அதே வேளையில், ஓர் இணைவி எரிபொருளாக அதன் பங்கு ஆற்றல் தற்சார்பை மேம்படுத்துதல் மற்றும் மாசுபாடு செலவுகளைக் குறைத்தல் போன்ற காரணிகளைச் சார்ந்துள்ளது.

**10. கொடைக்கானல் சூரிய வான் ஆய்வகமானது தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?**

அ. மதுரை



ஆ. தேனி

**இ. திண்டுக்கல்** ✓

ஈ. கரூர்

★ தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்திய வானியற்பியல் நிறுவனமான கொடைக்கானல் சூரிய வான் ஆய்வகம் அதன் 125வது ஆண்டு நிறைவை அண்மையில் கொண்டாடியது. சூரிய வானியற்பியலில் முன்னோடியாக விளங்கும் இது, கடந்த 1909ஆம் ஆண்டில் ஜான் எவர்ஷெட் கண்டுபிடித்த எவர்ஷெட் விளைவின் மூலம் புகழடைந்தது. பூமியின் வளிமண்டலத்தில் சூரியனின் தாக்கத்தைப் புரிந்துகொள்வது, சூரிய கிரகணங்கள், சூரியப்பொட்டுகள் மற்றும் சூரிய தீக்கொழுந்துகளை ஆராய்வது போன்றவற்றில் இதன் பணி அளப்பரியது.

**11. அண்மையில், 'ஒரு வாகனம் ஒரு ஃபாஸ்டேக்' திட்டத்தைத் தொடங்கிய அமைப்பு எது?**

அ. IREDA    ஆ. BHEL

**இ. NHAI** ✓    ஈ. NPCI

★ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) தேசிய நெடுஞ்சாலைகளில் 'FASTag'களை பயன்படுத்தி சுங்கக்கட்டணம் வசூலிப்பதற்காக, 'One Vehicle One FASTag' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஒவ்வொரு வாகனத்தையும் ஒரேயொரு FASTagஉடன் இணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் ஒரு வாகனத்திற்கு பல FASTag–கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அது எண்ணம் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை சுங்கக்கட்டண வசூல் திறனை மேம்படுத்துகிறது மற்றும் செயல்முறையை நெறிப்படுத்துகிறது; மேலும் சீரான போக்குவரத்து ஓட்டத்திற்கும் இது பங்களிக்கிறது.

**12. அண்மையில், 2024 – பாரிஸ் ஒலிம்பிக்கிற்குத் தகுதிபெற்ற ஒரே இந்திய பளுதூக்கும் வீரர்/வீராங்கனை யார்?**

அ. மீராபாய் சானு ✓

ஆ. குஞ்சராணி தேவி

இ. குர்தீப் சிங்

ஈ. கர்ணம் மல்லேசுவரி




★ டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற மீராபாய் சானு, பாரிஸ் ஒலிம்பிக்கில் தனது இடத்தைத் தக்கவைத்து, தகுதிபெற்ற ஒரே இந்திய பளுதூக்கும் வீராங்கனை என்ற சாதனை படைத்தார். தாய்லாந்தின் ஃபூகெட்டில் நடந்த IWF உலகக்கோப்பையில், ஒலிம்பிக் வெள்ளிப்பதக்கம் வென்ற 29 வயதான மீராபாய் சானு, பெண்களுக்கான 49 கிகி–B பிரிவில் மூன்றாவது இடத்தையும் ஒட்டுமொத்தமாக 11ஆவது இடத்தையும் பிடித்தார். ஆறுமாத காயத்திற்குப் பிறகு, மீராபாய் சானு இந்த நிகழ்வில் மொத்தம் 184 கிகி எடையைத்தூக்கி, 2024 பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கான தனது இடத்தை உறுதிப்படுத்தினார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அரசின் மருத்துவ சேவைகளை மேம்படுத்த புதிய செயலி அறிமுகம்.**

மத்திய அரசின் மருத்துவ சேவைகள் பொதுமக்களை சென்றடையும் நோக்கில், 'My CGHS' என்ற புதிய iOS செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் பயனாளிகள் தங்கள் உடல்நலன் குறித்த அறிக்கைகள், தகவல்களை இணையவழிமூலம் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

2014–ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் முதன்முறையாக வாக்கு ஒப்புகைச் சீட்டுக் கருவிகளை (VVPAT) தேர்தல் ஆணையம் ஆறிமுகப்படுத்தியது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், வியட்நாமில் ஒரு துறைமுக அழைப்பை மேற்கொண்ட இந்திய கடலோர காவல்படை கப்பலின் பெயர் என்ன?**

அ. தாரா பாய்

ஆ. சாம்ராட்

**இ. சமுத்ரா பஹேர்தார்** ✓

ஈ. பிரியதர்ஷினி




★ இந்திய கடலோர காவல்படையின் மாசு கட்டுப்பாட்டு கப்பலான சமுத்ரா பஹேர்தார், ஒரு ஹெலிகாப்டருடன், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு (ASEAN) நடந்துவரும் வெளிநாட்டு பணி நிமித்தத்தின் ஒரு பகுதியாக 2024 ஏப்ரல்.02 அன்று வியட்நாமின் ஹோ–சி–மின் துறைமுகத்தை அடைந்தது. கப்பலின் மூன்று நாள் பயணத்தின்போது, கடல் மாசுபாடு தணிப்பை மையமாகக்கொண்ட தொழிற்முறை குழுவினர் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு, கடல்சார் சட்ட அமலாக்கம் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

★ இப்பயணம் இந்திய கடலோர காவல்படை மற்றும் வியட்நாம் கடலோர காவல்படை இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல், இந்தியாவின் உள்நாட்டு கப்பல்கட்டும் திறன்களையும் வெளிப்படுத்துகிறது. மேலும், கப்பலில் உள்ள 25 தேசிய மாணவர் படை கேடட்கள் நடைபயிற்சி மற்றும் கடற்கரை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள்.

**2. 'NICES திட்டத்தை' செயல்படுத்துகிற அமைப்பு எது?**

**அ. ISRO** ✓

ஆ. DRDO

இ. IEA

ஈ. SEBI

★ ISRO மற்றும் விண்வெளித் துறையால் செயல்படுத்தப்படும், 'NICES' என்ற திட்டம், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட இந்திய ஆராய்ச்சியாளர்களை அழைக்கின்றது. காலநிலை மாற்றம் குறித்த தேசிய செயல்திட்டத்தின்கீழ் 2012இல் தொடங்கப்பட்ட NICES திட்டம், புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி காலநிலை மாறுபாட்டைக் கண்காணிக்கிறது. பூமியின் தட்பவெப்பநிலையைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமான காலநிலை மாறுபாடுகளை ஆராய்வது அதன் நோக்கங்களில் அடங்கும்.

**3. பிந்தியாராணி தேவியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. ஹாக்கி

ஆ. நீச்சல்

இ. குத்துச்சண்டை

**ஈ. பளு தூக்குதல்** ✓



★ 2022ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிந்தியாராணி தேவி, தாய்லாந்தின் புக்கெட்டில் நடைபெற்ற IWF உலகக்கோப்பை–2024இல் பெண்களுக்கான 55 கிலோ பிரிவில் 196 கிகி எடையைத்தூக்கி வெண்கலம் வென்றார். மாறாக, டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற மீராபாய் சானு 12ஆவது இடத்தைப்பிடித்தார். பதக்கம் பெறவில்லை என்றாலும், மீராபாய் சானு 2024ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கிற்குத் தகுதிபெற்றார். இந்தியாவிலிருந்து ஒலிம்பிக் பளுதூக்கும் போட்டிக்குத் தகுதிபெற்ற ஒரே நபராக அவர் ஆனார். வடகொரியாவின் காங் ஹியோன் கியோங் தங்கமும், ருமேனியாவின் மிஹேலா காம்பே வெள்ளியும் வென்றனர்.

**4. தொழிற்துறை அமைப்பான ASSOCHAM–க்கு 2024–25–க்கான தலைவராகப் பொறுப்பேற்றுள்ளவர் யார்?**

அ. வினீத் அகர்வால்

**ஆ. சஞ்சய் நாயர்** ✓

இ. தீபக் சூட்

ஈ. சுனில் கனோரியா

★ சோரின் முதலீட்டு நிதியத்தின் முன்னாள் தலைவரான சஞ்சய் நாயர், 2024–25–க்கான ASSOCHAMஇன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். இவருக்குமுன் ஸ்பைஸ்ஜெட்டின் அஜய்சிங் அப்பதவியை வகித்துவந்தார். சிட்டி குரூப் மற்றும் KKRஇல் பணியாற்றி விரிவான உலகளாவிய நிதி அனுபவத்தைக் கொண்ட சஞ்சய் நாயர், 2023இல் ஓய்வுபெற்றார். KKR இந்தியா செயல்பாடுகளை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்த அவர், நைகாஇன் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.


**5. போஜ்ஷாலா வளாகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. கர்நாடகா

**ஆ. மத்திய பிரதேசம்** ✓

இ. ஒடிசா

ஈ. கோவா



★ மத்திய பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் அமைந்துள்ள போஜ்ஷாலா வளாகம், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வரலாற்று ரீதியாகப் போட்டி நிலவி வரும் ஓரிடமாகும். இந்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் இது, இந்துக்களுக்கான கோவிலாகவும், முஸ்லிம்களுக்கான பள்ளிவாசலாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்திய தொல்லியல் துறையின் ஏற்பாட்டில் இந்து மதத்தினர் செவ்வாய்க்கிழமைகளில் பூஜைகளை நடத்தவும், முஸ்லிம் மதத்தினர் வெள்ளிக்கிழமைகளில் தொழுகை செய்யவும் அனுமதிக்கப்படுகிறது. அண்மையில், உச்சநீதி மன்றம், அங்கு நடத்தப்படும் தற்போதைய அறிவியல் ஆய்வுகள்மீதான தடையை நிராகரித்ததோடு, கட்டமைப்பில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தியது.

**6. 2024 – கண்ணிவெடிகள் குறித்து பன்னாட்டளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Protecting Lives, Building Peace** ✓

ஆ. Safe Ground, Safe Steps, Safe Home

இ. Together for Mine Action

ஈ. Perseverance, Partnership, and Progress




★ கண்ணிவெடிகள் குறித்து பன்னாட்டளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.04 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது கண்ணிவெடிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் கண்ணிவெடிகளை அகற்றுவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது. "Protecting Lives, Building Peace" என்பது 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். 2023இல், "Mine Action Cannot Wait" என்பது கருப்பொருளாக இருந்தது. 2005இல் ஐநா பொதுச்சபையால் இந்நாள் நிறுவப்பட்டது.

**7. அண்மையில், மேற்கு வங்கத்தின் எந்தப் பகுதியை பேரிடர் தரும் சூறைக்காற்று தாக்கியது?**

**அ. மைனகுரி** ✓ ஆ. சிலிகுரி

இ. டார்ஜிலிங் ஈ. கொல்கத்தா



★ அண்மையில், மேற்கு வங்க மாநிலம் ஜல்பைகுரி மாவட்டத்தில் உள்ள மைனகுரியை ஓர் அழிவுகரமான சூறைக் காற்று தாக்கியது; 10 நிமிடம் நீடித்த அச்சூறைக்காற்றில் சிக்கி 5 பேர் இறந்தனர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தியாவில் சூறைக்காற்று அரிதாக இருந்தாலும், மேற்கு வங்காளம், ஒடிஸா மற்றும் ஜார்கண்ட் போன்ற இந்தியாவின் கிழக்குப்பகுதிகளை, குறிப்பாக பருவமழைக்கு முந்தைய காலங்களில் அது பாதிக்கிறது.

★ இந்திய வானிலை ஆய்வுத்துறையின் 2016ஆம் ஆண்டு ஆய்வின்படி, வங்காளத்தில் சூறாவளியின் செயல்பாடு அதிகரித்துள்ளதாகவும், அது இறப்புகளுக்கு காரணமாக அமைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் அதிகரித்துவரும் இந்நிகழ்வுகளுக்கு வங்காள விரிகுடாவின் வெப்பமயமாதல் மற்றும் அசாதாரண காற்று மாதிரிகள் போன்றவை காரணமாக கூறப்படுகின்றன.

**8. முக்கூர்த்தி தேசியப்பூங்காவில் வாழும் நீலகிரி வரையாட்டுக்கு வெற்றிகரமாக ரேடியோ கழுத்துப்பட்டையை அணிவிப்பதற்காக அண்மையில் தமிழ்நாடு மாநில வனத்துறையுடன் கூட்டிணைந்த அமைப்பு எது?**



அ. உலக சுகாதார நிறுவனம் (WHO)

**ஆ. உலக வனவிலங்கு நிதியம் (WWF)** ✓

இ. வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் (WCS)

ஈ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

★ தமிழ்நாடு மாநில வனத்துறை, WWF–இந்தியாவுடன் இணைந்து, முக்கூர்த்தி தேசியப்பூங்காவில் உள்ள நீலகிரி வரையாட்டிற்கு ரேடியோ கழுத்துப்பட்டையை அணிவித்தது. 'நீலகிரி தார்' என்றும் அழைக்கப்படுகிற நீலகிரி வரையாடு, தமிழ்நாட்டின் மாநில விலங்காகவும், தென்னிந்தியாவில் மலைத்தொடரில் வாழ்வனவற்றுள் குளம்பு உடைய உள்ள ஒரே விலங்காகவும் உள்ளது. அழிந்து வரும் நிலையில் உள்ள இவ்விலங்கின் வாழ்விடமானது மேற்குத்தொடர்ச்சி மலை முழுவதும் பரவியுள்ளது.

**9. கள்ளக்கடல் என்றால் என்ன?**



**அ. பொங்கு கடல் அலைகளால் கரையோரங்களில் வெள்ளம் ஏற்படுவது** ✓

ஆ. வட அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்குப்பகுதியில் உள்ள பகுதி

இ. தென்னிந்தியாவின் பாரம்பரிய மீன்பிடி நுட்பம்

ஈ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சிறுகோள்

★ 'கள்ளக்கடல்' என்றும் அழைக்கப்படுகின்ற பொங்கு கடலைகள், கேரள மாநிலத்தில் உள்ள கடலோர வீடுகளை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளன. பருவமழைக்கு முந்தைய காலத்திலும், சில சமயங்களில் பருவமழைக்கு பிந்தைய காலத்திலும் இது முதன்மையாக நிகழ்கிறது; 'கள்ளக்கடல்' என்பது தொலைதூர புயல்களின் விளைவாக கடல் அலைகளை உருவாக்குகிறது. மீனவர்களின் சொல்லாடலான, 'கள்ளக்கடல்' என்பதற்கு 'கடல் திருடன்' என்பது பொருளாகும். இவ்வகை அலைகள் தெற்கு இந்தியப்பெருங்கடலில் இருந்து உருவாகி, கேரளாவின் கடற்கரையை அடைகிறது. 2012இல் UNESCO இச்சொல்லாடலை அங்கீகரித்தது.

**10. உலக வங்கியின் கணிப்பின்படி, 2024–25 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்னவாக இருக்கும்?**

அ. 6.3%

ஆ. 6.4%

**இ. 6.6%** ✓

ஈ. 6.8%

THE WORLD BANK

★ 2024–25 நிதியாண்டிற்கான இந்தியாவின் GDP வளர்ச்சிக்கணிப்பு 20 அடிப்படை புள்ளிகள் அதிகரித்து 6.6%ஆக இருக்கும் என்று உலக வங்கி திருத்தி அறிவித்துள்ளது. நடப்பாண்டு மதிப்பிடப்பட்ட 7.5% வளர்ச்சியில் ஒரு மந்த நிலை இருந்தபோதிலும், வலுவான பொது முதலீடு எதிர்கால வளர்ச்சியை உந்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் புள்ளியியல் அமைச்சகம் நடப்பாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.6%ஆக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது; இது அதன் முந்தைய கணிப்பைவிட அதிகமாகும். 2023–24 முதல் 2024–25 வரையிலான வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மந்தநிலைக்குக் காரணம் முதலீடுகளின் குறைவே ஆகும். இருந்தபோதிலும், சேவைகள் மற்றும் தொழிற்துறைகள் வலுவாகவே உள்ளன.

**11. அண்மையில், கீழ்காணும் எந்த அமைப்பால் 2024 – LEADS திட்டம் தொடங்கப்பட்டது?**

அ. இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு (FICCI) & இந்திய ரிசர்வ் வங்கி (RBI)

**ஆ. இந்திய தேசிய அறிவியல் அகாதெமி (INSA) & நல்லாளுகைக்கான தேசிய மையம் (NCGG)** ✓

இ. இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO)

ஈ. விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD)

★ 2024 ஏப்.01–07 வரை புது தில்லியில் நடைபெற்ற 2ஆவது INSA–NCGG LEADS திட்டம் என்பது இந்திய தேசிய அறிவியல் அகாதெமி மற்றும் நல்லாளுகைக்கான தேசிய மையம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. தலைமைத்துவம் மற்றும் இந்தியாவின் அறிவியல் சிறப்பை இது மேம்படுத்துகிறது.

**12. அண்மையில், இந்தியக்குடியரசுத்தலைவரால் கீழ்காணும் எந்த இடத்தில் புற்றுநோய்க்கான இந்தியாவின் முதல் உள்நாட்டு மரபணு சிகிச்சை முறை தொடங்கி வைக்கப்பட்டது?**

அ. ஐஐடி சென்னை

**ஆ. ஐஐடி மும்பை** ✓

இ. ஐஐடி ஹைதராபாத்

ஈ. ஐஐடி தில்லி

★ புற்றுநோய்க்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது மரபணு சிகிச்சையை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மும்பை ஐஐடிஇல் தொடக்கி வைத்தார். 'CAR–T செல்சிகிச்சை' எனப்பெயரிடப்பட்ட இந்தச் சிகிச்சை முறையை எளிதாகக் குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ள முடியும். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்னெடுப்புக்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்றும், தற்சார்பு இந்தியாவின் ஒளிரும் உதாரணமாகத் திகழ்கிறது என்றும் குடியரசுத்தலைவர் கூறினார். ஐஐடி மும்பை, டாடா நினைவு மருத்துவமனை மற்றும் இம்யூனோACT இணைந்து உருவாக்கிய இது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க சாதனையை குறிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விழிஞ்சம் துறைமுகத்துக்கு சர்வதேச பாதுகாப்பு தரச்சான்று.**

கேரள மாநிலத்தில் உள்ள விழிஞ்சம் துறைமுகத்துக்கு சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக பாதுகாப்பு சான்றை ஐநா–இன் சர்வதேச கடல்சார் ஆணையம் வழங்கியது. அதிவேக சரக்குக்கப்பல்கள் உள்பட சர்வதேச கப்பல்கள் இத்துறைமுகத்தில் பயணிப்பதற்கு இச்சான்று அவசியம். கடந்த 2001 செப்.11ஆம் தேதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் எதிரொலியாக கடற்சார் போக்குவரத்தில் உள்ள குறைபாடுகளை குறைக்கவும் சர்வதேச கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யவும் ஐஎஸ்பிஎஸ் சான்று உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**2. 'ரெப்போ' வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ரிசர்வ் வங்கி.**

வங்கிகளுக்கான குறுகிய காலக்கடன்கள் மீதான வட்டி விகிதத்தில் (ரெப்போ ரேட்) எவ்வித மாற்றத்தையும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மேற்கொள்ளவில்லை. தொடர்ந்து ஏழாவது முறையாக வட்டி விகிதம் மாற்றமில்லாமல் 6.50 சதவீதமாக தொடர்கிறது. உணவுப்பொருள்களின் விலை உயரக்கூடும் என்பதால் வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

**பொருளாதார வளர்ச்சி 7%:** கடந்த நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.6 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிலும் தொடர்ந்து நான்காவது ஆண்டாக பொருளாதார வளர்ச்சி ஏழு சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பணவீக்கம் குறையும்:** கடந்த நிதியாண்டில், பணவீக்கம் 5.4 சதவீதமாக இருந்தது. இந்நிதியாண்டில் அது 4.5%ஆக சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, ஜனவரி நிலவரப்படி இந்தியாவில் கிட்டத்தட்ட 97 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் அதிகபட்சமாக 15.30 கோடி பேர் உத்தர பிரதேசத்திலும், குறைந்தபட்சமாக 57,500 வாக்காளர்கள் இலட்சத்தீவிலும் உள்ளனர்.

---

**3. சர்வதேச பாட்மிண்டன் போட்டி: அனுபமா, தருண் சாம்பியன்.**

கஜகஸ்தான் சர்வதேச பாட்மின்டன் சேலஞ்ச் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்யாயா, தருண் ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர்.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. பெருங்காமநல்லூர் படுகொலையுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. மகாராஷ்டிரா

இ. கர்நாடகா

ஈ. ஒடிசா



★ தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் நிகழ்ந்த படுகொலையின் 104ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரசியல் கட்சியினர் மற்றும் தலைவர்கள் மரியாதை செலுத்தினர். கடந்த 1920 ஏப்.03இல், 1911ஆம் ஆண்டு குற்றப் பரம்பரைச் சட்டத்தின்படி தங்களைக் காவல் நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளாத ஆயுதம் அற்ற பிரமலைக் கள்ளர் மக்கள்மீது காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 16 பேர் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி, 'தென்னக ஜாலியன் வாலாபாக்' என அழைக்கப்படுகிறது. ஆங்கிலேயர்கள் தடய அறிதலுக்காகவும் மற்றும் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டிற்குமாக இச்சட்டத்தைப் பயன்படுத்தினர். இந்தியா விடுதலை அடைந்தபிறகு இந்தச் சட்டம் இரத்துசெய்யப்பட்டது.

**2. அண்மையில், iOS சாதனங்களுக்காக, 'myCGHS' செயலியை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. விவசாய அமைச்சகம்

**ஆ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்** ✓

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. மின்சார அமைச்சகம்

★ 'எனது மத்திய அரசின் சுகாதாரத் திட்டம்' iOS செயலியை மத்திய சுகாதார அமைச்சகம் தொடங்கியுள்ளது. இச்செயலி இமாச்சல பிரதேச தேசிய தகவல் மையம் மற்றும் தேசிய தகவல் மைய சுகாதார தொழில்நுட்ப குழுக்களால் உருவாக்கப்பட்டது. இது மத்திய அரசின் சுகாதாரத் திட்டப்பயனாளிகளுக்கு தகவல் & அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அம்சங்களை வழங்கும் வசதியான திறன்பேசி செயலியாகும்.

**3. அண்மையில், டிஜி யாத்ரா அமைப்பை அறிமுகப்படுத்திய இந்தியாவின் 14ஆவது விமான நிலையம் எது?**

அ. ஜெய் பிரகாஷ் நாராயண் விமான நிலையம், பீகார்

ஆ. ஷஹீத் பகத் சிங் சர்வதேச விமான நிலையம், சண்டிகர்

**இ. மனோகர் சர்வதேச விமான நிலையம், கோவா** ✓

ஈ. தேவி அஹில்யாபாய் ஹோல்கர் விமான நிலையம், மத்திய பிரதேசம்

MANOHAR INTERNATIONAL AIRPORT, GOA

★ டிஜி யாத்ரா அமைப்பை அறிமுகப்படுத்திய இந்தியாவின் 14ஆம் விமான நிலையமாக கோவா மாநிலம் மோபாவில் உள்ள மனோகர் சர்வதேச விமான நிலையம் மாறியுள்ளது. மத்திய உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவால் தொடங்கப்பட்ட இது, பயணிகளின் சரிபார்ப்பை சீரமைக்கவும், காத்திருப்பு நேரத்தை குறைக்கவும் மற்றும் நடைமுறைகளை எளிதாக்கவும் முக அங்கீகாரத்தைப் பயன்படுத்துகிறது.

★ பயணிகள் டிஜியாத்ரா செயலியை பதிவிறக்கம் செய்து, அதை தங்கள் ஆதார் எண்ணுடன் இணைத்து, பயணச்சீட்டு வாங்குவதற்காக டிஜி யாத்ரா அடையாள எண்ணை உருவாக்குகின்றனர். விமான நிலையத்தில், நுழைவுச் சீட்டை ஸ்கேன் செய்வதன்மூலம் தடையின்றி நுழைவதற்கு இது உதவுகிறது.

**4. 2023–24இல் எவ்வளவுக்கு கடல்சார் பொருட்களை ஏற்றுமதிசெய்ய இந்தியா இலக்கை நிர்ணயித்துள்ளது?**

**அ. $9.1 பில்லியன்** ✓

ஆ. $7.7 பில்லியன்

இ. $8.6 பில்லியன்

ஈ. $11.1 பில்லியன்



★ செயலாக்கத்திறன் மற்றும் அதிக மதிப்புள்ள பொருட்கள்மூலம் ஈராண்டுகளில் கடல்சார் உற்பத்தி ஏற்றுமதியை $12 பில்லியன் டாலராக உயர்த்த இந்தியா இலக்கு கொண்டுள்ளது. 2022–23இல், ஏற்றுமதி மதிப்பு மொத்தம் $8.09 பில்லியன் டாலர்களாக இருந்தது. இருப்பினும், 2023–24 ஏப்ரல் முதல் பிப்ரவரி வரை, ஏற்றுமதி 7.5% குறைந்து $6.8 பில்லியனாக இருந்தது; இதற்குக் காரணம் அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் அளவு குறைந்ததே ஆகும். 2023–24ஆம் ஆண்டில் $9.1 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதியை மேற்கொள்ள அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது. உலக அளவில் மீன் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்திலும் மீன் வளர்ப்பில் இரண்டாவது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**5. PRATUSH தொலைநோக்கியை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. ISRO ✓**

இ. NASA

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்

★ நிலா மற்றும் அதன் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்ட உயர்தெளிவுத்திறன்கொண்ட தொலைநோக்கிகள்மூலம் புதிய பேரண்ட நுண்ணறிவுகளை வெளியிடுவதற்கான ஓர் அற்புதமான முயற்சியை வானியலாளர்கள் ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டுள்ளனர். இதற்கு இந்தியாவின் பங்களிப்பாக, **PRATUSH** (**P**robing **R**eioniz**AT**ion of the **U**niverse using **S**ignal from **H**ydrogen), என்ற ரேடியோ தொலைநோக்கி உள்ளது. இது நிலவின் தொலைதூரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ISROஇன் ஒத்துழைப்புடன் பெங்களூருவில் உள்ள இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தால் (RRI) உருவாக்கப்பட்ட இது சமிக்ஞைகளைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. பொது சுகாதாரத்திற்குச் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் விதமாக, 'S.A.R.A.H' என்ற டிஜிட்டல் சுகாதார ஊக்குவிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**

**அ. WHO ✓**



ஆ. WTO

இ. ILO

ஈ. UNDP

★ உலக சுகாதார அமைப்பானது, செயற்கை நுண்ணறிவின்மூலம் இயங்கும் டிஜிட்டல் சுகாதார ஊக்குவிப்பாளர் மாதிரியான, 'S.A.R.A.H'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. **S.A.R.A.H** அல்லது **S**mart **A**I **R**esource **A**ssistant for **H**ealth ஆனது நலமிகு பழக்கவழக்கங்கள் மற்றும் மனநலம்போன்ற பல்வேறு சுகாதார தலைப்புகளில் தகவல்களை வழங்குவதற்கு மேம்பட்ட மொழி மாதிரிகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. புற்றுநோய், இதய நோய், நுரையீரல் நோய் மற்றும் நீரிழிவுபோன்ற நோய்களுக்கான முக்கிய காரணங்களைப் பற்றிய நுண்ணறிவை இது தெளிவாக வழங்குகிறது.

**7. அண்மையில், கீழ்காணும் எந்த இடத்தில் நஞ்சு நிறைந்த ஜெல்லிமீன் திரள்கள் காணப்பட்டன?**

அ. பாரதீப் கடற்கரை, ஒடிசா



**ஆ. விசாகப்பட்டினம் கடற்கரை, ஆந்திர பிரதேசம் ✓**

இ. உத்கல கடற்கரை, ஒடிசா

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

★ ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தின் கடற்கரையோரத்தில் நஞ்சு நிறைந்த *Pelagia noctilucas* அல்லது ஊதாநிற வரிகள்கொண்ட ஜெல்லிமீன்கள் திரள் திரளாகக் காணப்பட்டன. சூடான கடல் வெப்பநிலை காரணமாக

அதன் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கும்போது இவ்வாறு அவை திரள்கின்றன. இந்தத் திரட்சி மீன்பிடி மற்றும் சுற்றுலாத் தொழிற்துறைகளை மோசமாகப் பாதிக்கின்றன. கடல் மற்றும் காற்று நீரோட்டங்கள்போன்ற இயற்கை காரணிகளும் இந்த நிகழ்வுகளுக்குப் பங்களிக்கின்றன.

**8. அண்மையில், இந்தியாவில் லித்தியம்-அயன் மின்கலங்ககளை உற்பத்தி செய்வதற்கான கூட்டு முயற்சியை உருவாக்குவதற்காக, கீழ்காணும் எந்த அமைப்பு பானாசோனிக் எனர்ஜி நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

அ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC)

ஆ. சர்வதேச அணுசக்தி முகமை (IAEA)

**இ. இந்தியன் எண்ணெய் நிறுவனம் (IOCL)** ✓

ஈ. பாரத் மிகுமின் நிறுவனம் (BHEL)



★ இந்தியன் எண்ணெய் நிறுவனமானது (IOCL) இந்தியாவில் லித்தியம்-அயன் மின்கலங்கள் உற்பத்திக்கான கூட்டு முயற்சியை நிறுவுவதற்காக, பானாசோனிக் எனர்ஜி நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது. இந்தக் கூட்டிணைவு, 2070ஆம் ஆண்டிற்குள் நிகர-சுழிய பைங்குடில் வாயு உமிழ்வை அடைவதற்கான இந்தியாவின் இலக்கை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. ஆண்டுதோறும், 'சர்வதேச மனச்சான்று நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. ஏப்ரல்.05** ✓

ஆ. ஏப்ரல்.06

இ. ஏப்ரல்.07

ஈ. ஏப்ரல்.08



★ ஆண்டுதோறும் ஏப்.05 அன்று அனுசரிக்கப்படும் சர்வதேச மனச்சான்று நாள், தனிநபர்கள் தங்கள் மனசாட்சியைப் பற்றி சிந்திக்கவும், தார்மீக விழுமியங்களை நிலைநிறுத்தவும் வலியுறுத்துகிறது. "Promoting a Culture of Peace with Love and Conscience" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். 2020இல் ஐநா.ஆல் நிறுவப்பட்ட இந்த நாள், தீங்குகளைத் தடுப்பதில் விவேகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

**10. அண்மையில், நடுத்தர தொலைவு செல்லும் எறிகணையான, 'அக்னி பிரைம்'இன் பறப்புச்சோதனையை வெற்றிகரமாக நடத்திய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. ISRO** ✓

இ. NASA

ஈ. CNSA



★ இந்தியாவின் DRDO மற்றும் வியூகப்படைப் பிரிவானது ஒடிஸாவின் டாக்டர் APJ அப்துல் கலாம் தீவில், 'அக்னி-பிரைம்' என்ற எறிகணையை வெற்றிகரமாகச் சோதித்தது. அக்னி-பிரைம் என்பது அணுசக்தித்திறன்கொண்ட ஒரு நடுத்தர தொலைவு செல்லும் எறிகணையாகும். இது அக்னி-I மற்றும் II-க்கு அடுத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கும் தொலைவு 1,000-2,000 கிலோ மீட்டராகும். அக்னி-IV/Vஇலிருந்து மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் இலகுரக மற்றும் வலிமைக்கான கலவைப்பொருட்களையும் இது கொண்டுள்ளது.

**11. அண்மையில், கேரள பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 5200 ஆண்டுகள் பழமையான ஹரப்ப குடியேற்றத்தை, கீழ்காணும் எந்த இடத்தில் கண்டுபிடித்தனர்?**

அ. பத்தா பெட், குஜராத் ✓

ஆ. பிர்ரானா, ஹரியானா

இ. தேசல்பூர், குஜராத்

ஈ. ஹிசார், ஹரியானா



★ கேரள பல்கலையின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் 5200 ஆண்டுகள் பழமையான ஹரப்ப குடியேற்றத்தை குஜராத்தின் ஜூனா காதியாவிற்கு அருகிலுள்ள பத்தா பெட் என்ற இடத்தில் கண்டுபிடித்தனர். இத்தளம் ஆரம்பகால ஹரப்ப இடுகாட்டிற்கு அருகே அமைந்துள்ளது. தாவரங்களை அடையாளம் காணவும் விவசாய நடைமுறைகளைப் புரிந்து கொள்ளவும் தொல்பொருள் மாதிரிகள் அங்கிருந்து சேகரிக்கப்பட்டன. முன்னதாக, 500 புதைகுழிகள்கொண்ட ஒரு பகுதி அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அண்மைய அகழ்வாராய்ச்சியில் எலும்புக்கூடுகள், மட்பாண்டங்கள், விலங்குகளின் எலும்புகள், விலையுயர்ந்த கற்கள், டெரகோட்டா நூற்புக் கதிர்கள், தாமிரம் மற்றும் பல்வேறு கருவிகள் கிடைத்தன.

**12. 2024 – தேசிய கடல்சார் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Navigating the Future: Safety First ✓

ஆ. Amrit Kaal in shipping

இ. Sustainable Shipping

ஈ. New technologies for greener shipping

IMO EVENTS

NAVIGATING THE FUTURE: SAFETY FIRST!

★ தேசிய கடல்சார் நாளானது ஆண்டுதோறும் ஏப்.05ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இது உலகளாவிய வர்த்தகத்தில் கடல் போக்குவரத்தின் முக்கிய பங்கை மதிக்கிறது. இது 1919ஆம் ஆண்டு மும்பையிலிருந்து லண்டனுக்கு எஸ்எஸ் லாயல்டியின் பயணத்தை நினைவுபடுத்துகிறது. கூடுதலாக, 'உலக கடல்சார் நாள்' செப்டம்பர் கடைசி வியாழன் அன்று கொண்டாடப்படுகிறது; 2024 செப்.26 அன்று இந்த நாள் நிறுவப்பட்டது. "Navigating the Future: Safety First" என்ற நடப்பு 2024ஆம் ஆண்டு தேசிய கடல்சார் நாளுக்கானக் கருப்பொருளை, மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அண்மையில் அறிவித்தது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்களிப்பதை ஊக்குவிக்க சமூக வலைதளங்களில் தேர்தல் ஆணையம் பிரசாரம்.**

முதல் முறை வாக்காளர்கள் மற்றும் இளையோர்களை நோக்கமாகக் கொண்டு, '18 வயது வாக்காளர்' என்ற விழிப்புணர்வு பிரசாரத்தை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.ஒவ்வொரு தனிநபரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவதை வலியுறுத்தும், 'நீங்களும் ஒருவர்' என்ற பிரசாரத்தில் கதைசொலல் மற்றும் காணொளிக்காட்சிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**2. 'சுவிதா' வலைதளம்.**

'சுவிதா' வலைதளம் என்பது தேர்தல் பிரசார நடைமுறைகளுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடம் இருந்து அனுமதிகள் மற்றும் செயல்முறையை நெறிப்படுத்த இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒரு தொழில்நுட்ப தீர்வாகும்.

இந்த வலைத்தளம் தேர்தல் செயல்பாட்டின் செயல்திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், கட்சிகளும் வேட்பாளர்களும் வாக்காளர்களைச் சென்றடைவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் தேர்தல் பிரசாரக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, விண்ணப்பங்களின் நிகழ்நேர கண்காணிப்பு, அனுமதி புதுப்பிப்புகள், மற்றும் குறுந்தகவல்மூலம் தொடர்புகொள்வது என பலவிதமான அனுமதிகோரிக்கைகளை வெளிப்படையாக வழங்குகிறது. 543 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் ஏப்.19 தொடங்கி ஜூன்.01 வரை 7 கட்டங்களாக நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன்.04ஆம் தேதி நடைபெறவுள்ளது.

---

**3. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு விஸ்வகர்மா விருது.**

இந்திய அரசின் கட்டுமானத்தொழில் மேம்பாட்டுக் கழகம், சிறந்த கட்டுமான திட்டங்களை செயல்படுத்தி வரும் நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகிறது. அந்த வகையில், இந்திய அளவில் மெட்ரோ ரெயில் நிறுவனத்தில், சிறந்த மெட்ரோ ரெயில் சேவைக்கான நகர்ப்புற போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிவரும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு இந்தாண்டுக்கான, 'சிஜடிசி விஸ்வகர்மா விருது' வழங்கியுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST


https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த லேசரை உருவாக்கிய நாடு எது?**



அ. பல்கேரியா

ஆ. எஸ்டோனியா

**இ. ருமேனியா** ✓

ஈ. சுவீடன்

★ ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்கட்டமைப்பு ELI திட்டத்தின் ஒருபகுதியாக, ருமேனியா உலகின் மிகவும் ஆற்றல் வாய்ந்த லேசர் ஒளிக்கீற்றை உருவாக்கியுள்ளது. "Extreme Light Infrastructure–Nuclear Physics"– (ELI–NP)" என்று அழைக்கப்படும் இந்த லேசர், புக்கரெஸ்டுக்கு அருகிலுள்ள ருமேனியாவின் மகுரேலில் அமைந்துள்ளது. இது, நோபல் இயற்பியல் பரிசு வென்ற ஜெரார்ட் மௌரோ மற்றும் டோனா ஸ்டிரிக்லேண்ட் ஆகியோரின் கண்டுபிடிப்புகளான சிர்ப்ட்–பல்ஸ் ஆம்ப்லிஃபிகேஷனை அடிப்படையாகக்கொண்ட ஓர் அற்புதமான தொழில்நுட்பமாகும். பிரெஞ்சு லேசர் நிறுவனமான தேல்ஸால் இயக்கப்படுகிற இந்த லேசர், சுகாதாரம் மற்றும் விண்வெளி ஆய்வுகளில் புரட்சிகரமான பயன்பாடுகளைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2. பாபிகொண்டா தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திர பிரதேசம்** ✓

இ. குஜராத்

ஈ. கேரளா

★ பாபிகொண்டா தேசியப்பூங்காவில் காட்டுத்தீயை தடுக்க ஆந்திர பிரதேச மாநில அரசு தொழில்நுட்ப உதவிகளை பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறது. கிழக்குத்தொடர்ச்சிமலையில் அமைந்துள்ள பாபிகொண்டா தேசியப் பூங்கா, அதிக மழைப்பொழிவுக்கும் கோதாவரியாற்றுக்கும் பெயர்பெற்றதாகும். 1978இல் வனவிலங்கு சரணாலயமாக உருவாக்கப்பட்டு 2008இல் தேசியப்பூங்காவாக மேம்படுத்தப்பட்ட இது, பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல்மூலம் முக்கியமான பறவைகள் மற்றும் பல்லுயிர்ப் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதி, 'கஞ்சு மேகா' என்ற தனித்துவமான குட்டை ஆட்டினத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**3. ஆகாசதீரன் என்ற வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ள அமைப்பு எது?**



அ. ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனம்

**ஆ. பாரத் மின்னணு நிறுவனம்** ✓

இ. பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

ஈ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

★ 2024 ஏப்.04 அன்று, இந்திய இராணுவம் வான் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, 'ஆகாசதீரன்' கட்டளை மையம் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பை அதன் வான் பாதுகாப்புப் படையில் ஒருங்கிணைத்தது. BELஆல் உருவாக்கப்பட்ட இந்த அதிநவீன அமைப்பு, இந்தியாவின் தற்சார்பு முன்னெடுப்பின் ஒருபகுதியாக உள்ளது. 2024ஆம் ஆண்டை 'தொழில்நுட்பத்தை உள்வாங்கிக்கொள்ளுதல் ஆண்டு' என இந்திய இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்திய நாட்டின் வான் பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்தும் அதிநவீன தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பை விரைவு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4. அண்மையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியை நடுவணரசு நிறுத்தி வைத்திருப்பதாகக்கூறி இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

★ மிக்ஜம் புயல் மற்றும் 2023இல் ஏற்பட்ட பெருவெள்ளத்திற்குப் பிந்தைய தேசிய பேரிடர் நிவாரண நிதியை நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதி ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிற பேரிடர் நிவாரண நிதி ஆனது கடந்த 2004 – ஆழிப்பேரலை நிகழ்வுக்குப்பிறகு, பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005இன்கீழ் உருவாக்கப்பட்டது. தேசிய பேரிடர் நிவாரண நிதி சூறாவளி, வறட்சி மற்றும் வெள்ளம்போன்ற கடுமையான பேரிடர்களை உள்ளடக்கியது ஆகும்; மாநில பேரிடர் நிவாரண நிதியுடன் கூடுதலாக இது வழங்கப்படுகிறது.

**5. அண்மையில், நிலவு மற்றும் பிற வான் பொருட்களுக்கான ஓர் ஒருங்கிணைந்த நிலவு நேரத்தை நிறுவப்போகிற விண்வெளி அமைப்பு எது?**



அ. JAXA

ஆ. ISRO

**இ. NASA** ✓

ஈ. ROSCOSMOS

★ நிலவு மற்றும் வான் பொருள்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட நிலவு நேரம் (LTC) என்ற ஓர் ஒருங்கிணைந்த நேர தரநிலையை உருவாக்குமாறு NASAவுக்கு வெள்ளை மாளிகை அறிவுறுத்தியுள்ளது. நிலவு சம்பந்தமான பல்வேறு விண்வெளி திட்டங்கள் நிலவிவரும் இவ்வேளையில், விண்வெளியில் பன்னாட்டு விதிமுறைகளை அமைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 2026இல் உருவாக்கப்படவுள்ள LTC, நிலவு ஈர்ப்பு விசைகளைக் கணக்கிடும் மற்றும் பணிகள் மற்றும் தரவு பரிமாற்றங்களில் துல்லியத்தைத் தருவிக்கும்.

**6. அண்மையில், பெருநிறுவன சமூகப்பொறுப்பு பங்களிப்புக்காக, 15ஆவது CIDC விஸ்வகர்மா விருது–2024 பெற்ற நிறுவனம் எது?**




அ. NHPC

ஆ. பவர்கிரிட்

**இ. SJVN லிட்** ✓

ஈ. NTPC

★ கட்டுமானத் தொழில் மேம்பாட்டுக் கவுன்சில் நிறுவியுள்ள 15ஆவது மகாராஷ்டிராவின் நகர & தொழில்மேம்பாட்டுக் கழகத்தின் விஸ்வகர்மா விருதுகள் இரண்டினை சட்லெஜ் ஜல் வித்யுத் நிகம் நிறுவனம் (SJVN) வென்றுள்ளது. இந்த விருதுகள் குறித்துப் பேசிய SJVN தலைவரும் நிர்வாக இயக்குநரும் CSR அறக்கட்டளையின் தலைவருமான கீதா கபூர், புதுமையான மற்றும் நிலையான பெருநிறுவன சமூகப்பொறுப்பு முன்முயற்சிகள்மூலம் நேர்மறையான மாற்றத்திற்கு தங்கள் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன என்றார்.

★ SJVN ஆனது கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, பேரிடர் நிவாரணம் மற்றும் கலாசார மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு CSR நடவடிக்கைகளுக்காக ₹450 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளது. புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் SJVN சார்பாக தலைமைப் பொதுமேலாளர் (மனிதவளம்) பல்ஜீத் சிங் இந்த விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

**7. எந்த மொழியிலும் எந்தக் குரலையும் நகலெடுக்கக்கூடிய, 'குரல் இயந்திரம் – Voice Engine' எனப்படும் புதிய AI மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**

அ. டீப் மைண்ட்

**ஆ. OpenAI** ✓

இ. இயந்திர நுண்ணறிவு ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. IBM

★ எந்த மொழியிலும் எந்தக்குரலையும் பிரதிபலிக்கும் திறன்கொண்ட ஓர் அற்புதமான AI மாதிரியை, 'Voice Engine' என்ற பெயரில் OpenAI வெளியிட்டுள்ளது. ஒரே மாதிரியான குரலில் பேச்சை உருவாக்குவதற்காக பயனர்கள் குறுகிய ஒலிக்கோப்புகளைப் பதிவேற்றுகிறார்கள். இன்னும் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வெளியிடப்படாத இது, நோயாளிகளின் குரல் மீட்புக்கு உதவுதல், மொழிபெயர்த்தல் போன்ற பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

**8. பழங்கால பாறை ஓவியங்களைக் கொண்டுள்ளமையால் அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பதிமலை குகை அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓



ஆ. கேரளா

இ. குஜராத்

ஈ. கர்நாடகா

★ பதிமலை குகையானது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகள் பழமையான பாறை ஓவியங்களைக் கொண்டுள்ளது. இது யானை, ஒரு தேர் (மயில் என்றும் கூறப்படுகிறது) மற்றும் ஆரம்பகால மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது. தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் அருகே அமைந்துள்ள இந்தத் தளத்தில் உள்ள பாறை ஓவியங்கள் பாதுகாப்பின்றி ஊறு நேரும் அச்சத்தில் உள்ளன. வெண்ணிறமிகளால் வரையப்பட்ட இக்கலைப்படைப்பு கொங்கு மண்டலத்தில் குறிப்பிடத்தக்கதாக பார்க்கப்படுகிறது. மற்ற பாறை ஓவிய தளங்களைப் போலல்லாமல், பதிமலைஎளிதில் அணுகும் வகையில் மலையின் அடிவாரத்தில் விவசாய நிலங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

**9. "டிராகன்களின் தாய்" வால் விண்மீன் என்பது என்ன வகை வால் விண்மீனாகும்?**

**அ. ஹேலி வால் விண்மீன்** ✓



ஆ. டெம்பல் வால் விண்மீன்

இ. என்கே வால் விண்மீன்

ஈ. குய்ப்பர் பெல்ட் வால் விண்மீன்

★ அதிகாரப்பூர்வமாக வால் விண்மீன் 12P/Pons–Brooks என்று அழைக்கப்படும், "டிராகன்களின் தாய்" வால் விண்மீன், தற்போது அந்திவேளைக்குப் பிறகு வடக்கு அரைக்கோளத்தில் தெரிந்து வருகிறது. ஹேலி–வகை வால் விண்மீனான இது, தோராயமாக 71 ஆண்டுகளுக்கு ஒருமுறை 30 கிமீ அகலமான கருவுடன் சுற்றி வருகிறது. பனி, தூசி மற்றும் பாறைப்பொருட்களால் ஆன இது சூரியனை நெருங்கும்போது திடப்பொருளிலிருந்து வாயுவாக மாறுகிறது. வியாழன்–குடும்பத்து வால் விண்மீன் என வகைப்படுத்தப்பட்டுள்ள இது, செவ்வாய்க்கோளின் சுற்றுப்பாதைக்கு அருகில் அண்மைநிலையை அடைந்து 2024 ஜூனில் பூமிக்கு அருகே நெருங்கி வரும்.

**10. அண்மையில், 114 வயதில் மரணித்த உலகின் மிகவும் வயதான மனிதரின் பெயர் என்ன?**

அ. ஜான் டினிஸ்வுட்

**ஆ. ஜுவான் விசென்டே பெரெஸ் மோரா** ✓

இ. யூகிச்சி சுகன்ஜி

ஈ. யூஜெனி பிளான்சார்ட்



★ உலகின் மிகவும் வயதான மனிதராக கின்னஸ் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஜுவான் விசென்டே பெரெஸ் மோரா, தனது 115வது பிறந்தநாளுக்கு சற்று முன்னர் காலமானார். அவரது நீண்ட ஆயுளுக்கான இரகசியங்களில் கடின உழைப்பு, சீக்கிரம் உறங்கும் நேரம் மற்றும் தினசரி ஒரு குவளை அகார்டியன்ட் (மது வகை) ஆகியவை அடங்கும்.

**11. அண்மையில், குழந்தைப்பேறு பதிவுக்கான மாதிரி விதிகளை உருவாக்கியுள்ள அமைச்சகம் எது?**

அ. வெளியுறவு அமைச்சகம்

**ஆ. உள்துறை அமைச்சகம்** ✓

இ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

गृह मंत्रालय
MINISTRY OF
HOME AFFAIRS
सत्यमेव जयते

★ தாய் மற்றும் தந்தை இருவரின் மதத்தையும் பெற்றோர்கள் தனித்தனியாக குறிப்பிட வேண்டும் என்ற குழந்தைப் பேறு பதிவுக்கான புதிய விதிகளை மத்திய உள்துறை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது. முன்பு, குடும்பத்தின் மதம் மட்டுமே குறிப்பிடப்பட்டு வந்தது. புதுப்பிக்கப்பட்ட, 'படிவம் எண்.1–பிறப்பறிக்கை' ஆனது குழந்தையின் மதம் மற்றும் பெற்றோர் இருவரின் மதத்திற்கும் தனித்தனி பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்தப் புதுப்பிப்பு தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும் பொருந்தும். 2023ஆம் ஆண்டின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு (திருத்தம்) சட்டத்தின்படி, தேசிய தரவுத்தளத்தில் இந்தத் தகவல்களைப் பராமரிக்க வேண்டும்.

**12. 2024 – உலக சுகாதார நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Building a fairer, healthier world

**ஆ. My Health, My Right** ✓

இ. Our planet, our health

ஈ. Support nurses and midwives




★ உலக சுகாதார நாளானது ஆண்டுதோறும் ஏப்.07 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு (WHO) நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையிலும் உலகளாவிய சுகாதார பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது நலமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது மற்றும் சுகாதாரப் பாதுகாப்பில் உலகளாவிய ஒத்துழைப்பை வளர்க்கிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாக, "எனது உடல்நலம், எனது உரிமைகள்" தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கருப்பொருள் சுகாதாரப் பாதுகாப்பிற்கான தனிப்பட்ட உரிமைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் மகள் காலமானார்.**

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனாரின் மூத்த மகள் இராஜலட்சுமி (91) காலமானார். தேசபக்திப்பாடல்கள்மூலம் நாட்டு மக்களிடையே சுதந்திரப்போராட்டத்தை வளர்த்தவர்களில் ஒருவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. பாரிசில் நடைபெறவுள்ள 33ஆவது கோடைகால ஒலிம்பிக்–2024இல் நடுவர்மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?**

**அ. பில்கிஸ் மிர்** ✓

ஆ. மதுமிதா பிஷ்ட்

இ. இராஜ்யலட்சுமி சிங்

ஈ. சானியா மிர்சா



★ நீர் விளையாட்டு ஊக்குவிப்பாளரும் தடகள வீரருமான ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த பில்கிஸ் மிர், பாரிஸில் நடைபெறவுள்ள 33ஆவது கோடைகால ஒலிம்பிக்கில் நடுவர்மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியப் பெண்மணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் நியமிக்கப்பட்ட அவர், ஜூலை.26 முதல் ஆக.11 வரை நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றவுள்ளார். 1998ஆம் ஆண்டு படகோட்டியாக தனது பயணத்தைத் தொடங்கிய பில்கிஸ் மிரின் கனவு இதன் மூலம் நனவாகியுள்ளது.

**2. அண்மையில், இந்திய கடலோர காவல்படை நீர்வாழ் மையம் திறக்கப்பட்ட இடம் எது?**

அ. தூத்துக்குடி, தமிழ்நாடு

ஆ. சென்னை, தமிழ்நாடு

**இ. இராமேசுவரம், தமிழ்நாடு** ✓

ஈ. தேங்காய்ப்பட்டினம், தமிழ்நாடு



★ இந்திய கடலோர காவல்படையின் தலைமை இயக்குநர் இராகேஷ் பால், தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் அருகே உள்ள ICGS மண்டபத்தில் இந்திய கடலோர காவல்படை நீர்வாழ் மையத்தை 2024 ஏப்.06 அன்று திறந்து வைத்தார். பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ், கடந்த 1977ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய கடலோர காவல்படையானது கடத்தலை எதிர்த்துப் போராடுவதையும் கடல்வளங்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டது.கடந்த 1978ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாயால் முறையாக இது தொடங்கப்பட்டது.

**3. Lunar Polar Exploration Mission (LUPEX) என்பது கீழ்காணும் எந்த இரண்டு விண்வெளி நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாகும்?**

**அ. ISRO & JAXA** ✓

ஆ. NASA & ISRO

இ. CNSA & ROSCOSMOS

ஈ. ESA & NASA



★ Lunar Polar Exploration Mission (LUPEX) என்பது இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) மற்றும் ஜப்பானிய விண்வெளி ஆய்வு முகமை (JAXA) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு திட்டமாகும். இது நிலவின் தென்துருவப் பகுதியை ஆராய்வதற்கான கூட்டுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தில் ஏவுகலம் மற்றும் தரையூர்தியை JAXAஉம் தரையிறங்கியை ISROஉம் பங்களிக்கும். நிலவின் மணலிலுள்ள நீரின் அளவை அளவிடுவதற்கும், துளையிடுதல் மற்றும் மாதிரி எடுப்பதற்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும் தரையூர்தி, நிலவின் தென் துருவப் பகுதிகள் பற்றிய முக்கியமான நுண்ணறிவுகளை மனித குலத்திற்கு அளிக்கும்.

**4. அண்மையில், இந்திய கடலோர காவல்படையின் எந்தக் கப்பல் உடனடி நடவடிக்கையை மேற்கொண்டு 27 வங்கதேச மீனவர்களை பாதுகாப்பாக மீட்டது?**

அ. விக்ரம் | **ஆ. அமோக்** ✓

இ. சாகர் | ஈ. தல்வார்



★ இந்திய கடலோர காவல்படையின் துரித நடவடிக்கையால் இந்திய கடல் பகுதியில் சாகர்–II என்ற மீன்பிடி படகில் சிக்கித்தவித்த 27 வங்கதேச மீனவர்கள் மீட்கப்பட்டனர். ரோந்துக்கப்பலான, 'அமோக்' 2024 ஏப்.04 அன்று இந்தியா – வங்காளதேசம் கடல் எல்லைக்கோட்டுப் பகுதியில் பதற்றமான கப்பலைக் கண்டறிந்தது. விசாரணையில் அந்தக் கப்பலின் செலுத்து பொறி 2 நாட்களாக பழுதடைந்தது தெரியவந்தது. அதனையடுத்து உடனடி நடவடிக்கையானது இந்திய கடலோர காவல்படையினரால் மேற்கொள்ளப்பட்டு அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

**5. ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, 2024–25 நிதியாண்டில் நுகர்வோர் விலைக்குறியீட்டு பணவீக்கத்தின் சதவீதம் என்னவாக இருக்கும்?**




அ. 3.2%

**ஆ. 4.5%** ✓

இ. 5.1%

ஈ. 5.5%

★ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், பணவியல் கொள்கைக் குழுவிற்கு தலைமைதாங்கி, 7ஆவது முறையாக ரெப்போ விகிதத்தை தொடர்ந்து 6.5%ஆக தக்கவைத்துள்ளார். 2024–25 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் ஏழு சதவீதம் வளர்ச்சியடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், நுகர்வோர் விலைக்குறியீட்டுப் பணவீக்கமானது, 4.5% அளவிற்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6. அண்மையில், "ஆசியா மற்றும் பசிபிக் – 2024 பொருளாதார மற்றும் சமூக ஆய்வு" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆசியா & பசிபிக் பகுதிக்கான ஐநா பொருளாதார & சமூக ஆணையம் (UNESCAP)** ✓

இ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP)

ஈ. உலக சுகாதார அமைப்பு

★ UNESCAPஆல் வெளியிடப்பட்ட, "ஆசியா மற்றும் பசிபிக் – 2024 பொருளாதார மற்றும் சமூக ஆய்வு" என்ற தலைப்பிலான அறிக்கையானது அப்பிராந்தியத்தின் பொருளாதார போக்குகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும் ஒரு முதன்மையான வெளியீடாகும். 1947இல் நிறுவப்பட்ட UNESCAP, சமூக–பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் ஒரு தளமாகச் செயல்படுகிறது. இந்தியா உட்பட 53 உறுப்பு நாடுகள் மற்றும் 9 இணை உறுப்பினர்களைக் கொண்ட இவ்வமைப்பு, கடந்த 2023ஆம் ஆண்டில் இந்தியாவின் வலுவான பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்கூறியுள்ளது.

**7. அண்மையில், தொலைதொடர்பு செயலரால் கீழ்காணும் எந்த IITஇல், "100 5G ஆய்வகங்களுக்கான பரிசோதனை உரிமத்தொகுதி" தொடங்கி வைக்கப்பட்டது?**

அ. ஐஐடி மும்பை

**ஆ. ஐஐடி சென்னை** ✓

இ. ஐஐடி ஐதராபாத்

ஈ. ஐஐடி கான்பூர்

★ இந்திய கல்வி நிறுவனங்களில் 5G ஆய்வகங்களுக்கான செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஐஐடி சென்னையில் நடந்த ஒரு பயிலரங்கின்போது, டாக்டர் நீரஜ் மிட்டல், செயலர் (தொலைதொடர்பு), "100 ஐந்தாம் (5G) தலைமுறை ஆய்வகங்களுக்கான சோதனை உரிமத்தொகுதி" ஒன்றைத் திறந்துவைத்தார். இந்த முயற்சியானது உரிமம் பெறுதலை எளிதாக்குவது மற்றும் 5G துறையில் புதுமைகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


**8. விண்வெளியில் உள்ள ஓர் இரட்டை மடல்கொண்ட வான்பொருளான, 'அர்ரோகோத்', சூரிய மண்டலத்தின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளது?**

அ. குய்ப்பர் பட்டை ✓

ஆ. ஊர்த் மேகம்

இ. வெளிப்புற சூரியக்குடும்பம்

ஈ. உட்புற சூரியக்குடும்பம்



★ குய்ப்பர் பட்டையில் உள்ள ஒரு வான்பொருளான அர்ரோகோத்தின் பனிக்கருவத்தைத் தெளிவுபடுத்தும் மாதிரியை அறிவியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்; இதற்கு போஹாடன் மொழியில், 'ஆகாயம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் ஹப்பிள்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட, 'அர்ரோகோத்' என்பது மனிதர்களால் மிகத்தொலைவில் கண்டறியப்பட்ட ஒரு பனிப்பொருளாகும். இது பழங்காலத்திய வாயுவை பனிப்படிவமாக வைத்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. எட்ஜ்வொர்த்–குய்ப்பர் பட்டை என்றும் அழைக்கப்படும் குய்ப்பர் பட்டையானது நெப்டியூனுக்கப்பால் சுற்றும் பனிப் பொருள்களை உள்ளடக்கியதாகும். 1950களில் அதன் இருப்பைக் கருதி அறிவித்த வானியலாளர் ஜெரார்ட் குய்ப்பரின் பெயரால் அது அழைக்கப்படுகிறது.

**9. மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சரின் கூற்றுப்படி, எந்த ஆண்டுக்குள் யூரியா இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்த இந்தியா இலக்கு வைத்துள்ளது?**

அ. 2024

ஆ. 2025 ✓

இ. 2030

ஈ. 2050



★ புதிய உர ஆலைகள்மூலம் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து வருவதால், 2025–க்குள் யூரியா இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்த இந்தியா இலக்கு வைத்துள்ளது. தற்போது நாட்டில் ஓராண்டுக்குத் தேவைப்படும் யூரியாவான 35 மில்லியன் டன்களில் 30% இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. 2014–15 மற்றும் 2022–23க்கு இடையில் யூரியா உற்பத்தி 225.08இலிருந்து 284.95 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அரசாங்கத்தின் புதிய உத்திகளில் மூடிய ஆலைகளுக்குப் புத்துயிர் அளிப்பது மற்றும் நானோ திரவ யூரியாபோன்ற மாற்று உரங்களை ஊக்குவித்து தன்னிறைவை அடைவது மற்றும் ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை குறைப்பது ஆகியவை அடங்கும்.

**10. 2024 – 'மேம்பாடு மற்றும் அமைதிக்கான பன்னாட்டு விளையாட்டு நாளுக்கானக்' கருப்பொருள் என்ன?**

அ. Scoring for People and the Planet

ஆ. Sport for the Promotion of Peaceful and Inclusive Societies ✓

இ. Securing a Sustainable and Peaceful Future for All

ஈ. The power of sport values



★ விளையாட்டு மற்றும் உடல்சார் பயிற்சிகளின் நேர்மறையான தாக்கத்தை எடுத்துக்காட்டும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.06 அன்று உலகம் முழுவதும் மேம்பாடு மற்றும் அமைதிக்கான பன்னாட்டு விளையாட்டு நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளுக்கான நடப்பு 2024ஆம் ஆண்டின் கருப்பொருளாக, "Sport for the Promotion of Peaceful and Inclusive Societies" தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல்.04 அன்று நியூயார்க்கில் உள்ள ஐநா அவையின் தலைமையகத்தில் நடந்த ஒரு நிகழ்வு, நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதில் விளையாட்டு அமைப்புகளில் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியது.

**11. பீட்டர் பெல்லெக்ரினி என்பவர் அண்மையில் எந்த நாட்டின் புதிய அதிபரானார்?**




அ. நார்வே

**ஆ. ஸ்லோவாக்கியா ✓**

இ. டென்மார்க்

ஈ. ருமேனியா

★ ஸ்லோவாக்கியாவின் தேசியவாத–இடதுசாரி அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்ட பீட்டர் பெல்லெக்ரினி, தாராளவாத கட்சியின் இவான் கோர்கோக்கை தோற்கடித்து, அதிபர் தேர்தலில் வெற்றிபெற்றார். 53.85 சதவீத வாக்குகளுடன் அதிபராகியுள்ள பீட்டர் பெல்லெக்ரினி ஸ்லோவாக்கியாவின் அமைதி நிலைப்பாட்டை பேணுவதாக உறுதியளித்தார். கடந்த 1993இல் விடுதலை அடைந்ததிலிருந்து, ஜூசானா கபுடோவாவைத் தொடர்ந்து ஆறாவது அதிபராக பீட்டர் பெல்லெக்ரினி பதவியேற்கவுள்ளார்.

**12. இசைக்கருவிகளில் அதன் கைவினைத்திறனுக்காக அண்மையில் புவிசார் குறியீடு (GI) பெற்ற மிராஜ் நகரம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. இராஜஸ்தான்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. மகாராஷ்டிரா ✓**

ஈ. ஒடிஸா

★ சிதார்கள் மற்றும் தம்புராக்களை வடிவமைப்பதில் புகழ்பெற்ற நகரமாக விளங்கும் மகாராஷ்டிர மாநிலத்தின் சங்லி மாவட்டத்தில் உள்ள மிராஜ் நகரம், அண்மையில் அதன் கைவினைத்திறனுக்காக புவிசார் குறியீடு பெற்றது. இந்த இசைக்கருவிகள் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் மற்றும் திரைப்படத்துறை வல்லுநர்களால் மிக அதிகமாக விரும்பப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காட்டுத்தீ விழிப்புணர்வு காணொலி: தமிழ்நாடு வனத்துறை வெளியீடு.**

தமிழ்நாடு 22,877 ச.கிலோமீட்டர் வனப்பரப்பளவை கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் காடுகளில் சுமார் 7425 தாவர இனங்களும் 1089 விலங்கினங்களும் உள்ளன. காட்டுத்தீ தடுப்பு குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ், நாட்டுப்புற இசையுடன் கூடிய காணொலி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

---

அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு பணியிடங்களில் பாலியல் தொந்தரவில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2013ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது.

---

**2. வேட்பாளர்களை நிராகரிக்கும் நோட்டா!**

தேர்தல் நடத்தை விதிமுறைகள் (1961)இன்படி '49–ஓ' என்னும் விதி கொண்டுவரப்பட்டது. 2013ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், வாக்குச்சீட்டுகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்திலும், 'NOTA' வாக்கைச் சேர்க்க உத்தரவிடப்பட்டது. ஒரு தொகுதியில் நோட்டாவுக்கு அதிக எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தாலும், அதற்கடுத்து அதிகபட்சமாக வாக்கு பெற்ற வேட்பாளர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவார். 2014 – மக்களவைத் தேர்தலில் நாடு முழுவதும் **NOTA** (**N**one **O**f **T**he **A**bove) வாக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், 'சாகர் கவாச்' பயிற்சி நடைபெற்ற இடம் எது?**



**அ. இலட்சத்தீவுகள்** ✓

ஆ. கோவா

இ. சென்னை

ஈ. புதுச்சேரி

★ 2 நாள் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான, 'சாகர் கவாச்', அண்மையில் இலட்சத்தீவுகளில் நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை, கடல்சார் காவல்படை, மீன்வளம் மற்றும் சுங்கத் துறை உள்ளிட்ட கடல்சார் பாதுகாப்பு முகமைகள் ஈடுபட்டன.

**2. ஐஐடி சென்னையின் ஓர் அண்மைய ஆய்வின்படி, கீழ்காணும் எந்தெந்த நீர்நிலைகளில் PFAS விரவியுள்ளது?**




**அ. பக்கிங்காம் கால்வாய், அடையாறு மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி** ✓

ஆ. காவேரியாறு, அமராவதி ஆறு மற்றும் பவானி ஆறு

இ. பாலாறு, தென்பெண்ணையாறு மற்றும் கெடிலம் ஆறு

ஈ. தாமிரபரணி ஆறு, கடனாநதி ஆறு மற்றும் பச்சையாறு

★ ஐஐடி சென்னையின் ஆய்வானது, பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றில் PFAS (Forever Chemicals) விரவியிருப்பதை வெளிப்படுத்துகிறது. PFAS ஆனது அடி–ஒட்டாத சமையற்பாண்டங்கள், உணவுப்பொட்டலம் கட்ட பயன்படும் பொருள்கள் மற்றும் தொழிற்துறை பொருட்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு பொருளாகும்; இது சுற்றுச்சூழலில் சிதைவடையாமல் நெடுநாட்கள் தங்கியிருக்கும் இயல்புடையது.

★ கல்லீரல் பாதிப்பு, மிகக்குறைந்த எடையில் குழந்தை பிறப்பது, ஹார்மோன் ஏற்றத்தாழ்வு, கருவுறுதல் பிரச்சினைகள், நோயெதிர்ப்பு அமைப்பு விளைவுகள் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட சாத்தியமான பாதகமான சுகாதார விளைவுகள் இதனால் ஏற்படுகிறது.

**3. சபகருக்குப்பிறகு, கீழ்காணும் எந்த அயல்நாட்டு துறைமுகத்தில் செயல்படும் உரிமையை இந்தியா பெற்றுள்ளது?**




**அ. சிட்வே துறைமுகம்** ✓

ஆ. கொழும்பு துறைமுகம்

இ. யங்கோன் துறைமுகம்

ஈ. பங்கான் துறைமுகம்

★ ஈரான் நாட்டில் உள்ள சபகர் துறைமுகத்தைத் தொடர்ந்து, மியான்மரில் உள்ள சிட்வே என்ற தனது இரண்டாவது அயல்நாட்டு துறைமுகத்தை நிர்வகிப்பதற்கு, இந்தியா மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெற்றது. மியான்மரின் ராக்கைன் மாநிலத்தில் கலடன் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள சிட்வே, இந்தியாவின் மானிய உதவியின் கீழ் ஆதரிக்கப்படும் கலடன் பன்–மாதிரி போக்குவரவு திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டதாகும். இந்த உத்திசார் நடவடிக்கை இந்தியாவின் வடகிழக்கு வர்த்தக வாய்ப்புகளை பெருக்க உதவுவதோடு, இந்தியா மற்றும் மியான்மர் இடையே மேம்பட்ட வர்த்தகத்தையும் ஊக்குவிக்கிறது.

**4. கங்கௌர் திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**



அ. உத்தரபிரதேசம்

ஆ. குஜராத்

**இ. இராஜஸ்தான்** ✓

ஈ. ஒடிஸா

★ இராஜஸ்தான் மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு குறிப்பிடத்தக்க திருவிழாவான கங்கௌர், சிவன் (கன்) மற்றும் உமையம்மை (கௌரி) இணைந்ததைக் கொண்டாடுகிறது; திருமணவிழாவின் மகிழ்ச்சி இவ்விழாவில் காணப்படும். சைத்ராவில் (மார்ச்–ஏப்ரல்) கொண்டாடப்படுகிற இவ்விழா, வசந்த காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இல்லற மகிழ்ச்சிக்காக அல்லது தங்கள் கணவரின் நல்வாழ்வுக்காக ஆசீர்வாதம் கோரி பெண்கள் கன் மற்றும் கௌரியின் களிமண்ணாலான சிலைகளை வழிபடுகின்றனர். திருமணமாகாத கன்னியர் தகுந்த வாழ்க்கைத் துணைக்காக பிரார்த்தனை செய்கிறார்கள்.

### 5. 'TSAT–1A' என்பது என்ன வகையான செயற்கைக்கோளாகும்?

**அ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்** ✓

ஆ. தட்பவெப்பநிலை கண்காணிப்பு செயற்கைக்கோள்

இ. தகவல் தொடர்பு செயற்கைக்கோள்

ஈ. வழிசெலுத்தல் செயற்கைக்கோள்



★ டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிட் (TASL) SpaceXஇன் ஃபால்கன்–9 ஏவுகலம்மூலம், 'TSAT–1A' என்ற ஆப்டிகல் சப்–மீட்டர் தெளிவுத்திறன்கொண்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது. Satellogic Incஉடன் இணைந்து உருவாக்கப்பட்ட இச்செயற்கைக்கோள், இராணுவ தரத்திலான படமாக்கலை வழங்குகிறது. இந்தியாவின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் இது, தயார்நிலையையும், உத்திசார் அடிப்படையில் முடிவுகள் எடுப்பதையும் மேம்படுத்துகிறது.

### 6. அண்மையில், சீனியர் தேசிய மகளிர் ஹாக்கி அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. PR ஸ்ரீஜேஷ்

ஆ. அமித் ரோஹிதாஸ்

**இ. ஹரேந்திர சிங்** ✓

ஈ. ஹர்மன்பிரீத் சிங்



★ முன்னாள் இந்திய ஹாக்கி வீரரும், 'துரோணாச்சார்யா' விருது பெற்றவருமான ஹரேந்திர சிங், 2028 – லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் வரை சீனியர் தேசிய மகளிர் அணியின் பயிற்சியாளராக ஹாக்கி இந்தியாவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு அணி தகுதி பெறத்தவறியதால் பதவி விலகிய ஹாலந்தின் ஜன்னெக் ஸ்கோப்மேனுக்குப் பதிலாக ஹரேந்திர சிங் நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக நியமனம் தொடர்பான முறையான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

### 7. அண்மையில், ஐநா முன்னெடுப்பின்கீழ் நேபாளம், மாலத்தீவுகள், இலங்கை, வங்கதேசம் மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளுக்கு இந்தியா என்ன வகையான உதவிகளை வழங்குகிறது?

**அ. வானிலை முன்னறிவிப்பு அமைப்பு** ✓

ஆ. அறிவியல் ஆராய்ச்சி வசதி

இ. கல்வி உள்கட்டமைப்பு

ஈ. சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகள்



★ 2027ஆம் ஆண்டிற்குள் உலகளவில் அபாயகரமான வானிலை, நீர் அல்லது தட்பவெப்பநிலை நிகழ்வுகளுக்கு உயிர்காக்கும் முன்னறிவிப்பு அமைப்புகளை நிறுவுவதை நோக்கமாகக்கொண்டு, ஐநா சபையின், 'அனைவருக்கும் முன்னெச்சரிக்கைகள்' என்ற முயற்சிக்கு இந்தியா பங்களிக்கிறது.

★ நேபாளம், மாலத்தீவுகள், இலங்கை, வங்கதேசம், மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளுடன் இணைந்து, இந்தியா, முன்கூட்டிய வானிலை எச்சரிக்கை அமைப்புகளை அமைப்பதில் ஈடுபட்டுள்ளது. இம்முன்முயற்சிகள், புயல் மற்றும்

வெள்ளம் போன்ற இயற்கைப்பேரிடர்களின் போது சரியான நேரத்தில் எச்சரிக்கைகள் மற்றும் முன்னறிவிப்புகளை வழங்கி பேரிடர் தயார்நிலை மற்றும் மீட்புத் திறன்களை மேம்படுத்துகின்றன.

**8. அங்காரா A5 என்ற விண்வெளி ஏவுகணையை உருவாக்கிய நாடு எது?**

**அ. ரஷ்யா** ✓

ஆ. உக்ரைன்

இ. ஜப்பான்

ஈ. சீனா



★ ரஷ்யாவின் அங்காரா A5 என்ற விண்வெளி ஏவுகணையானது வோஸ்டோக்னி காஸ்மோட்ரோமிலிருந்து ஏவப்பட உள்ளது. மும்நிலைகொண்ட இந்த ஏவுகணை, 24.5 டன் தாங்கு சுமையை தாழ்வட்ட சுற்றுப்பாதையில் நிலை நிறுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்த ஏவுகணை அதன் முந்தைய வடிவமான புரோட்டான் M–க்கு மாற்றாக இருக்கும்.

**9. அண்மையில், 2024 – ஜான் எல் 'ஜாக்' ஸ்விகர்ட் ஜூனியர் விருதைப்பெற்ற விண்வெளி ஆய்வுத்திட்டம் எது?**

**அ. சந்திரயான்-3 திட்டம்** ✓

ஆ. சந்திரயான்-2 திட்டம்

இ. செவ்வாய் சுற்றுகலன் திட்டம்

ஈ. ககன்யான் திட்டம்

★ ISROஇன் சந்திரயான்–3 பணிக்குழுவானது அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி அறக்கட்டளையின் விண்வெளி ஆய்வுக்கான 2024–ஜான் எல், 'ஜாக்' ஸ்விகர்ட் ஜூனியர் விருதைப் பெற்றது. விண்வெளி கருத்தரங்கத்தின்போது வழங்கப்பட்ட இம்மதிப்புமிக்க விருது, விண்வெளி ஆய்வுக்கான சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கிறது. ஹூஸ்டனில் உள்ள இந்திய தூதரகம் இவ்விருதை ஏற்றுக்கொண்டது, சந்திரயான்–3 திட்டத்தின் தொழில்நுட்ப திறமையை சிறப்பிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

**10. அண்மையில், களிமண் களத்தில் நடந்த மாஸ்டர்ஸ் 1000 போட்டியில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் யார்?**

அ. சாகர் காஷ்யப்

**ஆ. சுமித் நாகல்** ✓

இ. நிதின் கீர்த்தனே

ஈ. ரமேஷ் கிருஷ்ணன்



★ இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீரரான சுமித் நாகல், ரோலக்ஸ் மான்டே கார்லோ மாஸ்டர்ஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறி, முதன்மை சுற்றுக்கு முன்னேறிய மூன்றாவது இந்தியர் ஆனார். 1990ஆம் ஆண்டுக்குப் பிறகு ATP மாஸ்டர்ஸ் 1000 போட்டியை களிமண் களத்தில் விளையாடிய முதல் இந்தியராக சுமித் நாகல் வரலாறு படைத்தார். அவர் இத்தாலியின் மேட்டியோ அர்னால்டியை வீழ்த்தி வெற்றிபெற்றார்.

**11. 2024 – உலக ஹோமியோபதி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Homeoparivar: One Health, One Family** ✓

ஆ. Homeopathy: People's Choice for Wellness


இ. Homeopathy – Roadmap for Integrative Medicine

ஈ. Homoeopathy in public health



★ ஹோமியோபதியின் நிறுவனர் Dr சாமுவேல் ஹானிமனின் பிறந்தநாளான ஏப்ரல்.10ஆம் தேதி அவரது நினைவாக ஆண்டுதோறும் உலக ஹோமியோபதி நாள் கொண்டாடப்படுகிறது. "Homeoparivar: One Health, One Family" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். இது முழுமையான நலத்தை வலியுறுத்தும் விதமாக உள்ளது. ஹோமியோபதி என்னும் மருத்துவ முறையானது 19ஆம் நூற்றாண்டில் சாமுவேல் ஹானிமேனால் முக்கியத்துவம் பெற்றது. உலகளவில் ஹோமியோபதி முறையை மேம்படுத்துவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

12. **அண்மையில் காலஞ்சென்ற பீட்டர் ஹிக்ஸ் என்பவர் தனது எந்த ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்றார்?**



அ. குவாண்டம் இயக்கவியல்

ஆ. கதிரியக்கத்தின் கண்டுபிடிப்பு

இ. ரேடியம் மற்றும் பொலோனியம் தனிமங்களின் கண்டுபிடிப்பு

**ஈ. கடவுள் துகளைக் கண்டுபிடித்ததற்காக** ✓

★ 'ஹிக்ஸ்–போஸான் துகள்' அல்லது 'கடவுள் துகள்' கண்டுபிடிப்பதில் புகழ்பெற்ற பிரிட்டிஷ் இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ் (94), அண்மையில் காலமானார். கடந்த 2013இல் இயற்பியலுக்கான நோபல் பரிசு வென்ற அவரது பணி பேரண்டத்தின் பிந்தைய பெருவெடிப்பு உருவாக்கத்தை தெளிவுபடுத்தியது. எடின்பர்க் பல்கலையில் நீண்டகாலப் பேராசிரியராக பணிபுரிந்த ஹிக்ஸ், உலகளாவிய ஒருங்கிணைப்பில் போசான்களின் பங்கைப் புரிந்துகொள்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்ட 174 தொழில்நுட்பப் படிப்புகள் – சென்னை ஐஐடி தகவல்.**

நிரலாக்கம், தரவு அமைப்புகள்போன்ற அதிகளவில் எதிர்பார்க்கப்படும் படிப்புகள் உள்பட 174 தொழில்நுட்பப் படிப்புகளுக்கான பாடங்களை சென்னை IIT NPTEL தமிழில் மொழிபெயர்த்துள்ளது.

---

**2. தாய்லாந்தில் தமிழர்கள் நினைவாக நடுகல்.**

தாய்லாந்து நாட்டின் காஞ்சனபுரியில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நடுகல்லை திறந்து வைக்கும் விழாவில் பங்கேற்க தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**நடுகல் எதற்கு?** கடந்த 1939 முதல் 1945 வரை 2ஆம் உலகப்போர் நடந்தது. அப்போது, தாய்லாந்து நாட்டினைப் பர்மாவுடன் இணைக்கும் ரெயில் பாதையின் கட்டுமானப்பணிகளில் தமிழர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இப்பணியின் போது வேலைச்சுமை, போதிய உணவு கிடைக்காமை, நோய் முதலிய காரணங்களால் சுமார் 70,000 தமிழர்கள் இறந்தனர். அவர்களில் நினைவாக தமிழர் மரபுப்படி நடுகல் அமைக்கப்பட்டுள்ளது.

---

**3. சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தமிழ்நாடு முதலிடம்.**

உற்பத்திப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்த நிலைகள்குறித்து நடுவணரசின் NITI ஆயோக் நிறுவனம் ஆய்வுசெய்துள்ளது. அந்த ஆய்வின் அடிப்படையில், தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. கர்ப்பிணிகள் சுகாதாரக் குறியீடுகளிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. கர்ப்பிணிகள் பராமரிப்புடன் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவ –தில் தமிழ்நாடு 3.31 புள்ளிகளைப்பெற்று இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

இந்தியாவில் தொழில் வளர்ச்சி முதலான பிரிவுகளில் மாநிலங்களை முன்னேற்றுவதில் சிறப்புப்பொருளாதார மண்டலங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அதில், தமிழ்நாட்டில் அதிக அளவாக ஐம்பது சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தி இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---


**1. உலகளாவிய 2024 – கல்லீரல் அழற்சி அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. WHO ✓

ஆ. UNICEF

இ. UNDP

ஈ. WTO



★ WHOஇன் உலகளாவிய 2024 – கல்லீரல் அழற்சி அறிக்கையின்படி, 2.9 கோடி பேர் ஹெபடைடிஸ் – பி மற்றும் 0.55 கோடி பேர் ஹெபடைடிஸ் – சி வகை நோயுடன் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். உலக கல்லீரல் அழற்சி உச்சிமாநாட்டின்போது வெளியிடப்பட்ட, இந்த அறிக்கை 2030–க்குள் ஹெபடைடிஸை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மற்றும் சுகாதாரம். 2022ஆம் ஆண்டில், இந்தியாவில் புதிதாக 50,000 பேர் ஹெபடைடிஸ்–பி நோய்க்கும் மேலும் 1.4 இலட்சம் பேர் ஹெபடைடிஸ்–சி நோய்க்கும் ஆளாகியுள்ளனர்; மேலும் 1.23 இலட்சம் இந்த நோய் காரணமாக இறப்பெய்தியுள்ளனர்.

**2. அண்மையில், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியா–கஜகஸ்தான் கூட்டுப்பணிக்குழுவின் கூட்டம் நடத்தப்பட்ட இடம் எது?**

அ. அஸ்தானா ✓

ஆ. புது தில்லி

இ. அல்மாட்டி

ஈ. சென்னை



★ பயங்கரவாதத்திற்கு எதிரான ஐந்தாவது இந்தியா–கஜகஸ்தான் கூட்டுப்பணிக்குழுவின் கூட்டம் 2024 ஏப்ரல்.08 அன்று அஸ்தானாவில் கூடியது. KD தேவால் மற்றும் தல்கட் கலியேவ் தலைமையிலான இந்தக்கூட்டம், தெற்காசியா மற்றும் ஆப்கானிஸ்தான்–பாகிஸ்தான் பிராந்தியத்தில் எல்லைதாண்டிய பயங்கரவாதம் உட்பட பிற பிராந்திய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் குறித்து விவாதித்தது. பயங்கரவாதிகளின் தொழில்நுட்ப பயன்பாடு, இணையத்தை தவறாகப் பயன்படுத்துதல், தீவிரமயமாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்போன்ற சவால்கள் குறித்து அவர்கள் விவாதித்தனர். தகவல் பரிமாற்றம், திறன் மேம்பாடு மற்றும் பலதரப்பு ஈடுபாடு ஆகியவற்றின்மூலம் ஒத்துழைப்பை மேம்படுத்த இருவரும் வலியுறுத்தினர்.

**3. புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயான காலா அசாருக்குக் காரணமானது எது?**

அ. வைரஸ்

ஆ. பாக்டீரியா

இ. புரோட்டோசோவான் ஒட்டுண்ணி ✓

ஈ. பூஞ்சை



★ ஏந்திகள்வழி பரவும் நோய்களுக்கான தேசிய மையத்தின் தரவுகளின்படி, காலா–அசார் என்றும் அழைக்கப்படும் கருங்காய்ச்சலை இந்தியா ஒழித்துள்ளது. காலா–அசார் என்பது உலகளவில் 76 நாடுகளில் காணப்படும் 2ஆவது மிகக்கொடிய புரோட்டோசோவா ஒட்டுண்ணி நோயாகும். இது பாதிக்கப்பட்ட மணல் ஈக்களால் பரவுகிறது மற்றும் முதன்மையாக வலையகச்சவ்வு அமைப்பை பாதிக்கிறது. கருங்காய்ச்சல் (Leishmaniasis) நோயானது வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு, பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் காடழிப்பு மற்றும் நகரமயமாக்கல்போன்ற சுற்றுச் சூழல் மாற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது.

**4. ஜெனு குருபா பழங்குடியினர் முதன்மையாக இந்தியாவின் எந்தப் பகுதியில் வசிக்கின்றனர்?**

அ. இமயமலைப்பகுதி

**ஆ. மேற்குத்தொடர்ச்சி மலைகள்** ✓

இ. அந்தமான் & நிக்கோபார் தீவு

ஈ. வடகிழக்குப்பகுதி



★ ஜெனு குருபா பழங்குடியினர் மேற்குத் தொடர்ச்சி மலையை பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்கள் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை இழந்தவர்களாவர். 'ஜெனு' என்றால் தேன் மற்றும் 'குருபா' என்பது அவர்களின் இனத்தைக் குறிக்கிறது; தேன் சேகரிப்பாளர்களாக அவர்களின் பாரம்பரிய தொழிலை அவர்களின் பெயர் பிரதிபலிக்கிறது. அவர்கள் 'ஹாடி' என்று அழைக்கப்படும் சிறிய குடியிருப்புகளில் வாழ்கின்றனர், இடப்பெயர்ச்சி முறை சாகுபடி செய்கிறார்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்காக வனவளங்களை நம்பியுள்ளனர்.

**5. 2024 – உலகளாவிய புத்தொழில் குறியீட்டை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. ஹுருன் ஆராய்ச்சி நிறுவனம்** ✓

ஆ. ஐநாவின் தொழில் வளர்ச்சி அமைப்பு

இ. உலக அறிவுசார் சொத்து அமைப்பு

ஈ. வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த ஐநா கூட்டமைப்பு

★ ஹுருன் ஆராய்ச்சி நிறுவனத்தின், 2024 – 'குளோபல் யூனிகார்ன் இன்டெக்ஸ்' ஆனது 2000–களில் நிறுவப்பட்ட புத்தொழில் நிறுவனங்களை வரிசைப்படுத்துகிறது. இந்தியா, 2023இல் 67 புத்தொழில் நிறுவனங்களுடன் (2022 இல் 68ஆக இருந்தது) உலகளவில் 3ஆவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா 703 புத்தொழில் நிறுவனங்களுடன் முதலிடத்திலும் சீனா 340 புத்தொழில் நிறுவனங்களுடன் 2ஆவது இடத்திலும் உள்ளது. வான்வெளி / விண்வெளி தொழில்நுட்பம் ஆகியவற்றில் இந்தியாவுக்கு எந்தவொரு புத்தொழில் நிறுவனங்களும் இல்லை.

**6. பலாவுவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்தியதற்காக சென்னையில், 2024 – தூதரக நாளில் மதிப்புமிக்க, 'மெடல் ஆஃப் ஹானர்' வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?**

அ. சஞ்சீவ் ஜெய் நரேன்

ஆ. சசி குருமாயும்

**இ. நீரஜ் சர்மா** ✓

ஈ. அமித் சர்மா




★ பலாவுவுக்கான இந்தியாவின் கௌரவ தூதர் நீரஜ் ஷர்மா, தூதரக நாளின்போது HCCD–இந்தியாவின் மதிப்புமிக்க, 'மெடல் ஆஃப் ஹானர்' வழங்கி கௌரவிக்கப்பட்டார். HCCD–இந்தியாவால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, உலகளாவிய உறவுகளில் கௌரவ தூதரின் முக்கிய பங்கைக் கொண்டாடியது. KL கஞ்சு, மோகன் சுரேஷ் ஆகியோர் விழாவை சிறப்பித்தனர். 1995இல் நிறுவப்பட்ட HCCD–இந்தியா, கௌரவ தூதர்களிடையே புரிதலை ஊக்குவிக்கிறது.

**7. அண்மையில், சிறுமிகள் அதிகாரமளிப்புத் திட்டத்தின் புதிய பதிப்பை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

அ. DRDO

ஆ. ISRO

**இ. NTPC** ✓

ஈ. BHEL

★ இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல் உற்பத்தி நிறுவனமான NTPC லிமிடெட், அரசாங்கத்தின் பேட்டி பச்சாவோ, பேட்டி பதாவோ முன்முயற்சியுடன் இணைந்த சிறுமிகளுக்கான அதிகாரமளிப்புத் திட்டத்தின் (GEM) அண்மைய பதிப்பை அறிமுகப்படுத்துகிறது. சிறுமிகளின் கற்பனைகளை வளர்ப்பதற்கும் வாய்ப்புகளை வளர்ப்பதற்கும் GEM திட்டம் 1 மாத கால பயிற்சியை வழங்குகிறது. 392 பங்கேற்பாளர்களுடன் கடந்த 2018இல் தொடங்கப்பட்ட GEM திட்டம், COVID-19 சவால்களுக்கு மத்தியிலும், இன்றுவரை 7,424 சிறுமிகளுக்குப் பயனளித்து வருகிறது.

**8. 2024 – தூய்மைப் பொருளாதார முதலீட்டாளர் மன்றமானது, ஜூன் மாதத்தில், எந்த நாட்டில், செழுமைக்கான இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பால் (IPEF) ஏற்பாடு செய்யப்படவுள்ளது?**

அ. இந்தியா

**ஆ. சிங்கப்பூர்** ✓

இ. பிரான்ஸ்

ஈ. இத்தாலி



★ நிலையான உள்கட்டமைப்பு, தட்பவெப்பநிலை தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களுக்கான முதலீடுகளை ஈர்ப்பதற்காக, செழுமைக்கான இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு தூய்மைப் பொருளாதார முதலீட்டாளர் மன்றத்தை 2024 ஜூனில் சிங்கப்பூரில் நடத்தவுள்ளது. EV மற்றும் சூரிய ஆற்றல் உள்கட்டமைப்பில் இந்திய முதலீட்டுத் திட்டங்களை காட்சிப்படுத்துவதற்காக தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் (startup) நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

**9. அண்மையில், மறதிநோய்குறித்த பிரிட்டனின் ஆராய்ச்சிக் குழுவில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ. சாந்த் நாக்பால்

ஆ. கைலாஷ் சந்த்

**இ. அஷ்வினி கேசவன்** ✓

ஈ. கமலேஷ் குந்தி



★ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரும், லண்டன் பல்கலை கல்லூரியில் (UCL) மூத்த மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கௌரவ ஆலோசகரும் நரம்பியல் நிபுணருமான Dr அஷ்வினி கேசவன், மறதிநோய் தொடர்பான பிரிட்டனின் ஆராய்ச்சிக்குழுவின் ஒருபகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ADAPT (அல்சைமர் நோய் கண்டறிதல் மற்றும் பிளாஸ்மா pTau217) எனப்படும் அக்குழு, பயோமார்க்கர் p-tau217இல் கவனம் செலுத்தும்; இது அல்சைமர் நோயுடன் தொடர்புடைய மூளையில் காணப்படும் இரு புரதங்களின் (அமிலாய்டு & டவு) அளவை பிரதிபலிக்கிறது.

**10. 'CDP-SURAKSHA' தளத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

**அ. தோட்டக்கலை விவசாயிகளுக்கு மானியம் வழங்க** ✓

ஆ. பேரண்டத்தில் மிகப்பெரிய முப்பரிமாண வரைபடத்தை உருவாக்க

இ. வாக்காளர் பதிவு செயல்முறைகளை எளிதாக்க

ஈ. தேர்தல் முடிவுகள் குறித்த நிகழ்நேர அறிவிப்புகளை வழங்க

★ தோட்டக்கலை விவசாயிகள் எளிமையான முறையில் மானியம் பெறுவதற்காக இந்திய அரசு CDP-SURAKSHA என்ற டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. PM-KISAN உடன் ஒருங்கிணைந்து செயல்படும் இது, உடனடி மானியம் வழங்குவதற்காக e-RUPI சான்றுகளைப் பயன்படுத்துகிறது. அதன் அம்சங்களில் UIDAI சரிபார்ப்பு, eRUPI ஒருங்கிணைப்பு மற்றும் ஜியோடேக்கிங் ஆகியவை அடங்கும். இதில், விவசாயிகள் நடவுப்பொருட்களை ஆர்டர் செய்யலாம், தங்கள் பங்களிப்பை வழங்கலாம் மற்றும் மானியம் தானாகவே பெறலாம்.

**11. அண்மையில், US–India Strategic and Partnership Forum (USISPF)மூலம் US–India Tax Forumஇன் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. MN ஸ்ரீனிவாசு

**ஆ. தருண் பஜாஜ்** ✓

இ. நவீன் அகர்வால்

ஈ. அஜித் சக்சேனா

★ முன்னாள் வருவாய் செயலர் தருண் பஜாஜ், தற்போது அமெரிக்க–இந்தியா வரி மன்றத்தின் தலைவராக உள்ளார். அமெரிக்க–இந்தியா உத்திகள் மற்றும் கூட்டாண்மை மன்றத்திற்கு (USISPF) ஓர் ஒருங்கிணைந்த நிதி மற்றும் வரி விதிப்பு நிபுணத்துவத்தை அவர் கொண்டு வருவார். ஆலோசகராக பணியாற்றிவந்த அவர் தலைவராக நியமனம் செய்யப்பட்டது, அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

**12. அண்மையில் ISRO தலைவர் S சோம்நாத் அறிவித்தபடி, இந்தியாவின் சந்திரயான்–4 திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

**அ. நிலவின் பாறை மற்றும் மண்ணைச் சேகரித்து அவற்றை அறிவியல் ஆய்வுக்காக மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவது** ✓



ஆ. நிலவில் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவது

இ. நிலவில் நீர் உள்ளதா என்பதை ஆராய்வது

ஈ. மேற்கூறிய எதுவும் இல்லை

★ இந்தியாவின் சந்திரயான்–4 திட்டத்தின் முதன்மை நோக்கமானது நிலவின் பாறை மற்றும் மண்ணைச் சேகரித்து அவற்றை அறிவியல் பகுப்பாய்வுக்காக மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவதாகும். நிலவில் பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட தரையிறக்கம், நிலவின் மேற்பரப்பிலிருந்து வெற்றிகரமாக வெளியேறுதல், நிலவின் சுற்றுப் பாதையில் நிலவும் சிக்கல்களை களைதல் மற்றும் மாதிரிகள் பூமிக்குப் பாதுகாப்பாக திரும்புவதை உறுதிசெய்தல் ஆகியவையும் இந்தத் திட்டத்தில் அடங்கும். அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே நிலவின் மாதிரிகளை பூமிக்குக் கொண்டுவந்துள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விண்வெளிக்கு முதல் இந்தியராக சுற்றுலா செல்லும் கோபி தோட்டக்குரா: ஆந்திரத்தைச் சேர்ந்தவர்.**

அமேசான் நிறுவனர் ஜெப் பெஸோஸின் புளூ ஆர்ஜின் நிறுவனம்மூலம், ஆந்திரத்தைச் சேர்ந்த கோபி தோட்டக்குரா என்பவர் விண்வெளிக்குச் சுற்றுலா செல்லவுள்ளார். இதன்மூலம் விண்வெளிக்கு சுற்றுலா செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

---

**2. இந்தியாவில் 23 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான மரங்கள் அழிப்பு: சர்வதேச ஆய்வறிக்கையில் தகவல்.**

இந்தியாவில் கடந்த 24 ஆண்டுகளில் 23 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச வன கண்காணிப்பு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் பிற தரவுகள்மூலம் வனப்பரப்பு குறித்து தகவல்களை, 'சர்வதேச வன கண்காணிப்பு அறிக்கை' என்ற தலைப்பில் உலக வளங்கள் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

உணவு மற்றும் உழவு நிறுவனம் (FAO) வெளியிட்ட தரவுகளில், கடந்த 2015 முதல் 2020 வரை இந்தியாவில் ஆண்டுதோறும் 6.68 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மர அழிப்பில் உலகளவில் இந்தியா இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளது.

நாட்டிலேயே அதிகப்படியான மரங்கள் அழிக்கப்படும் மாநிலங்களில் அஸ்ஸாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதற்கடுத்தடுத்த இடங்களில் முறையே மிசோரம், அருணாசல பிரதேசம், நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களும் உள்ளன என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. 14-04-2024: 'சட்டமேதை' 'அண்ணல்' B R அம்பேத்கரின் 134ஆவது பிறந்தநாள்.**

இந்திய அரசமைப்புச் சாசனத்தின் வரைவுக் குழுத் தலைவராக விளங்கிய பி ஆர் அம்பேத்கர், அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் முதல் சட்ட அமைச்சராகவும் இருந்தார். சாதி சமய வேறுபாடுகளை ஒழிப்பதில் அடையாளச்சின்னமாக விளங்கிய அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்.14ஆம் தேதி தமிழ்நாடு அரசால் சமத்துவ நாள் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. உலகளாவிய கல்லீரல் அழற்சி அறிக்கை – 2024இன்படி, 2022ஆம் ஆண்டில் உலக அளவில் கல்லீரல் அழற்சி B & C வகை நோயினால் பாதிக்கப்பட்டோரில் எத்தனை சதவீதத்தினர் இந்தியாவில் உள்ளனர்?**

அ. 10.5%

**ஆ. 11.6%** ✓

இ. 12.1%

ஈ. 9.5%

★ உலக சுகாதார அமைப்பின்படி, 2022ஆம் ஆண்டில் உலக அளவில் கல்லீரல் அழற்சி B & C வகை நோயினால் பாதிக்கப்பட்டோரில் இந்தியா 11.6%த்தினரைக் கொண்டுள்ளது. 35.3 மில்லியனுக்கும் அதிகமானோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்; 29.8 மில்லியன் பேர் கல்லீரல் அழற்சி வகை – Bஆலும் 5.5 மில்லியன் பேர் கல்லீரல் அழற்சி வகை – Cஆலும் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவும் சீனாவும் சேர்ந்து உலகளாவிய பாதிப்புகளில் 27.5%த்தைக் கொண்டுள்ளன.

**2. அண்மையில், 'விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வு பயிற்சி (START)' திட்டத்திற்கான மைய முகமையாக ISROஆல் நியமிக்கப்பட்ட அமைப்பு எது?**

**அ. குஜராத் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் (GUJCOST)** ✓

ஆ. MP கவுன்சில் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி (MPCST)

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில், லக்னோ

ஈ. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில், புது தில்லி

★ GUJCOST ஆனது விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வு பயிற்சி (Space Science and Technology Awareness Training – START) திட்டத்திற்கான ISROஇன் முதன்மை முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. இயற்பியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முதுகலை மற்றும் இறுதியாண்டு இளங்கலை பட்டதாரிகளை நோக்கமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள START திட்டமானது வானியல், வானியற்பியல், ஹீலியோபிசிக்ஸ், ஞாயிறு–புவி தொடர்பு மற்றும் கருவியியல்போன்ற பல்வேறு விண்வெளி அறிவியல் களங்களை உள்ளடக்கிய ஓர் அறிமுக இணையவழி பயிற்சியை வழங்குகிறது. இந்திய கல்வித்துறை மற்றும் ISRO மையங்களின் நிபுணர்களால் நடத்தப்படும் இது மாணவர்களிடையே விண்வெளிசார் அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. குவாக்கரெல்லி சைமண்ட்ஸின் 2024 – உலக பல்கலைக்கழக தரவரிசையில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் 45ஆவது இடத்தைப் பெற்றுள்ள நிறுவனம் எது?**

**அ. ஐஐடி பம்பாய்** ✓

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி மெட்ராஸ்

ஈ. ஐஐடி ரூர்க்கி

★ 2024 – QS உலக பல்கலைக்கழக தரவரிசையில் 79.1/100 மதிப்பெண்களைப்பெற்று ஐஐடி பம்பாய் நிறுவனம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் 45ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. QS ஆனது பல்கலைக்கழகங்களை 55 துறைகளில் தரவரிசைப்படுத்துகிறது. இங்கிலாந்தைச் சார்ந்த QS நிறுவனத்தால் வெளியிடப்பட்ட முடிவுகள் கனிமங்கள் மற்றும் சுரங்கம் (25ஆவது), தரவு அறிவியல் மற்றும் AI (30ஆவது), கட்டமைப்பு பொறியியல் (42ஆவது) மற்றும் பிற துறைகளில் ஐஐடி பாம்பேயின் வலிமையை எடுத்துக்காட்டுகின்றது. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் 2023இல் இருந்ததைவிட இரண்டு இடங்கள் முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**4. அண்மையில், இலட்சத்தீவுகளில் கிளையைத் திறந்த முதல் தனியார் வங்கி எது?**

அ. ஆக்சிஸ் வங்கி

**ஆ. HDFC வங்கி** ✓

இ. YES வங்கி

ஈ. ICICI வங்கி

★ இந்தியாவின் யூனியன் பிரதேசமான இலட்சத்தீவுகளில், குறிப்பாக கவராட்டி தீவில் கிளையை நிறுவிய முதல் தனியார் வங்கி என்ற பெருமையை HDFC வங்கி பெற்றுள்ளது. இதற்கு முன்பு இப்பகுதியில் அரசு வங்கிகள் மட்டுமே இயங்கிவந்தன. இந்த நடவடிக்கையானது வங்கி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும், தனிப்பட்ட மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவையை மையமாகக்கொண்டு தனிப்பயனாக்கப்பட்ட எண்ம சேவைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. ஆசிய வளர்ச்சி வங்கியின் அறிக்கையின்படி, 2024-25இல் இந்தியப் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி வீதம் என்ன?**

அ. 8.1%

ஆ. 7.8%

**இ. 7.0%** ✓

ஈ. 6.9%

★ ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) 2024 – ஏப்ரல் கண்ணோட்ட அறிக்கையின்படி, 2024-25 நிதியாண்டுக்கான இந்தியாவின் GDP வளர்ச்சிக்கணிப்பு 6.7%லிருந்து 7%ஆகத் திருத்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ADB, 2023-24இல் இந்தியாவின் GDP வளர்ச்சி 7.6%ஆக இருந்தது என்றும், 2025-26இல் அது 7.2%ஆக இருக்கும் என்றும் கணித்து அறிவித்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியும் 2024-25 நிதியாண்டில் 7% வளர்ச்சி இருக்கும் எனக் கணித்துள்ளது. உலகளாவிய பொருளாதார சவால்கள் இருந்தபோதிலும், உள்நாட்டு தேவை, அரசாங்க கொள்கைகள், முதலீடுகள் மற்றும் மின்னணுப் பொருள்கள் மற்றும் சேவைகளில் ஏற்றுமதி ஆதாயங்களால் 2025 நிதியாண்டில் இந்தியா முதன்மை பொருளாதாரங்களை வழிநடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**6. அண்மையில், அமெரிக்க அதிபரின், 'தங்க தன்னார்வ சேவை' விருதினைப் பெற்ற முதல் இந்திய துறவி யார்?**

**அ. ஆச்சார்யா லோகேஷ் முனி** ✓



ஆ. இராகவேசுவர பாரதி

இ. விஜயேந்திர சரசுவதி

ஈ. பாரதி தீர்த்தா

★ சமணர் ஆச்சார்யா லோகேஷ் முனி என்பவர் 2024ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபரின், 'தங்க தன்னார்வ சேவை' விருதைப்பெறும் முதல் இந்திய துறவி ஆனார். அவர் அகிம்சை விசுவபாரதி மற்றும் உலக அமைதி மையத்தின் நிறுவனராவார்; மனிதகுலம் மற்றும் பொதுநலனுக்கான அவரது பங்களிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இவ் விருதை பெறுவது பெருமைக்குரியது என்றும், இது இந்திய கலாசாரம், ஆன்மிக விழுமியங்கள் மற்றும் மகாவீரரின் சமணக்கொள்கைகளை போற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**7. உலக இணையவெளிக் குற்றங்கள் குறியீடு – 2024இன்படி, உலக அளவில் இணையவெளிக் குற்றங்களில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 8ஆவது ஆ. 9ஆவது **இ. 10ஆவது** ✓ ஈ. 11ஆவது

★ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் UNSW கான்பெர்ரா தலைமையிலான சர்வதேச குழு, 'உலக இணைய வெளிக் குற்றங்கள் குறியீட்டை' வெளியிட்டுள்ளது. 92 நிபுணர்களின் ஆய்வின்மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இது இணையவெளிக் குற்றங்களின் பரவலின் அடிப்படையில் தோராயமாக நூறு நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. இந்தத் தரவரிசையில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து உக்ரைன், சீனா, அமெரிக்கா, நைஜீரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியாவின் மதிப்பெண் 6.13ஆக பதிவாகி 15 நாடுகளின் பட்டியலில் 10ஆவது இடத்தைப் பிடித்தது.

### 8. 'சொறி ஒட்டுண்ணி நோய் (mange disease)' என்றால் என்ன?



**அ. பூச்சித்தொல்லையால் விலங்குகளில் ஏற்படும் தோல் நோய்** ✓

ஆ. பாதிக்கப்பட்ட விலங்கு கடிப்பதால் ஏற்படும் வைரஸ் தொற்று

இ. முதன்மையாக கால்நடைகளைப் பாதிக்கும் தொற்றுநோய்

ஈ. தாவரங்களின் வாழிடத்தைப் பாதிக்கும் பூஞ்சை நோய்

★ முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆசிய காட்டு நாய்களிடியே சொறி ஒட்டுண்ணி நோய் பரவுவதை வனத் துறையினர் கண்காணித்து வருகின்றனர். ஒட்டுண்ணிகளால் ஏற்படும் சொறி ஒட்டுண்ணி நோய், வீக்கம், அரிப்பு, தோல் தடித்தல் மற்றும் முடி உதிர்தலுக்கு வழிவகுக்கிறது. *Sarcoptes scabiei* பூச்சிகளால் ஏற்படும் இந்த நோய், மனிதர்களையும் தாக்குகிறது. அனைத்து வீட்டு விலங்குகளையும் சொறி ஒட்டுண்ணி நோய் தாக்கலாம். நேரடி தொடர்பு மற்றும் தூய்மையற்ற பொருள்கள்மூலம் இந்த நோய் பரவுகிறது. இந்த நோய் சிகிச்சையளிக்கக்கூடியதாக உள்ளது.

### 9. அண்மையில், இந்திய கடற்படைக் கப்பல்களுக்கான முதல் எஃகு வெட்டு விழா நடைபெற்ற இடம் எது?



அ. சென்னை, தமிழ்நாடு

**ஆ. விசாகப்பட்டினம், ஆந்திர பிரதேசம்** ✓

இ. விழிஞ்சம், கேரளா

ஈ. கொல்கத்தா, மேற்கு வங்கம்

★ ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் ஷிப்யார்ட் லிட் (HSL) நிறுவனத்தில் இந்திய கடற்படைக்கான கப்பல்களுக்கு எஃகு வெட்டுதல் நிகழ்வுக்கு பாதுகாப்புத்துறைச்செயலர் கிரிதர் அரமனே தலைமை வகித்தார். கடற்படைக்கான ஐந்து கப்பல்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் HSL நிறுவனத்துடன், கடற்படை 2023 ஆகஸ்ட்டில் கையெழுத்திட்டது. 40,000 டன்களுக்கும் அதிகமான எடைத்திறன்களைக்கொண்ட இந்தக் கப்பல்கள் எரிபொருள், நீர், வெடிபொருட்கள் உள்ளிட்டவற்றை எடுத்துச்சென்று கடலில் நீண்டகாலம் செயல்படும் தன்மைகொண்டவையாகும். இக்கப்பல்கள் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். முற்றிலும் உள்நாட்டு வடிவமைப்பில் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தே பெரும்பாலான உபகரணங்களை வாங்கி இந்தக்கப்பல்கள் வடிவமைக்கப்படுகின்றன.

### 10. 2024 – ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் நடைபெற்ற இடம் எது?

**அ. பிஷ்கெக், கிர்கிஸ்தான்** ✓

ஆ. பெய்ஜிங், சீனா

இ. புது தில்லி, இந்தியா

ஈ. துஷான்பே, தஜிகிஸ்தான்

★ 2024 – ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடந்தது. அங்கு இந்தியாவின் உதித் ஆடவர் ஃப்ரீஸ்டைல் 57 கிகி பிரிவிலும் அபிமன்யு 70 கிகி பிரிவிலும் வெள்ளி வென்றனர். அபிமன்யுவும் விக்கியும் அந்தந்தப் பிரிவுகளில் வெண்கலங்களையும் வென்றனர்.

★ ஈரான், கிர்கிஸ்தான் மற்றும் வட கொரிய போட்டியாளர்களைத் தோற்கடித்த போதிலும், ஜப்பானின் கென்டோ யுமியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் உதித்தால் வெள்ளியே வெல்ல முடிந்தது. கடந்த 2019ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா தங்கம் வெல்லாமல் போட்டியை நிறைவு செய்வது இது முதல் முறையாகும்.

**11. அண்மையில், 2024 – நெகிழிக்கழிவு உற்பத்தியானது உலக கழிவு மேலாண்மைத்திறனை விஞ்சும் நாள் அறிக்கையை வெளியிட்ட இலாப நோக்கற்ற அமைப்பு எது?**

அ. எர்த் ஆக்ஷன் ✓

ஆ. அமெரிக்க தேசிய செஞ்சிலுவை சங்கம்

இ. யுனைடெட் வே

ஈ. INSO




★ எர்த் ஆக்ஷன் அமைப்பானது 2024 – நெகிழிக்கழிவு உற்பத்தியானது உலக கழிவு மேலாண்மைத்திறனை விஞ்சும் நாள் (Plastic Overshoot Day) அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை உலகளாவிய நெகிழிக் கழிவுகள் நிர்வகிக்கக்கூடிய அளவைத்தாண்டி சுற்றுச்சூழலுக்கு தீங்குவிளைவிக்கும் அளவுக்கு உயர்வதைக் குறிக்கிறது. நெகிழிக்கழிவு உற்பத்தியானது உலக கழிவு மேலாண்மைத்திறனை விஞ்சும் நாளானது செப்டம்பர்.05 அன்று கடைப்பிடிக்கவும் இந்தியாவில் ஏப்ரல்.23 அன்று கடைப்பிடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

★ இந்த அறிக்கையின்படி, 2021 முதல் 7.11% நெகிழிக்கழிவுகள் அதிகரித்துள்ளன; 60% நெகிழிக் கழிவுகளுக்கு 12 நாடுகளே பொறுப்பாகும். குறைந்த நெகிழிக்கழிவுகளை உருவாக்கும் & மாசுபடுத்தும் நாடாக வகைப்படுத்தப்பட்ட இந்தியா, முறையற்ற அகற்றல் மற்றும் சேர்க்கை பயன்பாடுபோன்ற சவால்களை எதிர்கொள்கிறது.

**12. 2024 – நெகிழிக்கழிவு உற்பத்தியானது உலக கழிவு மேலாண்மைத்திறனை விஞ்சும் நாள் அறிக்கையின்படி, உலகளவில் தனிநபர் நெகிழிக்கழிவு உற்பத்தி விகிதங்களில் மிகக்குறைந்த நாடுகளுள் ஒன்றாக உள்ள நாடு எது?**

அ. இந்தியா ✓

ஆ. இலங்கை

இ. மியான்மர்

ஈ. பிலிப்பைன்ஸ்



★ சுவிச்சர்லாந்தின் EA எர்த் ஆக்ஷனின் அண்மைய அறிக்கை, உலகின் 60% வீணான நெகிழிக்கழிவுகளுக்கு பங்களிக்கும் முதல் பன்னிரண்டு நாடுகளில் இந்தியாவும் ஒன்று என தெரிவித்துள்ளது. 2024 ஏப்ரல்.12 அன்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையானது, தவறான முறையில் நிர்வகிக்கப்படும் கழிவுக்குறியீட்டில் எரித்திரியாவை மிகமோசமானதாக முன்னிலைப்படுத்தியுள்ளது. பெர்முடா கடைசி இடத்தில் உள்ளது.

★ இந்தியாவின் தனிநபர் நெகிழிக்கழிவு உற்பத்தியானது உலகிலேயே மிகக்குறைந்த அளவாக ஆண்டுக்கு எட்டுக் கிலோவாக உள்ளது; ஆனால் 2024ஆம் ஆண்டில் அதன் தவறான மேலாண்மைக்கழிவு 7.4 மில்லியன் டன்களாக 'மிக அதிகமானதாக' உள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மீன்பிடி தடைக்காலம் தொடக்கம்.**

வங்கக்கடல் பகுதிகளில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக ஆண்டுதோறும் ஏப்.15 முதல் ஜூன் 14 வரை மொத்தம் 61 நாள்களுக்கு கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரையிலான கிழக்குக் கடற்கரைப்பகுதிகளில் விசைப்படகுகள் மூலம் ஆழ்கடலுக்குச்சென்று மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தடைக்காலம் முதலில் 45 நாள்களாக இருந்து வந்த நிலையில் 2017ஆம் ஆண்டு முதல் 61 நாள்களாக அதிகரிக்கப்பட்டது. இத்தடைக்காலத்தின்போது, மீனவர்கள் தங்கள் விசைப்படகுகள், வலைகளை பழுதுபார்க்கும் பணியில் ஈடுபடுவர். இவர்களுக்கு அரசு சார்பில் ₹6,000 உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. உலகின் மிகப்பெரிய கலப்பு முறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா நிறுவப்படவுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத்** ✓

இ. இராஜஸ்தான்

ஈ. ஒடிசா



★ அதானி குழுமத்தின் ஓர் அங்கமான அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம், குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள கௌடாவில் உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காவை நிர்மாணித்து வருகிறது. இது 538 சகிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித்திறன் 30 GWஆக திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது ₹1.5 இலட்சம் கோடி முதலீட்டில், 2 GW மின்னுற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2025 மார்ச்சுக்குள் 6 GWஆக அது விரிவாக்கப்படும். இது 81 பில்லியன் அலகுகளை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.


**2. பாதுகாப்புத் துறையில் இந்தியாவுடன் $375 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடு எது?**

**அ. பிலிப்பைன்ஸ்** ✓

ஆ. வியட்நாம்

இ. எகிப்து

ஈ. மலேசியா



★ எத்தியோப்பியா, மொசாம்பிக், ஐவரி கோஸ்ட், பிலிப்பைன்ஸ், ஆர்மீனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுடன் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த உறவுகளை இந்தியா வலுப்படுத்தவுள்ளது. இந்த முன்முயற்சி அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு இடையே உலகளாவிய கூட்டாண்மைகளை விரிவுபடுத்துவதற்கான இந்திய நாட்டின் குறிக்கோளுடன் ஒத்துப்போகிறது. தென்சீனக்கடலில் சீனதேசத்தின் உறுதிப்பாட்டை எதிர்கொள்வதற்காக பிலிப்பைன்ஸுடனான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதை இந்தியா தனது நோக்கமாகக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அண்மைய ஒப்பந்தங்களில் பிரமோஸ் ஏவுகணைகளுக்கான $375 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தமும் அடங்கும்.

**3. 2024 – மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Encouraging Scientific Curiosity** ✓

ஆ. Way for Space

இ. Conservation of Outer Space

ஈ. Beginning of the Space Era for Mankind



★ மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச நாள் ஆண்டுதோறும் ஏப்.12 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 1961ஆம் ஆண்டில் விண்வெளிக்குப் பயணம் மேற்கொண்ட முதல் மனிதரான யூரி ககாரின் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அமைதியான விண்வெளி ஆய்வுக்கு வாதிடும் நோக்கில் கடந்த 2011இல் ஐநா அவை இந்த நாளை அறிவித்தது. 2024ஆம் ஆண்டில் வரும் மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருள், "Encouraging Scientific Curiosity" என்பதாகும்.

**4. அண்மையில், பிரித்தானியாவால் இந்தியாவுக்கான முதல் பெண் உயராணையராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. லில்லி குணசேகர்

**ஆ. லிண்டி கேமரூன்** ✓

இ. அலிசியா ஹெர்பர்ட்

ஈ. கில் அட்கின்சன்



★ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணாக்கரும், இங்கிலாந்தின் தேசிய இணையவெளிப் பாதுகாப்பு மையத்தின் முன்னாள் தலைமைச் செயல்அதிகாரியுமான லிண்டி கேமரூன், இந்தியாவுக்கான முதல் பெண் உயர் ஆணையராக பிரித்தானியாவால் நியமிக்கப்படுள்ளார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நியமனம், இங்கிலாந்து–இந்தியா இடையேயான 70 ஆண்டு உறவுகளை எடுத்துக்காட்டுகிறது.

**5. எந்த இருநாடுகளுக்கு இடையே, 'டஸ்ட்லிக்' என்ற கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தப்பட்டது?**

**அ. இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான்** ✓



ஆ. இந்தியா மற்றும் ரஷ்யா

இ. இந்தியா மற்றும் தஜிகிஸ்தான்

ஈ. உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான்

★ இந்தியா–உஸ்பெகிஸ்தான் இடையேயான 5ஆவது கூட்டு இராணுவப்பயிற்சியான டஸ்ட்லிக்கில் பங்கேற்பதற்காக இந்திய இராணுவ அணியினர் புறப்பட்டுச்சென்றனர். இப்பயிற்சியானது 2024 ஏப்ரல்.28 வரை உஸ்பெகிஸ்தான் குடியரசின் டெர்மெஸில் நடத்தப்படவுள்ளது. 'டஸ்ட்லிக்' பயிற்சி, இந்தியாவிலும் மற்றும் உஸ்பெகிஸ்தானிலும் மாறி மாறி நடத்தப்படும் வருடாந்தர நிகழ்வாகும். முந்தைய பயிற்சி கடந்த 2023ஆம் ஆண்டு பிப்ரவரியில் பித்தோராகரில் (இந்தியா) நடத்தப்பட்டது.

★ ராணுவ ஒத்துழைப்பை வளர்ப்பது, மலைப்பாங்கான மற்றும் அரை நகர்ப்புற நிலப்பரப்பில் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைந்த திறன்களை மேம்படுத்துவது, 'டஸ்ட்லிக்' பயிற்சியின் நோக்கமாகும். உயர் அளவிலான உடற்தகுதி, கூட்டுத்திட்டமிடல், கூட்டாக உத்திகள் வகுத்தல், சிறப்பு ஆயுத திறன்களின் அடிப்படைகள் ஆகியவற்றிலும் இந்தப் பயிற்சி கவனம் செலுத்தும்.

**6. அண்மையில், 'Queqiao–2' என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**

அ. உருசியா



ஆ. ஜப்பான்

இ. இந்தியா

**ஈ. சீனா** ✓

★ சீனாவின் தேசிய விண்வெளி முகமையானது, 'Queqiao–2' என்ற செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியதாக அறிவித்துள்ளது. Queqiao–2 அல்லது Magpie Bridge 2 என்ற பெயருடைய இச்செயற்கைக்கோள் 1,200 கிலோ எடையுடையதாகவும் 4.2–மீட்டர் பரவளைய ஆண்டெனாவ உடையதாகவும் உள்ளது. இது 2030ஆம் ஆண்டு வரை புவிக்கும் நிலவில் நடத்தப்படும் ஆய்வுகளுக்கும் இடையிலான தகவல்தொடர்புகளை மிகவும் எளிதாக்கும்.

**7. கௌதா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. குஜராத்** ✓



ஆ. இராஜஸ்தான்

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா

★ அதானி கிரீன் எனர்ஜி நிறுவனமானது குஜராத் மாநிலத்தின் கௌடா பகுதியில் உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி பூங்காவை நிறுவியுள்ளது. 538 சகிமீ பரப்பளவில், 45 GW திறன்கொண்ட இப்பூங்கா, முதன்மையாக சூரிய ஆற்றலில் இயங்குகிறது. குஜராத் மாநிலத்தின் கட்ச் பகுதியில் உள்ள கௌடா, அதீத சூரியக்கதிர்வீச்சு மற்றும் காற்றின் வேகத்தைக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள இது, எல்லைப்பாதுகாப்புப்

படையினரால் மேற்பார்வையில் உள்ளது. தற்போது, ₹1.5 இலட்சம் கோடி முதலீட்டில் 30 MW தூய மின்சாரத்தை உற்பத்தி செய்ய அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**8. PACE செயற்கைக்கோளை ஏவிய விண்வெளி நிறுவனம் எது?**

**அ. NASA ✓**

ஆ. ISRO

இ. JAXA

ஈ. CNSA



★ சூரிய–ஒத்திசைவு சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்ட NASAஇன் PACE செயற்கைக்கோள் தற்போது உயர்தர புவி கண்காணிப்புத் தரவுகளை பொதுவில் பகிர்ந்துகொள்ள முடிவு செய்துள்ளது. ஓஷன் கலர் இன்ஸ்ட்ருமென்ட் (OCI) உடன் பொருத்தப்பட்டிருக்கும் துருவமானிகளான SPEXone மற்றும் HARP2 போன்றவற்றுடன் இது தூசு, மேகம் மற்றும் கடல்சார் ஆராய்ச்சியை மேம்படுத்துகிறது. OCIஇன் பரந்த நிறமாலை வரம்பானது அலைதாவரங்களை இனங்காண உதவுகிறது. இந்தத் தரவு கடல்வாழ் உயிரினங்கள், காற்றுத்துகள்கள், மீன்வள ஆரோக்கியம், பாசிப் பூக்கள், மாசுபாடு மற்றும் வளிமண்டலத்திலும் பெருங்கடல்களிலும் ஏற்படும் காலநிலை மாற்ற தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளை எளிதாக்குகிறது மற்றும் அறிவியல் புரிதலை மேம்படுத்துகிறது.


**9. நீரிலிருந்து நுண் நெகிழித்துகள்களை அகற்றுவதற்காக அண்மையில் ஒரு நிலையான நீரேறிய களியை (hydro gel) உருவாக்கிய அமைப்பு எது?**

அ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்

**ஆ. இந்திய அறிவியல் கழகம் ✓**

இ. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கவுன்சில்

ஈ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்



★ இந்திய அறிவியல் கழகமானது நீரிலிருந்து நுண் நெகிழிகளை அகற்றுவதற்காக ஒரு புதிய நீரேறிய களியை உருவாக்கியுள்ளது. இந்த நீரேறிய களியானது ஒரு தனித்துவமான பாலிமர் வலையமைப்புடன் புறவூதா ஒளியைப் பயன்படுத்தி நுண்நெகிழித்துகள்களை பிணைத்து சிதைக்கிறது. இது 3 பாலிமர் அடுக்குகளை உள்ளடக்கியுள்ளது. அவை: சிட்டோசன், பாலிவினைல் ஆல்கஹால் மற்றும் பாலிஅனைலின் ஆகும்.

★ செப்புக்கு மாற்றான பாலிஆக்சோமெட்டலேட் நானோக்ளஸ்டர்களுடன் இணைந்து இவை வினையூக்கிகளாக செயல்படுகிறது. பொதுவாக 5மிமீ–க்கும் குறைவான விட்டம் கொண்டவை நுண்நெகிழித்துகள்களாக, முதனிலை மற்றும் இரண்டாம் நிலை என வகைப்படுத்தப்படுகின்றன.

**10. அண்மையில், அழற்சி எதிர்ப்புமருந்தான, 'Nimesulide'ஐ பயன்படுத்துவதுகுறித்து மருந்து பாதுகாப்பு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. ICMR

**ஆ. இந்திய மருந்தக ஆணையம் ✓**

இ. இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. தகவல்தொடர்பு மற்றும் அறிவாற்றல் நரம்பியல் நிறுவனம்




★ இந்திய மருந்தக ஆணையமானது 'நிம்சுலைடு' என்ற அழற்சி எதிர்ப்புமருந்தைப் பற்றிய பாதுகாப்பு எச்சரிக்கையை வெளியிட்டது. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனமான இந்திய மருந்தக ஆணையம் மருந்துகுறித்த தரநிலைகளை தொடர்ந்து புதுப்பித்து வருகிறது. இது மருந்து அடையாளம், தூய்மை மற்றும் மனித மற்றும் விலங்குகளின் நலத்திற்கான தரநிலைகளை நிறுவுகிறது.

11. **அறிவியல் அடிப்படையிலான இலக்குகள் முன்னெடுப்பின் (SBTi) முதன்மை நோக்கம் என்ன?**

அ. புவி வெப்பமடைதலை தொழிற்துறைக்கு முந்தைய நிலையைவிட 2°C-க்குக் குறைவாகக் கட்டுப்படுத்துதல் ✓

ஆ. வட இந்தியாவில் இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல்

இ. கடல் வளங்களின் நிலையான ஆய்வை ஊக்குவித்தல்

ஈ. பெருநிறுவன சமூகப்பொறுப்பை ஊக்குவித்தல்

★ கடந்த 2015ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அறிவியல் அடிப்படையிலான இலக்குகள் முன்னெடுப்பு (Science Based Targets Initiative – SBTi), பாரிஸ் உடன்படிக்கைக்கு இணங்க பைங்குடில்இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்க அறிவியல் அடிப்படையிலான இலக்குகளை நிறுவுவதில் நிறுவனங்களை ஆதரிக்கிறது. இது (SBTi) இலக்குகளை தன்னிச்சையாக சரிபார்ப்பதோடு அண்மைய காலநிலை அறிவியலுடன் அதன் சீரமைவை உறுதிசெய்கிறது. இது 2030ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கும் 2050ஆம் ஆண்டளவில் நிகர–சுழிய உமிழ்வை அடைவதற்கும் அவசியமான, குறைந்த கால மற்றும் நீண்டகால இலக்குகளை வேறுபடுத்துகிறது.

12. **குளோபல் பாரஸ்ட் வாட்ச் கண்காணிப்புத் திட்டத்தின் அண்மைய தரவுகளின்படி, 2000ஆம் ஆண்டிலிருந்து இந்தியா எவ்வளவு பரப்பில் அமைந்த மரங்களை இழந்துள்ளது?**



அ. 3.13 மில்லியன் ஹெக்டேர்

ஆ. 1.23 மில்லியன் ஹெக்டேர்

இ. 3.25 மில்லியன் ஹெக்டேர்

**ஈ. 2.33 மில்லியன் ஹெக்டேர்** ✓

★ குளோபல் ஃபாரஸ்ட் வாட்ச் கண்காணிப்புத் திட்டத்தின் படி, 2000ஆம் ஆண்டு முதல், இந்தியா 2.33 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் அமைந்த மரங்களை இழந்துள்ளது. உலக வளக்கழகத்தின் முன்னெடுப்பான குளோபல் பாரஸ்ட் வாட்ச், உலகளவில் உள்ள காடுகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்கும் நோக்கத்திதற்காக செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்துகிறது. இது முதன்மையாக காடுகளின் பரப்பு, இழப்பு மற்றும் ஆதாயத்தை மதிப்பிடுகிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஒவ்வோர் ஆண்டும், 'உலக கலை நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. 13 ஏப்ரல்

ஆ. 14 ஏப்ரல்

**இ. 15 ஏப்ரல்** ✓

ஈ. 16 ஏப்ரல்

★ கலையின் உலகளாவிய தாக்கம் மற்றும் லியோனார்டோ டா வின்சியின் பாரம்பரியத்தை கொண்டாடும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்.15 அன்று உலக கலை நாள் கொண்டாடப்படுகிறது. 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "A Garden of Expression: Cultivating Community Through Art" என்பதாகும். வகுப்புவாத பிணைப்புகள் மற்றும் புரிதலை வளர்ப்பதில் கலையின் பங்கை இது எடுத்துக்காட்டுகிறது. இந்த வருடாந்திர கடைப்பிடிப்பு, தகவல் தொடர்பு, கலாச்சார அடையாளம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகியவற்றில் கலையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது; மேலும் உலகெங்கிலும் உள்ள கலைஞர்களின் பங்களிப்புகளைப் போற்றுகிறது.

**2. MSC ARIES கப்பலுடன் தொடர்புடைய நாடு எது?**



அ. மாலத்தீவுகள்

ஆ. இந்தியா

**இ. இஸ்ரேல்** ✓

ஈ. ஈராக்

★ ஈரானிய கடற்படை 17 இந்திய பணியாளர்களுடன் ஹார்முஸ் ஜலசந்தி அருகே இஸ்ரேலிய கப்பலான MSC ஏரிஸ் கப்பலை கைப்பற்றியது. ஈரானிய அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அக்கப்பலையும் அதில் உள்ளோரையும் பாதுகாப்பாக மீட்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. ஈரான் வெளியுறவு அமைச்சர் அமிரப்துல்லாஹியன், இந்திய அதிகாரிகளை விரைவில் சந்திக்க தெஹ்ரான் அனுமதிக்கும் என்றார். அவர்கள் நாடு திரும்புவதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடினார்.

**3. Man–Portable Anti–Tank Guided Missile (MPATGM) என்ற ஆயுத அமைப்பை உருவாக்கிய அமைப்பு எது?**



அ. ISRO

**ஆ. DRDO** ✓

இ. CSIR

ஈ. IEA

★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் இந்திய ராணுவம் இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட Man–Portable Anti–Tank Guided Missile (MPATGM) என்ற ஆயுத அமைப்பின் கள சோதனைகளை வெற்றிகரமாக நடத்தின. DRDOஆல் வடிவமைக்கப்பட்ட இதில், லாஞ்சர், இலக்கு கையகப்படுத்தும் சாதனம் மற்றும் தீக்கட்டுப்பாட்டு அலகு ஆகியவை உண்டு. இதன் சோதனைகள் 2024 ஏப்ரல்.13 அன்று பொக்ரானில் நடந்தன.

**4. ஜியாதால் ஆறானது கீழ்காணும் எந்த ஆற்றின் கிளையாறாகும்?**



அ. கங்கை

**ஆ. பிரம்மபுத்திரா** ✓

இ. காவேரி

ஈ. கோதாவரி

★ பிரம்மபுத்திராவின் வடகரை கிளையாறான ஜியாதால் ஆறு, அருணாச்சல பிரதேச மாநிலத்தில் இமயமலையில் உற்பத்தியாகிறது. அஸ்ஸாமில் உள்ள தேமாஜி மாவட்டம் வழியாக செல்லும் அவ்வாற்றின் போக்கில் பின்னப்பட்ட கால்வாய்கள் பல உள்ளன. இது செலாமுக் அருகே பிரம்மபுத்திராவில் இணைகிறது; ஆனால் தற்போது அணைக் கட்டு காரணமாக சுபன்சிரி ஆற்றுடன் இணைகிறது. கனமழை பொழியும் இதன் படுகை பகுதியில் (1053.20 சகிமீ) குறிப்பிடத்தக்க அளவுக்கு வண்டல் படிவு ஏற்படுகிறது.

**5. அண்மையில், உலகின் முதல் செயற்கைக்கோள் தொடரை (டியான்டாங்–1) உருவாக்கிய நாடு எது?**

அ. ஜப்பான்

ஆ. ரஷ்யா

**இ. சீனா** ✓

ஈ. இஸ்ரேல்



★ சீன அறிவியலாளர்கள் டியான்டாங்–1 என்ற செயற்கைக்கோள் தொடரை அறிமுகப்படுத்தினர். இது அலைபேசி கோபுரங்கள் (towers) போன்ற தரை உள்கட்டமைப்பு இல்லாமல் செயற்கைக்கோள்–அடிப்படையில் திறன்பேசியில் அழைப்புகளை மேற்கொள்வதற்கான ஒரு முன்னோடி திட்டமாக இருக்கும். டியான்டாங்–1 ஆனது 3 செயற்கைக் கோள்களை புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் ~36000 கிமீ உயரத்தில் னிலை நிறுத்தியுள்ளது; அவை மத்திய கிழக்கு முதல் பசிபிக் பெருங்கடல் வரையிலான ஆசிய–பசிபிக் பகுதியை உள்ளடக்கியதாக உள்ளது.

★ ஹூவாவே நிறுவனம், டியான்டாங் செயற்கைக்கோள்களுடன் நேரடியாக இணைப்பு மேற்கொண்டு, செயற்கைக் கோள் அழைப்புகளை மேற்கொள்ளும் முதல் திறன்பேசியை 2023 செப்டம்பரில் வெளியிட்டது. புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையானது செயற்கைக்கோள்கள் பூமியின் சுழற்சியுடன் பொருந்துவதை உறுதிசெய்கிறது.

**6. சிறப்பு ஒலிம்பிக் பாரத் என்பது கீழ்காணும் எந்த அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேசிய விளையாட்டு கூட்டமைப்பு ஆகும்?**

**அ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்** ✓

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. மின்சார அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

युवा कार्यक्रम
एवं खेल मंत्रालय
MINISTRY OF
YOUTH AFFAIRS
AND SPORTS
सत्यमेव जयते

★ இந்தியாவின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பான சிறப்பு ஒலிம்பிக் பாரத், ஏப்.22ஆம் தேதி அன்று தேர்தல்மூலம் தமிழ்நாட்டில் மாவட்ட அலகுகளை நிறுவுகிறது. 2001ஆம் ஆண்டில் இந்திய அறக்கட்டளைச் சட்டம், 1882இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட இது, சிறப்பு ஒலிம்பிக்ஸ் இன்டர்நேஷனலின் அங்கீகாரம் பெற்றதாகும். இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இது, ஒரு முன்னுரிமை வகை தேசிய விளையாட்டு கூட்டமைப்பு, அறிவுசார் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான விளையாட்டுகளில் கவனம் செலுத்துகிறது.

**7. நிஷி பழங்குடியினரால் கொண்டாடப்படுகிற லாங்டே திருவிழாவுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

**அ. அருணாச்சல பிரதேசம்** ✓

ஆ. இராஜஸ்தான்

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா



★ லாங்டே திருவிழா என்பது அருணாச்சல பிரதேச மாநிலத்தில் வாழும் நிஷி பழங்குடியினரால் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். விலங்குகளை பலியிடுவதை தடைசெய்கிறமையால் இது பழங்குடியினரால் கொண்டாடப்படும் திருவிழாக்களிலேயே தனித்துவமானதாக உள்ளது. விலங்குகளுக்கு மாறாக, பலிபீடம் இறகுகள் மற்றும் மூங்கில்

மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பழமையான நிஷி திருவிழாக்களில் ஒன்றான லாங்டே யுல்லோ பல்வேறு நைஷி குலத்தினரிடையே கொண்டாடப்படுகிறது.

**8. சமீபத்தில் தனது முதல் ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பை வென்ற ஜொனாதன் கிறிஸ்டி சார்ந்த நாடு எது?**




அ. வியட்நாம்

**ஆ. இந்தோனேசியா ✓**

இ. தாய்லாந்து

ஈ. சிங்கப்பூர்

★ ஏப்ரல்.14 அன்று நடந்த 2024 – பாட்மிண்டன் ஆசிய சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் சீன வீராங்கனை லி ஷி ஃபெங்கை தோற்கடித்து இந்தோனேசிய பாட்மிண்டன் வீரர் ஜொனாதன் கிறிஸ்டி தனது முதல் ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார். ஏப்ரல் 9–14 வரை சீனாவின் நிங்போவில் நடைபெற்ற இந்த நிகழ்வு, BWF ஆகும். சூப்பர் 1000 போட்டியின் வெற்றியாளர்களுக்கு 1000 புள்ளிகள் வழங்கப்படும். இச்சாம்பியன்ஷிப், பாரிஸில் நடைபெறவுள்ள 2024 – கோடைகால ஒலிம்பிக்கிற்கான தகுதிப்போட்டியாகச் செயல்பட்டது.

**9. குச்சிப்புடி நடனம் என்பது கீழ்காணும் எந்த மாநிலத்தின் பாரம்பரிய நடனமாகும்?**



அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திர பிரதேசம் ✓**

இ. தெலுங்கானா

ஈ. மகாராஷ்டிரா

★ ஆந்திர பிரதேச மாநிலத்திலிருந்து உருவான ஓரிந்திய பாரம்பரிய நடன வடிவமான குச்சிப்புடிக்கு ஆதரவு குறைந்து வருவதால் அது உய்வு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. வரலாற்று ரீதியாக, 15ஆம் நூற்றாண்டில் சித்தேந்திர யோகியின்கீழ் ஒரு தூய நடன வடிவமாக உருவானதான் இந்தக் குச்சிப்புடி. இது சிக்கலான பாத அசைவுகள் மற்றும் கதைசொல்லல் ஆகியவற்றிற்கு பெயர் பெற்றது. வைஷ்ணவத்தில் ஆழமாக வேரூன்றிய குச்சிப்புடி, பெரும்பாலும் கிருஷ்ணரின் கதைகளை விவரிக்கவே ஆடப்படுகிறது.

**10. 'ஆபரேஷன் மேகதூதத்தின்' முதன்மை நோக்கம் என்ன?**



அ. லடாக்கில் இராணுவ தளம் அமைப்பது

ஆ. இமயமலையில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை கைப்பற்றுவது

இ. அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவது

**ஈ. சியாச்சின் பனிப்பாறையை தக்கவைப்பது ✓**

★ வட லடாக்கில் அதன் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த தளத்திற்கு இன்றியமையாத சியாச்சின் பனிப்பாறையைப் பாதுகாப்பதற்காக இந்திய இராணுவம், 'ஆபரேஷன் மேக்தூதம்' தொடங்கி 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 1984இல் தொடங்கப்பட்ட இது, பாகிஸ்தானின் பிராந்திய உரிமைகோரல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, உலகின் மிகவுயத்தில் அமைந்த போர்க்களத்தில் இந்தியாவின் இருப்பை நிறுவியது.

★ லெப்டினன்ட் ஜெனரல்கள் சிப்பர் மற்றும் ஹூன் தலைமையில், மேஜர் ஜெனரல் சர்மாவுடன் இணைந்து, இந்த நடவடிக்கை இராணுவம் மற்றும் வான்படை இடையே குறிப்பிடத்தக்க ஒருங்கிணைப்பில் செயல்பட்டது. இதன் விளைவாக சியாச்சின் பனிப்பாறையின் கட்டுப்பாட்டை இந்தியா பெற்றது.

11. 'குத்சியா பாக்' அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. இராஜஸ்தான்

ஆ. உத்தர பிரதேசம்

**இ. தில்லி** ✓

ஈ. ஜம்மு காஷ்மீர்



★ முகலாயப் பேரரசர் முகமது ஷா ரங்கீலாவின் மனைவி குத்சியா பேகத்தால் 1748ஆம் ஆண்டு கட்டப்பட்ட, 'குத்சியா பாக்', தில்லி மேம்பாட்டு ஆணையத்தால் அண்மையில் புதுப்பிக்கப்பட்டது. வடக்கு தில்லியில் அமைந்துள்ள இது, பாரசீக சார்–பாக் பாணியைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இத்தோட்டத்தின் மீதங்களுள் அதன் பிரம்மாண்ட மேற்கு நுழைவாயில், குத்சியா மசூதி மற்றும் சிவப்பு மணற்கற்களால் ஆன அரங்குகள் ஆகியவை அடங்கும். இங்குள்ள மசூதியை ASI பாதுகாத்து வருகிறது.

12. அண்மையில், பன்னிரண்டாவது முறையாக தேசிய மகளிர் கேரம் பட்டத்தை வென்றவர் யார்?

**அ. ராஷ்மி குமாரி** ✓

ஆ. N நிர்மலா

இ. காஜல் குமாரி

ஈ. ஷர்மிளா சிங்



★ மும்முறை உலக சாம்பியனான ராஷ்மி குமாரி, 51ஆவது தேசிய கேரம் சாம்பியன்ஷிப்பில், K நாகஜோதியை 25–8, 14–20, 25–20 என்ற கணக்கில் தோற்கடித்து தனது 12ஆவது தேசிய மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். ONGCஇல் பணிபுரியும் ராஷ்மி குமாரி, பெண்களுக்கான இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றார். ஆண்கள் பிரிவில், K ஸ்ரீனிவாஸ் தனது நான்காவது தேசிய ஒற்றையர் பட்டத்தை S ஆதித்யாவை 25–0, 19–6 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்து கைப்பற்றினார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வந்தே பாரத்...**

நாட்டில் முதல் வந்தே பாரத் ரெயில் புதுதில்லி – வாரணாசி இடையே கடந்த 2019ஆம் ஆண்டு பிப்ரவரி.15ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 284 மாவட்டங்களை இணைக்கும் வகையில் 100 வழித்தடங்களில் 102 வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

---

**2. இராக்கெட் எஞ்சினில் இலகுரக கட்டமைப்பு: வெற்றிகரமாக பரிசோதித்தது ISRO.**

இராக்கெட் எஞ்சினில் உந்துவிசைக்கு பயன்படுத்தப்படும் கட்டமைப்பை (நாசில்) மிகவும் இலகுவான எடையில் உருவாக்கி வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக ISRO தெரிவித்துள்ளது. ராக்கெட் எஞ்சின் தொழில்நுட்பத்தில் புதிய நுட்பத்திலான இந்தக் கட்டமைப்பை திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையம் வடிவமைத்துள்ளது.

PSLV வகை இராக்கெட்டின் நான்காம் நிலையில் (PS–4) தற்போது கொலம்பியம் உலோகக்கலவை மூலக்கூறால் ஆன நாசில்களுடன் கூடிய இரு எஞ்சின்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கு மாற்றாக மிகவும் இலகுவான எடை கொண்ட நாசில் கார்பன்–கார்பன் மூலக்கூறு நுட்பத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம் இராக்கெட்டின் உந்துவிசை திறன், எரிசக்தி ஆற்றல்திறன் உள்ளிட்டவை மேம்படுவதுடன் நாசில் கட்டமைப்பின் எடை ஏறத்தாழ 67% குறையும். இதன்வாயிலாக, தற்போது உள்ள எடையைக் காட்டிலும் கூடுதலாக 15 கிலோகிராம் கொண்ட ஆய்வுக்கருவிகளை PS–4 நிலையின்மூலம் விண்ணுக்குச் செலுத்த முடியும். இதற்கான பரிசோதனைகள் திருநெல்வேலி மாவட்டம், மகேந்திரகிரியில் உள்ள ஆய்வுமையத்தில் மேற்கொள்ளப்பட்டன.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. பாரத மின்னணு நிறுவனமானது (BEL) அண்மையில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்புக்காக கீழ்காணும் எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

**அ. ஐஐடி மண்டி** ✓

ஆ. ஐஐடி மெட்ராஸ்

இ. ஐஐடி கான்பூர்

ஈ. ஐஐடி பம்பாய்

★ பாரத் மின்னணு நிறுவமானது ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் கூட்டிணைந்து பணியாற்றுவதற்காக இமாசல பிரதேச மாநிலத்தில் உள்ள மண்டியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் குறைக்கடத்திகள், குவாண்டம் தொழினுட்பங்கள் மற்றும் டிரோன்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இது BEL மற்றும் IIT–மண்டிக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதையும், BEL அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் தீர்வுகளின் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. டைகர் ஹில் என்பது மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள எந்த வனவிலங்கு சரணாலயத்தின் ஒருபகுதியாகும்?**



**அ. செஞ்சல் வனவிலங்கு சரணாலயம்** ✓


ஆ. சஜ்நேகாலி வனவிலங்கு சரணாலயம்

இ. ஜோர் போக்ரி வனவிலங்கு சரணாலயம்

ஈ. ராம்நாபகன் வனவிலங்கு சரணாலயம்

★ கொல்கத்தாவில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் கிழக்கு மண்டல அமர்வு, டைகர் ஹில்லின் சுற்றுச்சூழல் சீரழிவு குறித்து டார்ஜிலிங் மாவட்ட நிர்வாகம், நடுவண் அரசு மற்றும் மாநில அரசின் முக்கிய துறைகளுக்கு அறிவிப்பானை அனுப்பியுள்ளது. மனுதாரர் சுபாஸ் தத்தாவின் புகார்கள், தனித்துவம் மிக்க டைகர் ஹில்லிற்கு தீங்கு விளைவிக்கும் செயல்களை மேற்கோள் காட்டி, மனு அளித்ததன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செஞ்சல் வனவிலங்கு சரணாலயத்தின் ஒருபகுதியான டைகர் ஹில், கஞ்சஞ்சங்கா மலையின் மீதிலிருந்து சூரிய உதயக் காட்சிகளைக் காண்பதற்கு ஏற்ற இடமாகும். கடந்த 1915ஆம் ஆண்டி இது நிறுவப்பட்டது.

**3. ஒவ்வோர் ஆண்டும், 'உலக இரத்தம் உறையா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ. ஏப்ரல்.16

**ஆ. ஏப்ரல்.17** ✓

இ. ஏப்ரல்.18

ஈ. ஏப்ரல்.19

★ உலக இரத்தம் உறையா நாள், ஆண்டுதோறும் ஏப்ரல்.17 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது ஹீமோபிலியா மற்றும் இரத்தப்போக்கு கோளாறுகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. மரபணு குறைபாடு அல்லது தன்னுடல் தாக்குநோய் காரணமாக இரத்தத்தை உறையச் செய்யும் குருதிநீர்மக் காரணிகளின் செயல்பாடு குன்றுவதால், இந்நோய் உண்டாகிறது. உடலில், உள் மற்றும் வெளிக்காயங்கள் ஏற்படும் போது இரத்தம் உறையாமல் தொடர்ந்து குருதிப்பெருக்கு ஏற்படுவதால் உயிர் அபாயம் உள்ள நோய்களில் இதுவும் ஒன்று. 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Equitable access for all: recognizing all bleeding disorders" என்பதாகும்.

**4. ப்ளூ ஆர்ஜின் NS-25 திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்குச் செல்லும் முதல் இந்தியர் யார்?**



**அ. கோபி தோட்டக்குரா** ✓


ஆ. சந்தோஷ் குளங்கரா

இ. ராஜீவ் அகர்வால்

ஈ. சஞ்சய் சின்ஹா

★ ஜெப் பெசோஸால் நிறுவப்பட்ட ப்ளூ ஆர்ஜினின் NS-25 திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்குச் செல்லவுள்ள முதல் இந்தியராக கோபி தோட்டகுரா வரலாறு படைக்கவுள்ளார். இந்த விண்வெளிப் பயணம் துணை சுற்றுப்பாதை மற்றும் சுற்றுப்பாதை பயணங்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. துணை சுற்றுப்பாதைக்குச் செல்லும் கலங்களான NS-25போன்றவை பூமிக்குத் திரும்புதற்குமுன் கார்மன் கோட்டை (~100 கிமீ) தாண்டிச்செல்கின்றன.

**5. அண்மையில், ஏவுகல எஞ்சின்களுக்கான கார்பன்-கார்பன் (C-C) முனையை (nozzle) உருவாக்கிய அமைப்பு எது?**



**அ. ISRO** ✓

ஆ. DRDO

இ. BHEL

ஈ. HAL

★ விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உருவாக்கிய இலகுரக கார்பன்-கார்பன் முனையை வெளியிட்டு, ஏவுகல எஞ்சின் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை ISRO அறிவித்தது. உந்தல் நிலைகள், குறிப்பிட்ட உந்துதல் மற்றும் உந்துதல்-எடை விகிதங்கள்போன்ற முக்கியமான அளவுருக்களை மேம்படுத்துவதன்மூலம் தாங்குசுமை திறனை அதிகரிக்க இம்மேம்பாடு உறுதியளிக்கிறது. கார்பன்-கார்பன் கலவைகள்போன்ற மேம்பட்ட பொருட்களை பயன்படுத்தியதன்மூலம், விதிவிலக்கான பண்புகளுடன் இந்த முனையை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**6. IMFஇன்படி, 2024-25 நிதியாண்டிற்கான இந்தியாவின் GDP வளர்ச்சிக் கணிப்பு என்ன?**




அ. 5.1%

**ஆ. 6.8%** ✓

இ. 7.1%

ஈ. 4.5%

★ IMF ஆனது 2024-25 நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சிக்கணிப்பை அதன் முந்தைய முன்கணிப்பிலிருந்து 30 அடிப்படைப் புள்ளிகள் அதிகரித்து 6.8%ஆக உயர்த்தியுள்ளது. வலுவான உள்நாட்டு தேவை மற்றும் அதிகரித்துவரும் உழைக்கும் வயது மக்கள்தொகை காரணமாக இந்தியாவின் வளர்ச்சி வலுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகளவில், 2024-25 நிதியாண்டு மற்றும் 2025-26 நிதி ஆண்டுக்கு 3.2% வளர்ச்சி தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே காலகட்டத்தில் சீனாவின் வளர்ச்சிக்கணிப்பு 4.6%ஐ விஞ்சி, உலகின் மிகவேகமாக வளரும் பொருளாதாரம் என்ற நிலையை இந்தியா தக்கவைத்துள்ளது.

**7. எந்த ஆண்டுக்குள் குப்பைகள் இல்லாத விண்வெளி என்ற நிலையை அடைய ISRO முடிவுசெய்துள்ளது?**



அ. 2025 ஆ. 2027

**இ. 2030** ✓ ஈ. 2035

★ ISRO தலைவர் S சோமநாத், 42ஆவது IADC ஆண்டு கூட்டத்தில், 2030ஆம் ஆண்டுக்குள் குப்பைகள் இல்லாத விண்வெளியை அடைவதற்கான இந்தியாவின் இலட்சியத்தை அறிவித்தார். விண்வெளித்துறையின் செயலரான S சோமநாத், விண்வெளி நிலைத்தன்மைக்கான குப்பைகளில்லா பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்த முன்முயற்சியானது தூய்மையான விண்வெளி சூழலை அடைவதற்கான விவாதங்களையும் செயல்களையும் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. 'கையா–BH3 (Gaia–BH3)' என்றால் என்ன?**

அ. தகவல் தொடர்பு செயற்கைக்கோள்

ஆ. அணுவாற்றல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

இ. ஆக்கிரமிப்பு களை

**ஈ. மிகப்பெரிய விண்மீன்சார் கருந்துளை** ✓



★ பால்வீதியில் அறியப்பட்ட மிகப்பெரிய விண்மீன்சார் கருந்துளையான, 'Gaia–BH3'ஐ வானியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். கையா திட்டத்தின் தரவுமூலம் கண்டுபிடிக்கப்பட்ட இது அதன் துணை விண்மீனில் அசாதாரண 'தள்ளாடலை' ஏற்படுத்துகிறது. ஆய்வகங்களால் உறுதிப்படுத்தப்பட்ட இது, நமது சூரியனைவிட 33 மடங்கு நிறை கொண்டதாக உள்ளது. இது அக்விலாவில் 1,926 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. அருகிலுள்ள மற்றொரு கருந்துளையான கையா–BH1, கிட்டத்தட்ட 10 சூரிய நிறைகளைக் கொண்டுள்ளது. தனுசு A* தான் பால்வெளியின் மிகப்பெரிய கருந்துளையாக இருந்து வருகிறது.

**9. அண்மையில், கீழ்காணும் எவ்விடத்தில், 'Emerging Technologies and Challenges for Exoskeleton' என்ற முதல் சர்வதேச பயிலரங்கை DRDO ஏற்பாடு செய்தது?**

**அ. பெங்களூரு** ✓

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. பம்பாய்



★ DRDO ஏற்பாடு செய்துள்ள, 'Emerging Technologies and Challenges for Exoskeleton' என்ற தலைப்பிலான சர்வதேச பயிலரங்கை பெங்களூரு நடத்துகிறது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலாளரான டாக்டர் சமீர் வி காமத்தால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த நிகழ்வு, இராணுவ மற்றும் சிவிலியன் மண்டலங்களில் புறச்சட்டக தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. Lt Gen JP மேத்யூ அதன் வரலாறு, சவால்கள் மற்றும் இரட்டைப் பயன்பாட்டுத் திறன்குறித்துப்பேசினார்.

**10. அண்மையில், ஒருங்கிணைந்த கடல்சார் படைகள் (CMF) தலைமையிலான நடவடிக்கையின் ஒருபகுதியாக அரபிக்கடலில் 940 கிகி போதைப்பொருட்களை கைப்பற்றிய இந்திய கடற்படைக் கப்பல் எது?**

அ. INS காவேரி

ஆ. INS சக்தி

**இ. INS தல்வார்** ✓

ஈ. INS வீர்



★ இந்திய கடற்படைக் கப்பலான INS தல்வார், ஒருங்கிணைந்த கடல்சார் படைகள் நடவடிக்கையின்கீழ் அரபிக்கடலில் 940 கிகி போதைப்பொருளை தடுத்து கைப்பற்றியது. பக்ரைனைத் தலைமையிடமாகக் கொண்ட ஒருங்கிணைந்த கடல்சார் படைகள், 3.2 மில்லியன் ச.மைல் கடற்பரப்பில், கப்பல் வழித்தடங்களைப் பாதுகாக்கிறது. இது பயங்கர வாதம், கடற்கொள்ளையைத் தடுப்பதோடு பிராந்திய ஒத்துழைப்பை வளர்க்கிறது; மேலும் கடல்சார் பாதுகாப்பையும் இது உறுதி செய்கிறது.

**11. தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் வீராணம் ஏரி அமைந்துள்ளது?**



அ. சென்னை

ஆ. செங்கல்பட்டு

**இ. கடலூர்** ✓

ஈ. திருநெல்வேலி

★ சென்னையின் குடிநீர் விநியோகத்திற்கு முதன்மை ஆதாரமாக விளங்கும் வீராணம் ஏரி, 2024 ஏப்ரலில் சுழிய மில்லியன் கன அடியை எட்டியதாக சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டு, 687.40 மில்லியன் கன அடியாக அதன் கொள்ளளவு இருந்த. அதன் மொத்த கொள்ளளவு 1,465 மில்லியன் கன அடியாகும். தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இது மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் மிக நீளமான (14 கிமீ) ஏரிகளில் ஒன்றாகும்.

★ இந்த ஏரி பொ ஆ 907–955–க்கு இடைப்பட்ட காலத்தில் சோழ யுவராஜன் இராஜாதித்த சோழனால் கட்டப்பட்டது ஆகும். இது அவரது தந்தை வீரநாராயணனின் பெயரால் அழைக்கப்படுகிறது. கொள்ளிடம் ஆற்றின் நீர் தேங்கும் இடமான இது கல்கியின், "பொன்னியின் செல்வன்" நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**12. KAVACH அமைப்பை உருவாக்கிய அமைப்பு எது?**




அ. பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

**ஆ. ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலை அமைப்பு** ✓

இ. தேசிய நீர்மின்னுற்பத்திக் கழகம்

ஈ. NTPC லிட்

★ KAVACH மோதல் தவிர்ப்பு முறையை அமல்படுத்தியதற்காக ரெயில்வேக்கு உச்சநீதிமன்றம் அண்மையில் பாராட்டு தெரிவித்தது. இந்திய தொழிற்துறையுடன் இணைந்து ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலை அமைப்பால் (RDSO) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, 'கவாச்' என்பது SIL–4 தரநிலைகளை பூர்த்தி செய்யும் அதிநவீன ATP அமைப்பு ஆகும். உயர் அதிர்வெண் ரேடியோ தகவல்தொடர்புகளைப் பயன்படுத்தி, ரெயிலின் போக்குவரவு இயக்கத்தைத் தொடர்ந்து தெரிவிப்பதன்மூலம் இது மோதல்களைத் தடுக்கிறது. இது மிகவும் செலவு குறைந்த மோதல் தவிர்ப்பு அமைப்பு ஆகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்குப்பதிவை எளிதாக்கும் தேர்தல் ஆணையத்தின் செயலிகள்.**

**வாக்காளர் பட்டியலில் பெயர்:** வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா? இல்லையா? என்பதை உறுதிசெய்ய 'Voter Helpline' என்ற செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம். இதில் எளிதாக பெயரையும் வாக்குச்சாவடி முகவரி, வாக்காளர் பட்டியல் வரிசை எண் ஆகியவற்றை தெரிந்துகொள்ளமுடியும்.

**சக்ஷம் செயலி:** மாற்றுத்திறனாளிகள் தங்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் குறித்த விவரங்களைத் தெரிவிக்க சக்ஷம் (SAKSHAM–ECI) செயலி பயன்பாட்டில் உள்ளது. இந்தச் செயலி மூலமாக, வாக்குச் சாவடியில் மாற்றுத் திறனாளிகளுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள், சக்கர நாற்காலி, இல்லத்திலிருந்து வாக்குச்சாவடிக்குச் செல்ல வாகன வசதிபோன்ற கோரிக்கைகளை அந்தச் செயலி வழியாகத் தெரிவிக்கலாம். அதை மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகம் பரிசீலித்து மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவைப்படும் வசதிகளை வழங்கும்.

**புகார்களைத் தெரிவிக்க:** தேர்தல் தொடர்பான புகார்களைத் தெரிவிக்க, '1950' என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம். இந்த எண்ணுக்கு முன்பாக நீங்கள் எந்த மாவட்டத்தில் இருந்து தொடர்பு கொள்கிறீர்களோ அந்த மாவட்டத்துக்கான STD எண்ணைப் பதிவிட்டு, 1950–ஐ அழைக்க வேண்டும். தேர்தல் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மையத்துக்கு அந்த அழைப்பு செல்லும். அதில் பெறப்படும் புகார்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. சமீபத்தில், கடும் பொருளாதார சிக்கலில் சிக்கியுள்ள இந்திய மாநிலங்களில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு** ✓


ஆ. குஜராத்

இ. கேரளா

ஈ. தெலுங்கானா

★ மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு பன்முகத்தன்மையால் அளவிடப்படும் பொருளாதார சிக்கலில் இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. மொத்த மதிப்புக் கூட்டல் மற்றும் தொழிலாளர் படை ஆகியவற்றில் தமிழ்நாடு வேளாண் துறையின் பங்களிப்பு தேசிய சராசரியைவிட குறைவாக உள்ளது. இதற்கீடாக தொழில், சேவைகள் மற்றும் கட்டுமானத்தில் அதிக பங்களிப்பு செய்யப்படுகிறது. இச்சமச்சீர் பொருளாதாரம், தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது, வேளாண்மையின்மீது குறைந்த சார்புநிலையை பிரதிபலிக்கிறது. இது தமிழ்நாட்டை ஒரு வலுவான பொருளாதார அமைப்பாக நிலைநிறுத்துகிறது.

**2. 'புரோபா–3' திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**



அ. CNSA

ஆ. ISRO

இ. JAXA

**ஈ. ESA** ✓

★ ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) புரோபா–3 திட்டமானது இந்தியாவின் முனையச் செயற்கைக்கோள் ஏவூர்தி (PSLV) மூலம் 2024 செப்டம்பரில் ஏவப்படவுள்ளது. இத்திட்டத்தில் விண்வெளியில் 144 மீ இடைவெளியில் சூரியனுடன் ஒத்திசைந்த இரண்டு செயற்கைக்கோள்கள் ஒன்றாக நிலைநிறுத்தப்படும். இச்செயற்கைக்கோள்கள் ஒன்றுக்கொன்று சூரிய வட்டுகளைத் தடுத்து, சூரியனின் மங்கலான கரோனாவைப் பார்க்க ஆராய்ச்சியாளர்களை அனுமதிக்கும். சூரியனின் மங்கலான கரோனாவை ஆராயும் உலகின் முதல் துல்லியமான திட்டம் இதுவாகும்.

**3. அயல்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் நாட்டின் இறையாண்மைமிக்க பசுமைப் பத்திரங்களில் முதலீடுகளைச் செய்ய ஒப்புதல் அளித்துள்ள நிறுவனம் எது?**




**அ. RBI** ✓

ஆ. SIDBI

இ. நிதி அமைச்சகம்

ஈ. NABARD

★ இந்திய ரிசர்வ் வங்கியானது சுற்றுச்சூழல் திட்டங்களுக்கு நிதியளிப்பதை நோக்கமாகக் கொண்டு, வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களை இறையாண்மைமிக்க பசுமைப் பத்திரங்களில் முதலீடுசெய்ய அனுமதித்துள்ளது. தட்ப வெப்பநிலை முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக அரசால் வழங்கப்படும் கடன்பத்திரங்களே இறையாண்மைமிக்க பசுமைப் பத்திரங்களாகும். மத்திய பட்ஜெட் 2022–23 இவ்வகை பசுமைப் பத்திரங்களை அறிமுகப்படுத்தியது.

**4. அண்மையில், உலக எழுத்தாளர்கள் அமைப்பால் (WOW) உலக இலக்கியப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?**



அ. மஹாஸ்வேத தேவி

**ஆ. மம்தா ஜி சாகர்** ✓

இ. அனிதா தேசாய்

ஈ. மஞ்சித் சிங்

★ கன்னடக்கவிஞர் மம்தா ஜி சாகர் தனது இலக்கியப் பங்களிப்புகளுக்காக 2024 ஏப்ரலில் உலக எழுத்தாளர்கள் அமைப்பால் (WOW) வழங்கப்பட்ட உலக இலக்கியப் பரிசைப் பெற்றார். நைஜீரியாவின் அபுஜாவில், கடந்த 1981ஆம் ஆண்டில் சினுவா அச்செபேவால் நிறுவப்பட்ட நைஜீரிய எழுத்தாளர்களின் சங்க எழுத்தாளர்கள் நடத்தப்பட்ட உலக எழுத்தாளர்கள் அமைப்பின் விழாவின்போது இந்த விருது வழங்கப்பட்டது.

**5. நொய்யல் ஆறு என்பது எந்த ஆற்றின் துணையாறாகும்?**

அ. காவேரியாறு ✓



ஆ. வைகையாறு

இ. தாமிரபரணி ஆறு

ஈ. பாலாறு

★ தமிழ்நாட்டின் நொய்யல் ஆறு வெள்ளியங்கிரி மலையிலிருந்து உருவாகி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டங்களில் பாய்ந்து காவிரியாற்றில் கலக்கிறது. நெகிழி மற்றும் கழிவுநீர் மாசால் இவ்வாறு பாதிக்கப்படுள்ளது. சாளுக்கிய மற்றும் சோழர் காலத்திய வரலாற்று நினைவுச்சின்னங்கள் அதன் கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும், மத்திய அரசின் தேசிய ஆறுகள் மறுசீரமைப்பு நிதியத்தின் உதவியுடன், இந்த ஆறுக்கான மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

**6. 2024 – உலக பாரம்பரிய நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Discover and Experience Diversity ✓



ஆ. Heritage Changes

இ. Complex Pasts: Diverse Futures

ஈ. Heritage and Climate

★ உலகளவில் கலாச்சார தளங்களை மதிக்கும் நோக்கோடு ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.18 அன்று உலக பாரம்பரிய நாள் கொண்டாடப்படுகிறது. UNESCOஆல் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரியத்தை பறைசாற்றும் நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான இந்நாள், குறிப்பிடத்தக்க கலாசார முக்கியத்துவம் வாய்ந்த தளங்களைக் கொண்டாடுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "பன்முகத்தன்மையைக் கண்டறிந்து அனுபவியுங்கள் – Discover and Experience Diversity" என்பதாகும். இது பல்வேறு கலாசாரங்கள், மரபுகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் புரிந்துகொள்வதை வலியுறுத்துகிறது.

**7. அண்மையில், நாட்டின் முதல் ஒலியியல் தன்மை மற்றும் மதிப்பீட்டிற்கான அதிநவீன நீர்மூழ்கித்தளம் (SPACE) திறக்கப்பட்ட மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு



ஆ. கேரளா ✓

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா

★ கேரளத்தின் இடுக்கியில் உள்ள குளமாவு நீரடி ஒலி ஆராய்ச்சி அமைப்பில் அதிநவீன நீர்மூழ்கித்தளம் (SPACE) அமைக்கப்பட்டுள்ளது. DRDOஇன் கடற்படை இயற்பியல் மற்றும் கடலியல் ஆய்வகத்தால் அமைக்கப்பட்ட SPACE, கப்பல்கள், நீர்மூழ்கிக்கப்பல்கள், ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் இந்தியக் கடற்படையின் சோனார் அமைப்புகளுக்கு முதன்மையான சோதனை மற்றும் மதிப்பீட்டு மையமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

★ இது, தண்ணீரின் மேற்பரப்பில் மிதக்கும் ஒரு தளம், விஞ்ச் அமைப்புகளைப் பயன்படுத்தி 100 மீட்டர் வரை எந்த ஆழத்திற்கும் இறக்கக்கூடிய நீர்மூழ்கித்தளம் என இரண்டு தனித்துவமான கட்டமைப்புகளைக் கொண்டிருக்கும். இதன்மூலம் செயல்பாடுகள் முடிந்ததும், நீர்மூழ்கித்தளத்தை மேலே தூக்கி மிதக்கும் தளத்துடன் இணைக்கலாம்.

**8. அண்மையில், பின்வரும் எந்த மாநிலத்தில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவால் ஒரு தனித்துவமான இரும்புக் காலத்திய பெருங்கற்காலத்து தளம் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ. தமிழ்நாடு

**ஆ. தெலுங்கானா ✓**

இ. திரிபுரா

ஈ. மத்திய பிரதேசம்



★ தெலுங்கானா மாநிலம், முலுகு மாவட்டத்தில், எஸ் எஸ் தட்வாய் மண்டலத்தில் உள்ள பந்தலா கிராமத்திற்கு அருகில் உள்ள ஊரகுட்டா என்ற இடத்தில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒரு தனித்துவமான இரும்புக்காலத்திய பெருங்கற்காலத்து தளத்தைக் கண்டுபிடித்தனர். பொ ஆ மு 1200 முதல் பொ ஆ மு 600 வரையிலும் இரும்புக்காலம் நிலவியது. அப்போது மனிதர்களால் இரும்பாலான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இந்தக் காலகட்டம் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டது; குறிப்பாக இரும்புக்கலப்பைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, விவசாயத் திறனை மேம்படுத்தியது.

**9. அண்மையில், விண்வெளித் துறைக்கான புதிய அந்நிய நேரடி முதலீட்டு விதிமுறைகளை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. நிதி அமைச்சகம் ✓**

ஈ. மின்சார அமைச்சகம்

வित्त मंत्रालय MINISTRY OF FINANCE
सत्यमेव जयते

★ விண்வெளித்துறைக்கான புதிய அந்நிய நேரடி முதலீட்டு (FDI) விதிமுறைகளை நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அந்நிய செலாவணி மேலாண்மை (கடனல்லா கருவிகள்) (3ஆவது திருத்தம்) விதிகள், 2024 அந்நிய செலாவணி மேலாண்மை (கடனல்லா கருவிகள்) விதிகள், 2019ஐ மாற்றியமைக்கிறது. இந்த விதிகள் அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் (FEMA), 1999இன்கீழ் செயல்படுகின்றன. திருத்தப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு கொள்கை ஆனது, செயற்கைக்கோள் நிறுவுதல் மற்றும் செயல்பாட்டிற்கான முந்தைய ஒப்புதல் வழிமுறையை மாற்றியமைத்து, இந்திய விண்வெளிக் கொள்கை, 2023இன்மூலம் 100% FDIஐ அனுமதிக்கிறது.

**10. அண்மையில் உலக மக்கள்தொகை நிலை – 2024 என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஐநா மக்கள்தொகை நிதியம் (UNFPA) ✓**

இ. ஐநா சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF)

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

UNFPA

★ ஐநா மக்கள்தொகை நிதியம் (UNFPA) 2024 ஏப்ரலில் 2024–உலக மக்கள்தொகை அறிக்கையை வெளியிட்டது. 144.17 கோடி மக்கள்தொகையுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது; இந்த எண்ணிக்கை அடுத்த 77 ஆண்டுகளில் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 68% மக்கள் 15–64 வயதுடையவர்களாவர். மொத்த கருவுறுதல் விகிதம் 2.0 ஆக உள்ளது. பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையே 71 மற்றும் 74 ஆண்டுகளாக உள்ளது. சிறார் திருமண விகிதங்கள் 23%ஆக உள்ளது.

★ மாற்றுத்திறனாளி பெண்கள் பாலின அடிப்படையிலான வன்முறையை 10 மடங்கு அதிகமாக எதிர்கொள்கின்றனர். 30 வருட SRH முன்னேற்றம் இருந்தபோதிலும், விளிம்புநிலை சமூகங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன.

**11. அண்மையில், உலக எதிர்கால ஆற்றல் உச்சிமாநாடு – 2024 நடத்தப்பட்ட இடம் எது?**

அ. அபுதாபி ✓

ஆ. லண்டன்

இ. பாரிஸ்

ஈ. புது தில்லி

★ 16ஆவது உலக எதிர்கால ஆற்றல் உச்சிமாநாடானது 2024 ஏப்.16–18 வரை ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள ADNEC மையத்தில் நடைபெற்றது. இம்மாநாடு உலகளாவிய ஆற்றல் மாற்றம், சுத்தமான எரிசக்தி முதலீடு மற்றும் நிலையான எதிர்காலம் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. இம்மாநாட்டில் பெண் தொழில்முனைவோர் குழு டிகார்பனைசேஷன் கண்டுபிடிப்புகளை முன்னெடுத்தது. மஸ்தரின் தாய் நிறுவனமான முபதாலா, அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் (ADNOC) மற்றும் உடைமை நிறுவனமான ADQஉடன் இணைந்து, எரிபொருளின் பசுமை மற்றும் நீல வகைகளை உருவாக்குவதற்கான ஹைட்ரஜன் கூட்டணியை உருவாக்க ஒப்புக்கொண்டது.


**12. சமீபத்தில், நாட்டின் முதல் நடமாடும் மருத்துவ சாதனங்களின் அளவுத்திருத்த வசதியை அறிமுகப்படுத்தியுள்ள ஐஐடி நிறுவனம் எது?**

அ. ஐஐடி கான்பூர்

ஆ. ஐஐடி மெட்ராஸ் ✓

இ. ஐஐடி பாம்பே

ஈ. ஐஐடி ரூர்க்கி



★ சுகாதார அணுகலை மேம்படுத்துவதற்காக நாட்டின் முதல் நடமாடும் மருத்துவ சாதன அளவுத்திருத்த வசதியை மெட்ராஸ் ஐஐடி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அனைவருக்கும் IIT–M என்ற திட்டத்தின கீழ் உருவாக்கப்பட்ட இது, துல்லியமான நோயறிதல் மற்றும் சிகிச்சைகளைப் பரிந்துரைக்கும் மருத்துவ கருவிகளில் மிகத்துல்லியமான முறையில் அளவுத்திருத்தம் மேற்கொள்ளும். இம்முன்னெடுப்பு ஐநா SDG–3 உடன் ஒத்திசைந்து போகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்த ஆண்டின் சிறந்த நிழற்படம்...**

காஸா துயரத்தைப் பிரதிபலிக்கும் நிழற்படம், 'வேல்ர்ட் பிரஸ்' நிழற்பட அறக்கட்டளையால் இந்த ஆண்டுக்கான சிறந்த நிழற்படமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிழற்படத்தை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன நிழற்படக்கலைஞர் முகமது சலீம் கடந்த அக்டோபர்.17இல் எடுத்துள்ளார். அந்தப்படத்தில், காஸாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தாயுடன் உயிரிழந்த குழந்தையின் உடலை அவரது உறவினர் சோகத்துடன் ஏந்தியிருக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. அப்படம், காஸா போரின் பாதிப்பை ஆணித்தரமாக வெளிப்படுத்துவதாக விருதுக்கான தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. UNCTAD அறிக்கையின்படி, 2024இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் என்னவாக இருக்கும்?**

அ. 6.3%

**ஆ. 6.5%** ✓

இ. 6.7%

ஈ. 6.9%

UNITED NATIONS
UNCTAD

★ வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐநாஇன் கூட்டமைப்பு (UNCTAD) இந்தியப் பொருளாதாரம் 2023இல் எய்திய 6.7% வளர்ச்சியைத் தொடர்ந்து, 2024இல் 6.5%ஆக இருக்கும் எனக் கணித்துள்ளது. உலகின் மிகவிரைவாக வளரும் பெரிய பொருளாதாரம் என்ற தகுதியை இந்தியா தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், விநியோகச் சங்கிலிகளை பல்வகைப்படுத்துவதற்காக, பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துகின்றன. UNCTADஇன் அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டின் வளர்ச்சி பொது மூலதன முதலீடு மற்றும் சேவைத்துறை விரிவாக்கத்தால் ஏற்பட்டதாகும்.

**2. அண்மையில், DRDOஆல் கீழ்காணும் எந்த இடத்தில், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட எறிகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது?**

**அ. சந்திப்பூர், ஒடிசா** ✓

ஆ. விசாகப்பட்டினம், ஆந்திர பிரதேசம்

இ. பொக்ரான், இராஜஸ்தான்

ஈ. ஸ்ரீஹரிகோட்டா, ஆந்திர பிரதேசம்



★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் 2024 ஏப்ரல்.18 அன்று ஒடிஸா கடற்கரையில் உள்ள சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட எறிகணையை வெற்றிகரமாக சோதித்துப்பார்த்தது. இச்சோதனையின்போது, அதன் அனைத்து துணை அமைப்புகளும் சரியாகச் செயல்பட்டன. இந்திய வான்படையின் சுகோய்–30–MK–I விமானத்திலிருந்தும் எறிகணை பறப்பது கண்காணிக்கப்பட்டது.

★ இந்த எறிகணையில் மேம்பட்ட ஏவியோனிக்ஸ் மற்றும் சிறந்த செயல்திறனை உறுதிசெய்வதற்கான மென்பொருள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த எறிகணையை பெங்களூருவில் உள்ள DRDO ஆய்வக ஏரோநாட்டிகல் மேம்பாட்டு அமைப்பு மற்றும் பிற ஆய்வகங்கள் மற்றும் இந்திய தொழில்துறைகளின் பங்களிப்புடன் உருவாக்கியுள்ளது.


**3. 2024 – உலக கல்லீரல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Keep your liver healthy and disease-free** ✓

ஆ. Be Vigilant, Get Regular Liver Check-Ups

இ. Keep your liver healthy and Spread awareness

ஈ. Spreading awareness about liver-related issues



★ உலகளவில் கல்லீரலின் நலம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் நோக்கோடு ஏப்.19 அன்று உலக கல்லீரல் நாள் கொண்டாடப்படுகிறது. "உங்கள் கல்லீரலை நலமாகவும் நோயற்றதாகவும் வைத்திருங்கள் :: Keep your liver healthy and disease–free" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வழக்கமான பரிசோதனைகளின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. இந்த முன்னெடுப்பானது கல்லீரல் தொடர்பான கோளாறுகள், வாழ்க்கைமுறை மாற்றங்களை ஊக்குவிப்பது மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4. லக்ஷ்மண தீர்த்த ஆறானது கீழ்காணும் எந்த ஆற்றின் துணையாறாகும்?**

அ. கோதாவரி

ஆ. கிருஷ்ணா

இ. நர்மதா

**ஈ. காவேரி** ✓



★ கடும் வறட்சி மற்றும் கடும் வெப்பம் காரணமாக கர்நாடக மாநிலத்தில் பாயும் காவிரியின் துணையாறான லக்ஷ்மண தீர்த்த ஆறு முற்றிலும் வறண்டுகாணப்படுகிறது. பிரம்மகிரி மலையில் உருவாகி, கிழக்கு நோக்கி பாய்ந்து கிருஷ்ண ராஜ சாகர ஏரியில் காவேரி ஆற்றுடன் இது கலக்கிறது. புகழ்பெற்ற லக்ஷ்மணதீர்த்த அருவி அல்லது இருப்பு அருவி, கேரளத்தின் எல்லைக்கருகில் அதன் வழியில் அமைந்துள்ளது. தலைக்காவேரியில் உற்பத்தியாகும் காவேரி ஆறு, தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள பூம்புகாரில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.


**5. டிராகன்ஃபிளை சுற்றகவூர்தி திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**

**அ. NASA** ✓

ஆ. ISRO

இ. CNSA

ஈ. JAXA



★ $3.35 பில்லியன் திட்ட மதிப்பீட்டில், 2028 ஜூலையில் ஏவப்படவுள்ள சனியின் நிலவான டைட்டனுக்குச் செல்லும் டிராகன்ஃபிளை சுற்றகவூர்தி திட்டத்தை NASA உறுதிப்படுத்தியது. இது டைட்டனின் மேற்பரப்பில், ரேடியோ ஐசோடோப் ஆற்றலைப் பயன்படுத்தி பல்வேறு இடங்களை ஆராயும். 2034இல் பூமிக்கு வர திட்டமிடப்பட்டுள்ள இது, பூமியின் தொடக்ககால நிலைகளை ஒத்த வாழ்வு தொடங்கும் முன்னான வேதி செயல்முறைகளை அங்கு தேடும். சனியின் மிகப்பெரிய நிலவான டைட்டன், பூமிபோன்றே அடர்த்தியான வளிமண்டலத்தைக் கொண்டுள்ளது.

**6. அண்மையில், கடற்படையின் அடுத்த தளபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. அட்மிரல் கரம்பீர் சிங்

**ஆ. அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி** ✓

இ. அட்மிரல் சுனில் லம்பா

ஈ. அட்மிரல் தினேஷ் திரிபாதி



★ கடற்படைத் துணைத் தளபதியாக தற்போது பணியாற்றிவரும் வைஸ் அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதியை 2024 ஏப்.30 முதல் கடற்படையின் அடுத்த தளபதியாக அரசு நியமித்துள்ளது. தற்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் R ஹரி குமார், 2024 ஏப்.30 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையொட்டி, இந்நியமனம் செய்யப்பட்டுள்ளது.

★ 1964 மே.15–ல் பிறந்த வைஸ் அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி 1985 ஜூலை.01 அன்று இந்திய கடற்படையின் நிர்வாகப் பிரிவில் நியமிக்கப்பட்டார். தகவல் தொடர்பு மற்றும் மின்னணு போர் நிபுணரான இவர், கிட்டத்தட்ட 39 ஆண்டுகளாக இதில் பணியாற்றியுள்ளார். கடற்படை ஊழியர்களின் துணைத் தளபதியாகப் பொறுப்பேற்பதற்கு முன்பு, அவர் மேற்குக் கடற்படை கட்டளையின் கொடி அதிகாரி கமாண்டிங் இன் சீப் ஆக பணியாற்றினார்.

**7. அண்மையில், பிரம்மோஸ் சூப்பர்சோனிக் எறிகணைகளை கீழ்காணும் எந்த நாட்டிற்கு இந்தியா வழங்கியது?**

அ. சுவீடன்

**ஆ. பிலிப்பைன்ஸ்** ✓

இ. எகிப்து

ஈ. வியட்நாம்




★ 2022இல் கையெழுத்திடப்பட்ட $375 மில்லியன் மதிப்பிலான ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா பிலிப்பைன்சு நாட்டுக்கு பிரம்மோஸ் சூப்பர்சோனிக் எறிகணைகளை வழங்கியது. இந்தியாவின் DRDOஆல் உருவாக்கப்பட்ட பிரம்மோஸ் எறிகணை அமைப்பை வழங்குவதற்கான ஒப்பந்தம் 2022 ஜனவரியில் பிலிப்பைன்சுடன் போடப்பட்டது. இந்த ஆண்டு (2024) இந்தியாவின் ஆயுத விற்பனை மொத்தம் ₹21,000 கோடியைத் தாண்டியுள்ளது என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**8. Directionally Unrestricted Ray Gun Array (DURGA) அமைப்பு உருவாக்கிய அமைப்பு எது?**

**அ. DRDO** ✓

ஆ. HAL

இ. ISRO

ஈ. BHEL



★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) அதன் Directionally Unrestricted Ray Gun Array (DURGA) அமைப்பை சோதனை செய்து வருகிறது. இந்த அமைப்பு லேசர்கள், நுண்ணலைகள் அல்லது துகள் கற்றைகளை பயன்படுத்தி இலக்குகளைச் சேதப்படுத்த அல்லது அழிக்க பயன்படுத்துகிறது; இது வழக்கமான ஆயுதங்களைவிட திறன் மிக்கதாக உள்ளது. இது ஒளியின் வேகத்தில் இயங்குகிறது; மேலும் புவியீர்ப்பு அல்லது வளிமண்டல ஈர்ப்பால் பாதிக்கப்படாது; மேலும் துல்லியமான மற்றும் தனிப்பயனாக்கக்கூடிய விளைவுகளைக் கொண்டுள்ளது.

**9. அண்மையில், உலகளவில் மூன்றாவது மிகப்பெரிய வெள்ளி உற்பத்தியாளராக மாறியுள்ள நிறுவனம் எது?**

**அ. இந்துஸ்தான் ஜிங்க் லிட்** ✓

ஆ. சில்வர் ஜிங்க் கார்ப்பரேஷன்

இ. சன்ரைஸ் ஜிங்க் லிட்

ஈ. மேவாட் ஜிங்க் லிட்

HINDUSTAN ZINC
Zinc & Silver of India

★ வேதாந்தா குழுமத்தின் துணை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஜிங்க் லிட், தி சில்வர் நிறுவனத்தின் 2024 – உலக வெள்ளி ஆய்வின்படி, உலகின் மூன்றாவது மிகப்பெரிய வெள்ளி உற்பத்தியாளராக மாறியுள்ளது. இந்நிறுவனத்தின் இராஜஸ்தானில் உள்ள சிண்டேசர் குர்த் சுரங்கம் உலகின் இரண்டாவது மிகப்பெரிய வெள்ளி உற்பத்தி செய்யும் சுரங்கமாகும். 2023ஆம் ஆண்டில், ஹிந்துஸ்தான் ஜிங்க் 45.9 மில்லியன் ஔன்ஸ் வெள்ளியை உற்பத்தி செய்தது; இது முந்தைய ஆண்டைவிட 8% அதிகமாகும்.


**10. உலக சுகாதார அமைப்பு (WHO) காற்றின்மூலம் பரவும் நோய்க்கிருமிகளை என்னவென்று அழைக்கிறது?**

அ. நீரில் பரவும் நோய்க்கிருமிகள்

**ஆ. தொற்று சுவாச துகள்கள்** ✓

இ. பன்றிக்காய்ச்சல்

ஈ. பார்கின்சன் நோய்க்குறி



★ COVID–19 தொற்றின்போது பொதுவான சொற்களைப் பயன்படுத்தி அழைப்பாதை தவிர்ப்பதற்காக, காற்றின்மூலம் பரவும் நோய்க்கிருமிகளை விவரிக்க உலக சுகாதார அமைப்பு, 'தொற்று சுவாசத் துகள்கள்' (Infectious Respiratory Particles) என்ற பதத்தை அறிமுகப்படுத்தியது. தொற்று சுவாசத் துகள்கள் சுவாசம், பேசுதல், இருமல் அல்லது தும்மல் மூலம் வெளியேற்றப்படும் துகள்களை உள்ளடக்கியது. அனைத்து விதமான அளவுகளில் உள்ள துகால்களையும் இது குறிக்கின்றது. காற்றுவழி பரிமாற்றம் (உள்ளிழுத்தல்) மற்றும் நேரடி படிவு (வெளியேற்றப்பட்ட துகள்களின் படிவு) என இரண்டு வகையாக இது பொருள் தருகிறது.

11. **அண்மையில், '*Vasuki Indicus*' என்ற மிகப்பெரிய பாம்பின் புதைபடிவம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?**



அ. கேரளா


**ஆ. குஜராத்** ✓

இ. மகாராஷ்டிரா

ஈ. மத்திய பிரதேசம்

★ குஜராத் மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதைபடிவ முதுகெலும்பி, 11–15 மீட்டர் நீளமும் 1 டன் எடையும்கொண்ட '*Vaski Indicus*' என்ற மிகப்பெரிய பாம்பென உறுதிசெய்யப்படுறது. சதுப்பு நிலங்களில் பதுங்கியிருந்து தாக்கும் இது, உலகில் அதிக வெப்பநிலை நிலவியிருந்த காலத்தில் வாழ்ந்ததாகும். 43 அடி நீளமும் ஒரு டன் எடையும்கொண்ட கொலம்பியப் பாம்பு டைட்டனோபோவாவுடன் ஒப்பிடத்தக்கதாகும் இது.

12. **அண்மையில் வெளியான, 'India – the Road to Renaissance: A Vision and an Agenda' என்ற நூலின் ஆசிரியர் யார்?**



அ. அமிஷ் திரிபாதி

**ஆ. பீமேஸ்வரா சல்லா** ✓

இ. பாவிக் சர்கெடி

ஈ. விக்ரம் சேத்

★ பீமேஸ்வரா சல்லாவின், 'India – the Road to Renaissance: A Vision and an Agenda' என்ற நூல் ஹைதராபாத்தில் நடந்த ஒரு நிகழ்வில் வெளியிடப்பட்டது. ஐநா முன்னாள் அதிகாரியான பீமேஸ்வரா சல்லா தனது இந்த நூலில், ஒரு இந்தியாவின் மறுமலர்ச்சிக்கான ஒரு தனித்துவமான முற்போக்கை அளித்துள்ளார். அவரது இந்த நூல், தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட அழுத்தமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வாசகர்களை ஊக்குவிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் 69.72% வாக்குகள் பதிவு.**

தமிழ்நாட்டில் 69.72 சதவீத வாக்குகள் பதிவானதாக அதிகாரபூர்வ இறுதி அறிவிப்பை இந்திய தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே அதிகபட்சமாக தருமபுரி மக்களவைத் தொகுதியில் 81.20% வாக்குப்பதிவும், அதேசமயம் குறைந்தபட்சமாக மத்திய சென்னை தொகுதியில் 53.96% வாக்குப்பதிவு நடைபெற்று உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019 மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் மொத்த வாக்குப்பதிவு சதவீதம் 72.29%ஆக இருந்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. புதிய லான்செட் ஆணையத்தின் 2024 – அறிக்கையின்படி, 2040ஆம் ஆண்டுக்குள் மார்பகப் புற்றுநோயால் நிகழும் வருடாந்திர இறப்புகளின் எண்ணிக்கை என்னவாக இருக்கும்?**

**அ. 1 மில்லியன்** ✓

ஆ. 2 மில்லியன்

இ. 3 மில்லியன்

ஈ. 4 மில்லியன்



★ புதிய லான்செட் ஆணையத்தின் 2024 – அறிக்கையின்படி, மார்பகப் புற்றுநோயானது 2040ஆம் ஆண்டில் பத்து இலட்சம் இறப்புகளை ஏற்படுத்தும் எனக் கணிக்கப்பட்டுள்ளது; இது 2020ஆம் ஆண்டை ஒப்பொடும்போது சுமார் 50%க்கும் அதிகமாகும். 2015 – 2020 வரை 7.8 மில்லியன் பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் அதே காலப்பகுதியில் 6,85,000 பெண்கள் அந்நோய் காரணமாக மரணித்துள்ளனர் எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. அண்மையில், 'குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில் இந்தியாவின் முன்னேற்றம்' என்ற தலைப்பிலான மாநாட்டை ஏற்பாடு செய்த அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. வெளியுறவு அமைச்சகம்

இ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

**ஈ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்** ✓




★ பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, மற்றும் பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் ஆகிய மூன்று சட்டங்கள், தொன்மையான காலனித்துவ சட்டங்களுக்குப் பதிலாக, 2024 ஜூலை.01 முதல் நடைமுறைக்கு வரும். சட்டம் மற்றும் நீதி அமைச்சகமானது, 'குற்றவியல் நீதி அமைப்பு நிர்வாகத்தில் இந்தியாவின் முன்னேற்றம்' என்ற தலைப்பில் மாநாட்டை நடத்துகிறது. புது தில்லியில் நடைபெறும் இம்மாநாட்டுக்குத் தலைமை நீதிபதி DY சந்திரசூட் முதன்மை விருந்தினாராக இருப்பார். இந்த நிகழ்வு புதிய சட்டங்களை தெளிவுபடுத்துவதையும், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்ட அமலாக்கத்துறை மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களிடையே உரையாடலை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. அண்மையில், பையோல்ஜி–1–2 என்ற வானூர்தி–எதிர்ப்பு ஏவுகணையை சோதித்த நாடு எது?**

அ. உக்ரைன்

ஆ. ஈரான்

**இ. வட கொரியா** ✓

ஈ. எகிப்து



★ 2024 ஏப்ரல்.20 அன்று வட கொரியா கொரியாவின் மேற்குக்கடலில், 'Pyoljji–1–2' என்ற வானூர்தி–எதிர்ப்பு ஏவுகணை மற்றும் Hwasal–1 Ra–3 என்ற எறிகணையையும் சோதித்துப் பார்த்ததாக அறிவித்தது. இந்தச் சோதனை தென் கொரியா மற்றும் அமெரிக்கா இடையே பதட்டத்தை அதிகரித்துள்ளது. அணு ஆயுதங்களை சுமந்துசெல்லும் திறன்கொண்டதாகும் 'Hwasal–1 Ra–3' எறிகணை.

**4. அண்மையில், தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. நயி பங்கஜ் குமார்

ஆ. சுரேஷ் சந்த் யாதவ்

இ. கஜேந்தர் சிங்

**ஈ. நளின் பிரபாத்** ✓



★ மூத்த இகாப அதிகாரியான நளின் பிரபாத், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இந்தியாவின் தேசிய பாதுகாப்புப் படையின் (NSG) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜம்மு மற்றும் காஷ்மீரில் CRPF கூடுதல் தலைமை இயக்குநராக பணியாற்றிய அவர், ஆந்திர பிரதேசத்தின் 1992 ஆம் ஆண்டு பணித் தொகுதியைச் சார்ந்த இகாப அதிகாரி ஆவார். 2028 ஆகஸ்ட்.31 வரை அமைச்சரவையின் நியமனக்குழுவால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அவர், NSGஇன் கூடுதல் பொறுப்பை வகித்து வந்த தல்ஜித் சிங் சௌத்ரியை அடுத்து இப்பதவிக்கு வந்துள்ளார்.

**5. அண்மையில், 'ஆதர்ஷீலா' என்ற தலைப்பில் தொடக்கநிலை குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்விக்கான தேசிய பாடத்திட்டம் – 2024ஐ வெளியிட்ட அமைச்சகம் எது?**

அ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

**ஈ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** ✓

★ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 2024ஆம் ஆண்டிற்கான தொடக்கநிலை குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்விக்கான தேசிய பாடத்திட்டத்தை, 'ஆதர்ஷீலா' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது தேசிய கல்விக்கொள்கை, 2020உடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த 48 வார பாடத்திட்டம் அங்கன்வாடிகளில் மூன்று முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைகளுக்கானதாகும். பல்வேறு அமைச்சகங்கள், NCERT மற்றும் சிவில் சமூக அமைப்புகள் அடங்கிய குழுவால் உருவாக்கப்பட்ட இது, அடிப்படைக் கற்றலை வலியுறுத்துகிறது.

**6. Euvichol–S என்ற தடுப்பூசியுடன் தொடர்புடைய நோய் எது?**

அ. வயிற்றுப்போக்கு

**ஆ. காலரா** ✓

இ. மலேரியா

ஈ. டெங்கு




★ வாய்வழி செலுத்தப்படும் காலரா தடுப்பூசியான Euvichol–Plusஇன் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் செலவு குறைந்த பதிப்பான, 'Euvichol–S' என்ற தடுப்பூசிக்கு முன்கூட்டியே அனுமதி அளித்துள்ளது உலக சுகாதார அமைப்பு (WHO). குறைவான உள்ளீட்டுப்பொருள்களைக் கொண்டுள்ள இது, மலிவானதுவும் விரைவாக உற்பத்தி செய்ய முடிந்ததும் ஆகும். விப்ரியோ காலரா என்ற பாக்டீரியாவால் ஏற்படும் காலரா, அசுத்தமான உணவு அல்லது தண்ணீரின்மூலம் பரவுகிறது. பெரும்பாலான பாதிப்புகள் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன. 2023 ஜூலை வரை 132 பாதிப்புகள் இந்தியாவில் பதிவாகியுள்ளன.

**7. ஷோம்பென் பழங்குடியினர் முதன்மையாக வசிக்கின்ற பகுதி எது?**

அ. டையூ தீவு

ஆ. நேத்ராணி தீவு

இ. இலட்சத்தீவுகள்

**ஈ. கிரேட் நிக்கோபார் தீவுகள்** ✓




★ குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுவான ஷோம்பென், அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலில் முதன்முறையாக வாக்களித்தனர். கிரேட் நிக்கோபார் தீவின் அடர்ந்த வெப்பமண்டல மழைக்காடுகளில் வசிக்கும் அவர்கள் மங்கோலாய்டு குழுவைச் சார்ந்தவர்களாவர். 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 229

ஷோம்பென் மக்கள் அங்கு உள்ளனர். அவர்கள் வேட்டையாடிகளாகவும் சேகரிப்பாளர்களாகவும், அரை–நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.


### 8. ஆண்டுதோறும், 'தேசிய குடிமைப் பணிகள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஏப்ரல்.20

**ஆ. ஏப்ரல்.21** ✓

இ. ஏப்ரல்.22

ஈ. ஏப்ரல்.23




★ தேசத்தின் நிர்வாக முதுகெலும்பான அரசு ஊழியர்களை கௌரவிப்பதற்காக இந்தியாவில் ஆண்டுதோறும் ஏப்ரல். 21 அன்று தேசிய குடிமைப்பணிகள் நாள் கொண்டாடப்படுகிறது. இது சர்தர் வல்லபாய் படேல், 1947இல் தகுதிகாண் அதிகாரிகளுக்கிடையே ஆற்றிய உரையின் நினைவாக கொண்டாடப்படுகிறது. அவ்வுரையின்போது வல்லபாய் படேல், அரசு ஊழியர்களை, 'இந்தியாவின் எஃகு சட்டகம்' என்று வர்ணித்தார். இந்த நாளில் அரசு ஊழியர்களை அங்கீகரித்து ஊக்கப்படுத்துதல், துறைசார் செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல், பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கான விருதுகள் வழங்குதல், குடிமக்களுக்குச் சேவை செய்வதில் அவர்களின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

### 9. 2023–24 நிதியாண்டில் மின்னனுப் பொருள்கள் ஏற்றுமதியில் முதலிடம் பிடித்த இந்திய மாநிலம் எது?

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா

ஈ. கேரளா




★ 2023–24 நிதியாண்டில் $9.56 பில்லியன் மதிப்புக்கு மின்னனுப் பொருள்கள் ஏற்றுமதி செய்து இந்தியாவிலேயே மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. 2024ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து செய்யப்படும் அனைத்து மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியில் இது 30% ஆகும். தமிழ்நாடு வன்பொருள், தோல் பொருட்கள், ஜவுளி மற்றும் தானியங்கி உள்ளிட்ட பல்வேறு மின்னணுப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது.

### 10. அண்மையில், உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ. பன்னாட்டு செலவாணி நிதியம்

**ஆ. உலக வங்கி** ✓

இ. உலக வர்த்தக அமைப்பு

ஈ. உலக சுகாதார அமைப்பு

★ பன்னாட்டு செலவாணி நிதியமானது (IMF) அதன் அண்மைய உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையானது உலக நிதிச்சந்தைகளின் நிலைப்புத் தன்மை மற்றும் வளர்ந்து வரும்–சந்தை நிதியுதவியை மதிப்பிடும் ஓர் ஈராண்டுகால மதிப்பீடாகும். ஏப்ரல் மற்றும் அக்டோபரில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கை தற்போதைய நிதி நிலைமைகளை ஆராய்கிறது; நிதி மற்றும் கட்டமைப்பு மண்டலங்களில் ஏற்றத்தாழ்வுகள் போன்ற சாத்தியமான இடர்களை எடுத்துக்காட்டுகிறது. இது உலகளாவிய நிதி நிலைப்புத் தன்மைக்கான அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதையும், வளர்ந்துவரும் சந்தை நாடுகளுக்கான நிதியுதவிக்கான அணுகலை மதிப்பிடுவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

11. **அண்மைய அறிக்கையின்படி, இந்தியாவில் சாகுபடி செய்யக்கூடிய நிலப்பரப்பில் எத்தனை சதவீதம் அமில மண் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது?**



அ. 30% ✓

ஆ. 40%

இ. 20%

ஈ. 10%

★ இந்தியாவில் 30% வேளாண் நிலங்கள் அமிலத்தன்மை கொண்ட மண்ணால் பாதிக்கப்பட்டு தாவர வளர்ச்சியைத் தடுக்கிறது என்று ஓர் அண்மைய அறிக்கை வெளிப்படுத்துகிறது. காலப்போக்கில் மண்ணின் pH தன்மை குறையும் ஒரு செயல்முறையான அமிலமயமாக்கல், வேளாண் நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்து வருகிறது. இது மேற்பரப்பு மற்றும் நிலத்தடிமட்டம் என இரண்டையும் பாதிக்கிறது. ஈரப்பதமிகுந்த தென்மேற்கு, வடகிழக்கு மற்றும் இமய மலைப்பகுதிகளில் அமில மண் அதிகமாக உள்ளது. அதிகப்படியான அம்மோனியம் அடிப்படையிலான நைட்ரஜன் உரங்கள், நைட்ரேட் நைட்ரஜனின் கசிவு மற்றும் அறுவடையின்போது காரத்தன்மைகொண்ட தாவரங்களை களைதல் ஆகியவை இதற்குப் பங்களிக்கும் காரணிகளாகும்.

12. **பன்ஹாலா கோட்டை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா ✓

ஆ. கர்நாடகா

இ. கோவா

ஈ. மத்திய பிரதேசம்

★ இந்திய தொல்லியல் துறையானது (ASI) மகாராஷ்டிர மாநிலம் மும்பை வட்டத்தில் உள்ள பன்ஹாலா கோட்டையில் உலக பாரம்பரிய நாளைக் கொண்டாடியது. பாரம்பரியமாக பராசர முனிவருடன் இணைத்துப் பேசப்படுகிறத இந்தக் கோட்டை, வர்த்தக வழிகளில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. 11ஆம் நூற்றாண்டில் ஷிலஹாரா ஆட்சியாளர் போஜாவால் கட்டப்பட்ட இக்கோட்டை, யாதவர்கள், பாமினி, அடில்ஷாஹி, மராட்டியர்கள் மற்றும் முகலாயர்கள் உட்பட பல்வேறு வம்சங்களைப் பார்த்துள்ளது.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

1. **2024 – உலக புவி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Invest in our Planet

ஆ. Planet vs Plastics ✓

இ. Climate Action

ஈ. Restore Our Earth




★ சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் ஏப்.22 அன்று புவி நாள் கொண்டாடப்படுகிறது., 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Planet vs Plastics – கோள் எதிர் நெகிழிகள்" என்பதாகும். இந்தக் கருப்பொருளானது நெகிழி மாசுபாட்டிற்கு உடனடித் தீர்வுகாண்பதில் தனது கவனத்தைச் செலுத்துகிறது. earthday.org ஆனது புவியின் நலத்திற்காக 2040ஆம் ஆண்டுக்குள் நெகிழி உற்பத்தியை 60% வரை குறைக்க அழைப்பு விடுத்துள்ளது. கடந்த 1970இல் செனட்டர் கெய்லார்ட் நெல்சன் மற்றும் ஹார்வர்ட் மாணவர் டெனிஸ் ஹேய்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட புவி நாள், கடந்த 1969–சாண்டா பார்பரா எண்ணெய் கசிவால் நிகழ்ந்த சுற்றுச்சூழல் சீரழிவை நினைவுகூருகிறது.

2. **அண்மையில், உலக கைவினை கவுன்சிலால் மதிப்புமிக்க, 'உலக கைவினை நகரம் (Craft City)' பட்டத்திற்காக பரிசீலிக்கப்பட்டுள்ள இந்திய நகரம் எது?**

அ. கும்பகோணம்

ஆ. ஸ்ரீநகர் ✓

இ. காஞ்சிபுரம்

ஈ. உதய்பூர்



★ உலக கைவினை கவுன்சிலால் இந்த ஆண்டு இந்தியாவிலிருந்து, 'உலக கைவினை நகரம்' பட்டத்திற்காக ஸ்ரீநகர் அடையாளம் காணப்பட்டுள்ளது. உலக கைவினை கவுன்சில் என்பது குவைத்தைச் சார்ந்த ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது கூட்டுறவு, பொருளாதார மேம்பாடு மற்றும் கலாசார பரிமாற்ற திட்டங்களை ஊக்குவிக்கிறது. இதற்காக பஷ்மினா சால்வைகள், தரைவிரிப்புகள் போன்ற உள்ளூர் கைவினைப்பொருட்களை உற்பத்தி செய்யும் பல தொகுதிகளை உலக கைவினை கவுன்சில் ஆய்வுசெய்துள்ளது.

3. **அண்மையில், அசுந்தா லக்ரா விருது பெற்றவர் யார்?**

அ. தீபிகா சோரெங் ✓

ஆ. நிக்கி பிரதான்

இ. நவ்நீத் கௌர்

ஈ. ஷர்மிளா தேவி



★ '2023இல் வரவிருக்கும் வீராங்கனைக்கான ஹாக்கி இந்தியா அசுந்தா லக்ரா' விருதை தீபிகா சோரெங் பெற்றார். பெண்கள் ஜூனியர் ஆசியக் கோப்பையில் அறிமுகமான அவர், 6 போட்டிகளில் 7 கோல்கள் அடித்து, இந்தியாவுக்கு தங்கப்பதக்கத்தைப் பெற்றுத்தந்தார். FIH ஜூனியர் மகளிர் உலகக்கோப்பை உட்பட சர்வதேச போட்டிகளில் தீபிகா சோரெங்கின் இருப்பு குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்குப் பங்களித்தது. FIH மகளிர் ஹாக்கி 5s உலகக்கோப்பை ஓமன் – 2024இல் இந்தியா வெள்ளி வென்றதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்; 9 கோல்கள் அடித்து அப்போட்டியின் இளம் வீராங்கனை பட்டத்தையும் அவர் பெற்றார்.

**4. சமீபத்தில், மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட அழியாத மை என்பது கீழ்காணும் எந்த வேதிப்பொருளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது?**

அ. சோடியம் நைட்ரேட் ($NaNO_3$)

**ஆ. சில்வர் நைட்ரேட் ($AgNO_3$)** ✓

இ. பொட்டாசியம் நைட்ரேட் ($KNO_3$)

ஈ. சோடியம் குளோரைடு (NaCl)



★ மக்களவைத் தேர்தல் நெருங்கும்போது, இந்திய தேர்தல்களின் தனித்துவமான செயல்முறையான இடது ஆள்காட்டி விரலில் அழியாத ஊதா–கருப்பு மை வைப்பது குறித்து பரவலாகப் பேசப்படுகிறது. சில்வர் நைட்ரேட் கொண்ட அந்த அழியாத மை, புறவூதா ஒளியின்கீழ் தெளிவாகத் தெரியும். வழலை நுரை மற்றும் நீர்மங்களை 72 மணிநேரம் வரை எதிர்க்கும் திறனுடையது இந்த மை. CSIRஆல் தயாரிக்கப்பட்ட இந்த மைக்கு கடந்த 1962இல் மைசூர் பெயின்ட்ஸ் & வார்னிஷ் லிட் நிறுவனம் உரிமம் பெற்றது. இவ்வகை மை 25 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தால் இடது ஆள்காட்டி விரலில் மையிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**5. செங் கிலாங் திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

**அ. மேகாலயா** ✓

ஆ. சிக்கிம்

இ. மிசோரம்

ஈ. நாகாலாந்து



★ மேகாலய மாநிலத்தின் வஹியாஜரில் 34ஆவது செங் கிலாங் திருவிழா அண்மையில் நிறைவடைந்தது. செங் காசி செய்ன் ரைஜால் நடத்தப்பட்ட இவ்விழா, காசி பூர்வீக நம்பிக்கையாளர்களை ஒருங்கிணைக்கிறது. ஒற்றுமையைக் குறிக்கும் ஒற்றைக்கூறை பரிமாறிக் கொள்வது இதன் சிறப்பம்சமாகும். இந்த ஆண்டு, வஹியாஜர் அந்த ஒற்றைக் கூறை செங் காசி ஷாயித் ஷேயிடமிருந்து பெற்றார். மேகாலயா மற்றும் அஸ்ஸாம் மற்றும் வங்காளதேசத்தின் சில பகுதிகளை பூர்வீகமாகக்கொண்ட காசி மக்கள், செங் கிலாங்கின்போது தங்கள் கலாசாரத்தையும் நம்பிக்கையையும் கொண்டாடுகிறார்கள்.

**6. அண்மையில், FIDE கேண்டிடேட் செஸ் போட்டியை வென்ற இளம் வீரர் யார்?**

அ. டிங் லிரன்

**ஆ. D குகேஷ்** ✓

இ. அர்ஜுன் எரிகைசி

ஈ. நிஹால் சரின்



★ இந்தியாவின் D குகேஷ் (17), ஹிகாரா நகமுராவுடனான போட்டியில் டிராவான பிறகு, கனடாவின் டொரண்டோவில் நடந்த 2024 – FIDE கேண்டிடேட் போட்டியை வென்ற இளம் செஸ் வீரரானார். பெண்கள் பிரிவில் சீனாவின் டான் சோங்கி வெற்றிபெற்றார். D குகேஷ், ஒன்பது புள்ளிகளுடன், 2024 – FIDE உலக செஸ் சாம்பியன்ஷிப்பிற்காக டிங் லிரனை எதிர்கொண்டு வெற்றியைப் பெற்றார். விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு FIDE கேண்டிடேட் போட்டியில் வெற்றிபெற்ற இரண்டாவது இந்தியரும் இளம் வீரரும் இவராவார். காஸ்பரோவ் மற்றும் கார்ல்சன் முறையே 21 மற்றும் 22 வயதில் வெற்றிபெற்றனர்.

**7. அண்மையில், கிழக்குக் கடற்கரையில், 'பூர்வி லெஹர்' என்ற பயிற்சியை நடத்திய ஆயுதப்படை எது?**

அ. இந்தியக் கடற்படை ✓

ஆ. இந்திய வான்படை

இ. இந்திய இராணுவம்

ஈ. தேசிய பாதுகாப்புப் படை



★ இந்திய கடற்படை, 'பூர்வி லெஹர்' என்ற பயிற்சியை கிழக்குக் கடற்கரையில் நடத்தியது. பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதற்காக இந்தியக் கடற்படையின் தயார்நிலையை மதிப்பிடுவதற்கான நடை–முறைகளை சரிபார்ப்பதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டது. யதார்த்தமான சூழ்நிலையில் போர் பயிற்சி மற்றும் ஆயுத கட்டத்தின்போது பல்வேறு துப்பாக்கிச்சூடுகளை வெற்றிகரமாக நடத்துவது, போர் சூழலில் வியூகம் வகுப்பது உட்பட பல கட்டங்களாக இப்பயிற்சி நடத்தப்பட்டது. இந்தப்பயிற்சி மதிப்புமிக்க படிப்பினைகளை வழங்கியது, இதன்மூலம் பிராந்தியத்தில் கடல்சார் சவால்களுக்கான தயார்நிலை மேம்படுத்தப்பட்டது.

**8. திருச்சூர் பூரம் திருவிழாவுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. TN (தமிழ்நாடு)

ஆ. KA (கர்நாடகா)

இ. MH (மகாராஷ்டிரா)

ஈ. KL (கேரளா) ✓



★ உலகளவில் கொண்டாடப்படும் ஒரு மிகப்பெரிய கோவில் திருவிழாவான திருச்சூர் பூரம் திருவிழா, கேரளத்தின் வளமான கலாசாரம் மற்றும் பன்முகத்தன்மையை உள்ளடக்கிய ஒரு விழாவாகும். பாரம்பரியத்தில் வேரூன்றிய இவ்விழா, இசை, ஊர்வலம், கண்காட்சிகள் மற்றும் வாணவேடிக்கைகளுடன் அனைத்து பின்னணி மக்களையும் ஒன்றிணைக்கிறது. ஏழு நாட்கள் நீடிக்கும் இவ்விழாவின் சிறப்பம்சமானது மலையாள மாதமான மேசத்தின் ஆறாம் நாள், பூரம் நட்சத்திரத்துடன் ஒத்துப்போகிறது. 1796ஆம் ஆண்டு ஷக்தன் தம்புரானால் இவ்விழா உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு, ஏப்ரல்.20 அன்று திருச்சூர் பூரம் கொண்டாடப்பட்டது.

**9. அண்மையில், கீழ்காணும் எவ்விடத்தில் வைத்து இந்தியப்பிரதமரால் பகவான் மகாவீர் நிர்வாண மகோத்சவம் தொடங்கி வைக்கப்பட்டது?**

அ. புது தில்லி ✓

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. புனே



★ மகாவீர் ஜெயந்தி அன்று புது தில்லியில், 2550ஆவது பகவான் மகாவீர் நிர்வாண மகோத்சவை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கி வைத்தார். பகவான் மகாவீருக்கு மரியாதை செலுத்திய அவர், பள்ளி மாணாக்கரின் நடன நிகழ்வைக் கண்டுகளித்ததோடு, நினைவு அஞ்சல்தலை மற்றும் நாணயத்தை அப்போது வெளியிட்டார். கூட்டத்தில் உரையாற்றிய அவர், மகாவீரின் மதிப்புகளை நோக்கிய இளைஞர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டியதோடு சமண சமூகத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

**10. அண்மையில், சுழிய நிழல் நாள் (Zero Shadow Day) காணப்பட்ட இந்திய நிலப்பகுதி எது?**

அ. புதுச்சேரி ✓

ஆ. கிரேட் நிக்கோபார்

இ. குமரி முனை

ஈ. கவரட்டி



★ அண்மையில் புதுச்சேரியில் சுழிய நிழல் நாள் காணப்பட்டது. இது ஆண்டுக்கு இருமுறை கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையில் நிகழ்கிறது; இது டிசம்பர் மற்றும் ஜூன் கதிர் திருப்பங்களுக்கு இடையில் நிகழ்கிறது. இந்த நிகழ்வு +23.5 மற்றும் –23.5 டிகிரிக்குள் உள்ள அட்சரேகைகளுக்கு மட்டுமே பொருந்தும். இந்த நாளில், சூரியன் நேரடியாக உச்சியில் தென்படும் காரணத்தால் உருவத்தின் நிழல் அவ்வுருவத்தின் கீழே விழுவதில்லை. சூரிய வொளி செங்குத்தாக மேற்பரப்பில் விழும்போது இது நிகழும், இதன் விளைவாக நிழல்கள் மறைக்கப்படுகின்றன.

### 11. ரேம்பேஜ் என்ற ஏவுகணையை உருவாக்கிய நாடு எது?



அ. ஈரான்

ஆ. ஈராக்

**இ. இஸ்ரேல்** ✓

ஈ. இந்தோனேசியா

★ அண்மையில் ஈரானிய இராணுவத் தளத்தின் மீதான தாக்குதலில் வான்வெளியில் இருந்து தரையைத் தாக்கும் அதிநவீன ஆயுதமான, 'ரேம்பேஜ்' ஏவுகணையை இஸ்ரேல் பயன்படுத்தியது. இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் நிறுவனம் மற்றும் இஸ்ரேலிய ராணுவ நிறுவனம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட, 'ரேம்பேஜ்' என்பது ஒரு நீண்டதொலைவு செல்லும் சூப்பர்சோனிக் ஏவுகணையாகும். இது வலுவூட்டப்பட்ட இலக்குகளுக்கு எதிராக மிகத்துல்லியமான தாக்குதலுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 12. 2024 செப்.22–23 அன்று எதிர்கால உச்சிமாநாட்டை (Summit of the Future) நடத்தவுள்ள அமைப்பு எது?

அ. உலக வங்கி

**ஆ. ஐநா பொதுச்சபை** ✓

இ. சர்வதேச நாணய நிதியம்

ஈ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

★ பலதரப்பு வளர்ச்சி வங்கிகளில் சீர்திருத்தம் மேற்கொள்வது நடப்பு 2024 – எதிர்கால உச்சிமாநாட்டின் கருப்பொருள் ஆக இருக்கும் என்று பொதுச்செயலாளர் அறிவித்தார். 2024 செப்டம்பர்.22–23 அன்று ஐநா பொதுச்சபை எதிர்கால உச்சிமாநாட்டை நடத்துகிறது. பலதரப்பு வளர்ச்சி வங்கிகள் என்பவை பல்வேறு உறுப்புநாடுகளுக்கு உதவி மற்றும் நிபுணத்துவத்தை வழங்கும் முக்கியமான சர்வதேச நிதிநிறுவனங்களாகும். பொருளாதார முன்னேற்றத்தை வளர்ப்பதற்கும், வறுமையைப் போக்குவதற்கும், நிலையான வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் அவை உலகளவில் பணியாற்றுகின்றன. உலக வங்கி குழுமம், ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) போன்றவை முக்கிய பலதரப்பு வளர்ச்சி வங்கிகளுள் அடங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 23-04-2024 – உலக புத்தக நாள்.**

**கருப்பொருள்:** Read Your Way.

---

**2. சூரத் மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக பாஜக வேட்பாளர் போட்டியின்றி தேர்வு!**

குஜராத் மாநிலம் சூரத் மக்களவைத் தொகுதி பாஜக வேட்பாளர் போட்டியின்றி நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். காங்கிரஸ் சார்பில் மனுத்தாக்கல் செய்திருந்த நீலேஷ் கும்பானியின் மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1951ஆம் ஆண்டு முதல் தற்போது வரை மக்களவைக்கு 35 பேர் மட்டுமே போட்டியின்றி தேர்வாகியுள்ளனர். கடந்த 12 ஆண்டுகளில் இப்போதுதான் முதன்முறையாக ஒருவர் போட்டியின்றி தேர்வாகியுள்ளார். பாஜக சார்பில் மக்களவைக்கு போட்டியின்றி தேர்வான முதல் வேட்பாளர் என்ற பெருமையை முகேஷ் தலால் பெற்றுள்ளார். சிக்கிம், ஸ்ரீநகரில் போட்டியின்றி தேர்வாவது அதிகம் நிகழ்ந்துள்ளது.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், 2024 – உலக பத்திரிகை அறக்கட்டளையின் நிழற்பட விருதை வென்றவர் யார்?**

அ. ரொனால்ட் ஸ்கீமிட்

**ஆ. முகமது சலேம்** ✓

இ. கயின் லூயிஸ்

ஈ. ரூபன் சோட்டோ



★ காஸா துயரத்தைப் பிரதிபலிக்கும் நிழற்படம், உலக பத்திரிகை நிழற்பட அறக்கட்டளையால் இந்த ஆண்டுக்கான சிறந்த நிழற்படமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிழற்படத்தை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன நிழற்படக்கலைஞர் முகமது சலேம் கடந்த அக்.17இல் எடுத்துள்ளார். அந்தப்படத்தில், காஸாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் நடத்திய வான்வழித்தாக்குதலில் தாயுடன் உயிரிழந்த குழந்தையின் உடலை அவரது உறவினர் சோகத்துடன் ஏந்தியுள்ள காட்சி இடம்பெற்றுள்ளது. அந்தப் படம், காஸா போரின் பாதிப்பை ஆணித்தரமாக வெளிப்படுத்துவதாக விருதுக்கான தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

**2. சமீபத்தில், "உலக இராணுவ செலவினங்களின் போக்குகள் – 2023" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. நேட்டோ

ஆ. ஐக்கிய நாடுகள்

**இ. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்** ✓

ஈ. உலக வங்கி

sipri

STOCKHOLM INTERNATIONAL PEACE RESEARCH INSTITUTE

★ 1966இல் நிறுவப்பட்ட SIPRIஇன், "உலக இராணுவ செலவினங்களின் போக்குகள், 2023" அறிக்கை, உலகளாவிய இராணுவ செலவினங்களை எடுத்துக்காட்டுகிறது. அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக $83.6 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான இராணுவ செலவுடன் இந்தியா நான்காமிடத்தில் உள்ளது. நேட்டோ நாடுகளின் மொத்தம் இராணுவ செலவினம் $1341 பில்லியன் ஆகும்; இது உலக செலவில் 55% ஆகும். ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்பு மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு இடையே உலகின் மொத்த இராணுவ செலவு $2443 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. SIPRI மோதல் ஆராய்ச்சி, ஆயுதங்கள், ஆயுதக்கட்டுப்பாடு மற்றும் ஆயுதக்குறைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**3. அண்மையில், 2024 – பெருங்கடல் தசாப்த மாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. பார்சிலோனா, ஸ்பெயின்** ✓

ஆ. பாரிஸ், பிரான்ஸ்

இ. புது தில்லி, இந்தியா

ஈ. மாஸ்கோ, ரஷ்யா




★ பார்சிலோனாவில் நடைபெற்ற 2024 – பெருங்கடல் தசாப்த மாநாட்டில், ஆழ்கடல் சுற்றுச்சூழல் புரிதலுக்கான பிராந்திய அடிப்படையிலான கடல் கண்காணிப்பு மையம் குறித்து இந்தியா முன்மொழிந்தது. புவி அறிவியல் செயலர் M இரவிச்சந்திரன் தலைமையிலான குழுவினர், இதுகுறித்து வலியுறுத்தினர். ஏப்ரல் 10 முதல் 12 வரை நடைபெற்ற இந்த மாநாடு, ஐநா பெருங்கடல் அறிவியல் இலக்குகளை (2021–2030) நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பிடுவதை நோக்கமாகக்கொண்டது. ஸ்பெயின், UNESCOஉடன் இணைந்து, "Delivering the science we need for the ocean we want" என்ற கருப்பொருளின் கீழ் இந்நிகழ்வை நடத்தியது.

**4. 2024 – உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Indigenous Languages

**ஆ. Read Your Way** ✓

இ. To share a story

ஈ. Read, so you never feel low

★ வாசிப்பு மற்றும் நூல் வெளியீட்டை ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் ஏப்ரல்.23 அன்று உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளுக்கான நிகழ்வுகளை UNESCO உலகம் முழுவதும் நடத்துகிறது. "Read Your Way" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். இக்கருப்பொருள் வாசிப்பின் மகிழ்வை எடுத்துக்காட்டுகிறது. 1995இல் நிறுவப்பட்ட இந்நாள், ஷேக்ஸ்பியர் மற்றும் செர்வாண்டஸ் போன்ற இலக்கிய ஜாம்பவான்களை கௌரவிக்கிறது. ஏப்.23 செர்வாண்டஸ் மற்றும் ஷேக்ஸ்பியரின் நினைவு நாளைக் குறிக்கிறது.

**5. ஆசியாவின் காலநிலை – 2023 என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஆ. உணவு மற்றும் உழவு அமைப்பு

**இ. உலக வானிலை அமைப்பு** ✓

ஈ. உலக சுகாதார நிறுவனம்

★ ஆசியாவின் காலநிலை–2023 என்ற அறிக்கையின் 4ஆவது பதிப்பை NMHS, RCCகள் மற்றும் ஐநா முகமைகள் உட்பட பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து உலக வானிலை அமைப்பு (WMO) வெளியிட்டுள்ளது. இது முக்கிய தட்பவெப்பநிலை குறிகாட்டிகள், தாக்கங்கள் மற்றும் இடர்கள், இயற்பியல் அறிவியல், சமூக–பொருளாதாரம் மற்றும் கொள்கை அம்சங்களை எடுத்துரைக்கிறது. 2023ஆம் ஆண்டில், ஆசியா அதன் இரண்டாவது மிகவுயர்ந்த சராசரி வெப்பநிலை, தீவிர வெப்ப நிகழ்வுகள் மற்றும் கடல்–மேற்பரப்பு வெப்பநிலை முரண்களை பதிவுசெய்தது. நீர் வானிலைசார் இடர்கள் ஈராயிரத்துக்கும் மேற்பட்ட இறப்புகளுக்கு வழிவகுத்துள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6. அண்மையில் ஓய்வு பெறுவதாக அறிவித்த சௌரவ் கோசல் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ. ஸ்குவாஷ்** ✓

ஆ. டேபிள் டென்னிஸ்

இ. செஸ்

ஈ. பூப்பந்து



★ இந்தியாவின் தலைசிறந்த ஸ்குவாஷ் வீரரான சௌரவ் கோசல், 21 ஆண்டுகால தொழிற்முறை வாழ்க்கைக்குப் பிறகு ஸ்குவாஷிலிருந்து ஓய்வுபெற்றார். 2003இல் தொடங்கிய அவரது ஸ்குவாஷ் வாழ்க்கை, 10 PSA பட்டங்களைப் பெற்று 18 இறுதிப்போட்டிகளை அவருக்கு பெற்றுத்தந்தது. அவரது கடைசி வெற்றி 2021 மலேசிய ஓபனில் நிகழ்ந்தது. 2019இல் உலகின் No:10ஆவது இடத்தைப்பிடித்த சௌரவ், இந்திய தரவரிசையில் மிகவுயர்ந்த இடத்தைப் பிடித்தார். 2004இல் ஜூனியர் பிரிவில் உலகின் No:1 இடத்தைப் பிடித்த முதல் இந்தியர் மற்றும் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் பத்து இடங்களை எட்டிய ஒரே வீரர் இவராவார்.

**7. முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ள இடம் எது?**

**அ. கேரளா** ✓ ஆ. கர்நாடகா

இ. கோவா ஈ. ஆந்திர பிரதேசம்



★ முல்லைப்பெரியாறு நீர்ப்பிடிப்புப்பகுதி தொடர்பான கேரள மாநிலத்தின் சர்வே ஆப் இந்தியா அறிக்கைக்கு தமிழ்நாடு எதிர்ப்புத் தெரிவித்தது தொடர்பான சட்டப்பூர்வ வழக்குகளை ஜூலை.10ஆம் தேதி இறுதிசெய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. கேரளாவில் பிரம்மாண்ட மகிழுந்து நிறுத்துமிடம் கட்டியதில் தொடங்கிய இந்தச்சிக்கல், தமிழ்நாட்டை கேரளாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நிரந்தரத் தடைவிதிக்கத் தூண்டியது. கடந்த 2023இல் பெரியாறு புலிகள் சரணாலயத்தில் கேரளத்தின் திட்டங்களுக்குத் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் அனுமதி கொடுத்ததை அடுத்து மோதல் தீவிரமடைந்தது. முல்லைப்பெரியாறு அணை என்பது கேரளாவில் பெரியாற்றின்மீது 1887 மற்றும் 1895க்கு இடையில் கட்டப்பட்ட அமைந்துள்ள ஓர் அணையாகும்.

**8. விண்வெளி, பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பில் புதுமைகளை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ராஷ்ட்ரிய ரக்ஷா பல்கலைக்கழகம் அண்மையில் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. ரஷ்யா

ஆ. இஸ்ரேல்

**இ. பிரான்ஸ்** ✓

ஈ. ஜப்பான்

★ இந்தியாவின் காந்திநகரில் அமைந்துள்ள ராஷ்ட்ரிய ரக்ஷா பல்கலைக்கழகம் மற்றும் பிரான்ஸின் ஸ்டார்பர்ஸ்ட் ஏரோஸ்பேஸ் ஆகியவை விண்வெளி, பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பில் புதுமைகளை அதிகரிப்பதற்காக ஒரு குறிப்பிடத்தக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது இந்தியா–பிரான்ஸ் உத்திசார்ந்த கூட்டாண்மையுடன் இணைகிறது மற்றும் 100 மில்லியன் யூரோ துணிகர மூலதன நிதியத்தை உருவாக்குவதை உள்ளடக்கியது. இந்திய ஸ்டார்ட்அப்களும் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆதரவைப் பெறும்.

**9. அண்மையில், இந்திய விண்வெளி சங்கத்தின் (ASI) மதிப்புமிக்க ஆர்யபட்டா விருதைப் பெற்றவர் யார்?**

அ. G சதீஷ் ரெட்டி

ஆ. ராம் நரேன் அகர்வால்

இ. S சோம்நாத்

**ஈ. பவுலூரி சுப்பா ராவ்** ✓



★ ஆனந்த் டெக்னாலஜிஸின் நிறுவனர், தளமைச் செயலதிகாரி மற்றும் தலைவர் பவுலூரி சுப்பா ராவ், இந்தியாவில் விண்வெளித்துறையில் அவர் செய்த சிறந்த பங்களிப்புகளுக்காக இந்தியாவின் ஏரோநாட்டிக்கல் சொசைட்டி (ASI) மூலம் மதிப்புமிக்க, 'ஆர்யபட்டா விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார். கூடுதலாக, விண்வெளி மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் அவரின் குறிப்பிடத்தக்க தாக்கத்தை அங்கீகரித்து, ASIஆல், 'பிரபலமான பங்காளர்' எனவும் அறிவிக்கப்பட்டார்.


**10. அண்மையில், எந்த நாட்டின் அறிவியலாளர்கள் நொடிகளில் மின்னேற்றம் செய்யக்கூடிய சோடியம்–அயன் மின்கலத்தை உருவாக்கியுள்ளனர்?**

அ. சீனா

**ஆ. தென் கொரியா** ✓

இ. இந்தியா

ஈ. ஜப்பான்




★ தென்கொரிய ஆராய்ச்சியாளர்கள் உயராற்றல்கொண்ட ஒரு கலப்பின சோடியம்–அயன் மின்கலத்தை உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர். தொழில்நுட்பத்திற்கான கனிம தேவையை மாற்றியமைக்கும் இந்த மின்கலம் நொடிகளில் மின்னேற்றம் பெறுகிறது. சோடியம், லித்தியத்தைவிட கிட்டத்தட்ட 1000 மடங்கு அதிகமாக கிடைக்கிறது. இது மலிவான, அணுகக்கூடிய ஆற்றல் சேமிப்பிற்கு உறுதியளிக்கிறது.

11. **அண்மையில், அலிகார் இசுலாமிய பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர் யார்?**



**அ. நைமா கதூன் ✓**

ஆ. பாத்திமா ஷேக்

இ. ஃபர்ஹத் ஹாஷ்மி

ஈ. குஷ்பூ மிர்சா

★ பேராசிரியர் நைமா கதூன் அலிகார் இசுலாமிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அந்தப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் இப்பதவியை வகிக்கும் முதல் பெண் இவராவார். கல்வி அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனத்திற்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு அங்கீகாரம் வழங்கினார். தற்போது அலிகார் இசுலாமிய பல்கலையின் மகளிர் கல்லூரியின் முதல்வராக இருக்கும் நைமா கதூன், ஐந்தாண்டுகள் அல்லது அவருக்கு 70 வயது வரும்வரை அப்பதவியில் இருப்பார்.

12. **2024 – ACC பரகானோ ஆசிய சாம்பியன்ஷிப்பில் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்ற பிராச்சி யாதவ் சார்ந்த மாநிலம் எது?**



அ. ஜார்கண்ட்

ஆ. உத்தர பிரதேசம்

**இ. மத்திய பிரதேசம் ✓**

ஈ. ஹரியானா

★ மத்திய பிரதேச மாநிலத்தின் குவாலியரைச் சேர்ந்த முன்னணி பாரா படகோட்டியான பிராச்சி யாதவ், ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற ACC பாராகானோ ஆசிய சாம்பியன்ஷிப் – 2024இல் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றார். அவர் பெண்கள் KL2 மற்றும் பெண்கள் VL2 பிரிவுகளில் வெற்றி பெற்றார். பிராச்சி யாதவ், விளையாட்டில் தனது சிறந்த சாதனைகளுக்காக கடந்த 2023ஆம் ஆண்டில் மதிப்புமிக்க அர்ஜுனா விருதுடன் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு: ஏப்.29இல் தொடக்கம்.**

தமிழ்நாட்டில் ஏப்.29 முதல் மே.01 வரை 3 நாள்கள் நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு பணி நடைபெறும் என வனத் துறை தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டின் மாநில விலங்காகவும், அழிந்துவரும் உயிரினங்களில் ஒன்றாகவும் உள்ள நீலகிரி வரையாடுகளை பாதுகாக்கும் பொருட்டு 2022ஆம் ஆண்டு, 'நீலகிரி வரையாடு' திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு, கேரள வனப்பகுதிகளில் நான்கு புலிகள் காப்பகங்கள், பதினான்கு வனக்கோட்டங்களில் அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்றாக உள்ள நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


1. 'என்செலடஸ்' என்றால் என்ன?

அ. பண்டைய நீர்ப்பாசன முறை

ஆ. அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்

**இ. சனியின் பெருங்கடல் நிலவு ✓**

ஈ. ஆக்கிரமிப்பு தாவரம்



★ சனிக்கோளின் 146 நிலவுகளில் ஒன்றான என்செலடஸ், அதன் திரவ கடல், கார்பன் அடிப்படையிலான வேதியியல் மற்றும் அலைவெப்ப ஆற்றல் ஆகியவற்றால் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியத்தை வெளிப்படுத்துகிறது. 2004 முதல் 2017 வரையிலான NASAஇன் காசினி–ஹீஜென்ஸ் பணியானது, என்செலடஸிலிருந்து வெளிப்படும் நீர்க்குமிழ்களைக்கண்டுபிடித்தது; அதன் மேற்பரப்பு கடலின் கலவையைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கியது. பனித்துகள்களில் உயிராதரவு பாஸ்பேட் இருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. சனிக்கோளின் மற்ற நிலவுகளான மீமாஸ் மற்றும் டைட்டன் ஆகியவையும் உயிர்கள் இருப்புக்கான அறிகுறிகளைக் காட்டுகின்றன.

2. அண்மையில், தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில், 'சித்திரை தேர் திருவிழா' விமரிசையாகக் கொண்டாடப்பட்டது?

**அ. மதுரை ✓**

ஆ. விருதுநகர்

இ. திருச்சிராப்பள்ளி

ஈ. திருநெல்வேலி



★ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெறும் சித்திரை தேர் திருவிழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாசி வீதிகளில் குவிந்தனர். தமிழ் மாதங்களான சித்திரை அல்லது பங்குனியின்போது கொண்டாடப்படும் இந்தத் திருவிழா, மீனாட்சியம்மை மற்றும் சொக்கநாதரின் தெய்வீகத் திருமணவிழாவைக் கொண்டாடுகிறது. இது சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையிலான ஒற்றுமையைப் போற்றும் விதமாக, சிவபெருமான் மற்றும் திருமால் இருவரையும் மகிமைப்படுத்துகிறது. 700 ஆண்டுகளுக்கு முந்தைய பாரம்பரியத்தில் வேரூன்றிய அழகர் மலையில் கோயில் கொடியேற்றத்துடன் தொடங்கி, கொண்டாட்டங்களில் முடிவடையும் இந்த திருவிழா பல்வேறு சடங்குகளை உள்ளடக்கியுள்ளது.

3. 'கிரிஸ்டல் மேஸ் – 2' என்றால் என்ன?

**அ. எறிகணை ✓**

ஆ. சிறுகோள்

இ. புவி தகவல் தொடர்பு செயற்கைக்கோள்

ஈ. ஆக்கிரமிப்பு திட்டம்



★ இந்திய வான்படை அண்மையில் ROCKS எனப்படும் கிரிஸ்டல் மேஸ்–2 எறிகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது. இஸ்ரேலைப் பூர்வீகமாகக் கொண்ட இந்த வான்வழி ஏவப்படும் நடுத்தர தொலைவு செல்லும் எறிகணை, நீண்ட தொலைவு ரேடார்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் போன்ற உயர்மதிப்புகொண்ட நிலையான மற்றும் இடமாற்றக்கூடிய இலக்குகளை குறிவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்னோடியான கிரிஸ்டல் மேஸ்–1உடன் ஒப்பிடும்போது, 250 கிமீ–க்கும் அதிகமான வரம்பினை இது கொண்டுள்ளது.

4. தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. 22.ஏப்ரல்

ஆ. 23.ஏப்ரல்

**இ. 24.ஏப்ரல் ✓**

ஈ. 25.ஏப்ரல்



★ ஒவ்வோர் ஆண்டும் ஏப்.24 அன்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் இந்தியாவில் தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிறது. உள்ளாட்சிகளை சட்டரீதியாக வலுப்படுத்த 1993ஆம் ஆண்டு இதேநாளில், அரசியலமைப்பு (73ஆவது சட்டதிருத்தம்) சட்டம்,1992 அமலுக்கு கொண்டுவரப்பட்டது.

### 5. 2024 – உலக நோய்த்தடுப்பு வாரத்துக்கானக் கருப்பொருள் என்ன?




அ. Long Life for All

**ஆ. Humanly Possible: Immunization for All** ✓

இ. Vaccines bring us closer

ஈ. Vaccines Work for All

★ தடுப்பூசிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக ஆண்டுதோறும் ஏப்.24–30 வரை, 'உலக நோய்த்தடுப்பு வாரம்' கொண்டாடப்படுகிறது. 2012இல் உலக சுகாதார அவையால் நிறுவப்பட்ட இது, தற்போது 180 நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இவ்வாரத்திற்கான கருப்பொருள், "Humanly Possible: Immunization for All" என்பதாகும். இது, தடுப்பூசிகளுக்கான உலகளாவிய அணுகலை வலியுறுத்துகிறது. தடுப்பூசி குறித்த பரப்புரைகள் பெரியம்மையையும் இளம்பிள்ளைவாதத்தையும் முற்றிலுமாக ஒழித்துள்ளன.

### 6. மியாவாக்கி முறை என்றால் என்ன?



**அ. உள்நாட்டுத் தாவரங்களைக்கொண்டு அடர்ந்த காடுகளை உருவாக்கும் நுட்பம்** ✓

ஆ. அயல்நாட்டு இனங்களைக் கொண்டு நகர்ப்புற தோட்டங்களை அமைத்தல்

இ. மரபணு மாற்றப்பட்ட தாவரங்களைப் பயன்படுத்தி தோட்டங்களை உருவாக்குதல்

ஈ. பாதி வறண்ட பகுதிகளில் வணிக வேளாண்மையை ஊக்குவித்தல்

★ இந்தியாவில் உள்ள இஸ்ரேலிய தூதரகம், 'மில்லியன் மியாவாக்கி' என்ற திட்டத்திற்காக கூட்டிணைந்துள்ளது; இது நகர்ப்புறங்களில் பேரளவில் காடுவளர்ப்பதன்மூலம் இந்திய நகரங்களில் காற்றின்தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. ஜப்பானிய தாவரவியலாளர் அகிரா மியாவாக்கி உருவாக்கிய மியாவாக்கி முறையின் அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. குறைந்த இடைவெளிகளில் இயற்கையாக பல்லுயிர் பெருக்கம் செய்வதை இது ஊக்குவிக்கிறது. இயற்கைக் காடுகளின் மருத்துவ குணங்கள் மற்றும் மழை உற்பத்தி போன்ற சில குணங்கள் இல்லாவிட்டாலும், மியாவாக்கி காடுகள் சுரங்கம்போன்ற நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தணிக்கவும் மற்றும் கரியமில் வாயுவைக் கவரவும் உதவுகின்றன.

### 7. அண்மையில், 'ASEAN எதிர்கால மன்றம்' நடைபெற்ற இடம் எது?

அ. ஜகார்த்தா, இந்தோனேசியா

ஆ. புனோம் பென், கம்போடியா

இ. கோலாலம்பூர் மலேசியா

**ஈ. ஹனோய், வியட்நாம்** ✓

ASEAN FUTURE FORUM 2024

★ இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், வியட்நாமின் ஹனோய் நகரில் தொடங்கிய, 'ASEAN எதிர்கால மன்றத்தில்' மெய்நிகராக இணைந்தார். 10 உறுப்புநாடுகளை உள்ளடக்கிய ASEAN, பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய நிலைத்தன்மையில் கவனம் செலுத்துகிறது. 2023இல் 43ஆவது ASEAN உச்சிமாநாட்டில் முன்மொழியப்பட்ட இந்த மன்றம், உறுப்புநாடுகள் மற்றும் கூட்டாளர்களுக்கு யோசனைகள் மற்றும் கொள்கை பரிந்துரைகளை பரிமாறிக் கொள்வதற்கான ஒரு தளமாகச் செயல்படுகிறது.

**8. அண்மையில், பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின்கீழ் கடன்களை வழங்குவதற்கு டாடா பவர் சோலார் சிஸ்டம்சுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வங்கி எது?**

அ. NABARD

**ஆ. இந்தியன் வங்கி** ✓

இ. பாரத வங்கி

ஈ. கரூர் வைஸ்யா வங்கி

★ சென்னையைச் சார்ந்த இந்தியன் வங்கி, டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் உடன் இணைந்து பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின்கீழ் கடன்களை வழங்குகிறது. 2024 பிப்.13 அன்று பிரதமர் நரேந்திர மோதியால் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, இந்தியாவில் ஒரு கோடி வீடுகளுக்கு மேற்கூரை சூரிய அமைப்புமூலம் இலவச மின்சாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தகுதியுள்ள குடும்பங்கள், குறிப்பிட்ட அளவுகோல்களைப் பூர்த்தி செய்து, மாதந்தோறும் 300 அலகு வரை இலவச மின்சாரத்தைப் பெறலாம். இந்தத் திட்டத்திற்காக அரசு ₹75,021 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

**9. புவி நாள் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சி கவுன்சிலால், இந்தியாவின் மிகப்பெரிய தட்பவெப்பநிலை கடிகாரம் நிறுவப்பட்ட இடம் எது?**

அ. சென்னை

**ஆ. புது தில்லி** ✓

இ. பிரயாக்ராஜ்

ஈ. உஜ்ஜயினி




★ புவி நாள் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக புது தில்லி ரபி மார்கில் உள்ள தலைமையக கட்டிடத்தில் நாட்டின் மிகப்பெரிய தட்பவெப்பநிலை கடிகாரம் நிறுவப்பட்டு இயங்கச்செய்யப்பட்டது. தட்பவெப்பநிலை மாற்றம் மற்றும் அதன் தீயவிளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சி குழுமத்தின் நோக்கத்தை இந்த நிகழ்வு குறிக்கிறது. ஐஐடி பாம்பேயைச் சேர்ந்த பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி, குடிமக்கள் மத்தியில் ஆற்றல் கல்வியறிவுக்கான தேவையை வலியுறுத்தி, ஆற்றல் நுகர்வைக் குறைக்குமாறு வலியுறுத்தினார்.

**10. வாயேஜர் – 1 விண்கலம் என்பது கீழ்காணும் எந்த விண்வெளி அமைப்பால் ஏவப்பட்ட விண்வெளி ஆய்வு விண்கலமாகும்?**

அ. ISRO

**ஆ. NASA** ✓

இ. JAXA

ஈ. CNSA



★ கடந்த 1977ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட NASAஇன் வாயேஜர்–1 ஆய்வுக்கலம், செயலிழந்த காலத்திற்குப் பிறகும் முக்கியமான தகவல்களை அனுப்புகிறது என்று NASA அறிவித்துள்ளது. வெளிப்புற சூரிய குடும்பத்தையும் அதற்கு அப்பாலும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட வாயேஜர்–1 விண்கலத்தின் பணிகளுள் வியாழன் மற்றும் சனிக் கோளின் புதிய நிலவுகள் மற்றும் வளையங்களைக் கண்டறிதலும் அடங்கும். இது கடந்த 2012ஆம் ஆண்டில் சூரிய குடும்பத்திலிருந்து வெளியேறிய முதல் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருளாக மாறியது. குறைந்தபட்சம் 2025 ஆம் ஆண்டு வரை வாயேஜர்–1 செயல்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது; தற்போது சூரியனில் இருந்து 13.8 பில்லியன் மைல்கள் தொலைவில் அது அமைந்துள்ளது.

**11. அண்மையில், "மீளுருவாக்க நீலப்பொருளாதாரத்தை நோக்கி – நீலப்பொருளாதாரத்தை வரைபடமாக்கல்" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN)** ✓

ஆ. இயற்கை வள பாதுகாப்பு கவுன்சில் (NRDC)

இ. உலக வனவிலங்கு நிதியம் (WWF)

ஈ. வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் (WCS)

★ IUCN ஆனது "Towards a Regenerative Blue Economy – Mapping the Blue Economy" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது நீலப்பொருளாதாரத்தை மீளுருவாக்கம் செய்வதற்கான வரையறை மற்றும் கொள்கைகளை முன்மொழிகிறது. நீலப்பொருளாதார மீளுருவாக்க மாதிரியானது, நிலையான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நியாயமான செழுமையின்மூலம், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பயனுள்ள மீள்–உருவாக்கம் மற்றும் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**12. அண்மையில், பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயத்தின் கணிசமான பகுதியை மறுமதிப்பீடு செய்வதற்குத் திட்டமிட்டுள்ள மாநில அரசு எது?**

**அ. தமிழ்நாடு** ✓



ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

★ திருவள்ளூர் மாவட்டத்தின் பழவேற்காடு ஏரியின்கண் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்தின் குறிப்பிடத்தக்க பரப்பை மறுமதிப்பீடு செய்வதற்கு தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு இடையே வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள பழவேற்காடு ஏரி, ஒடிஸாவின் சிலிகா ஏரிக்கு அடுத்து இந்தியாவின் 2ஆவது பெரிய உவர்நீர் ஏரியாகும். ஸ்ரீஹரிகோட்டா தீவு குளத்திற்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் ஒரு தடையாக இது செயல்படுகிறது. காலங்கி மற்றும் ஆரணி ஆறுகள்மூலம் உருவாக்கப்படும் இந்தச் சரணாலயம் நாரைகளின் வாழ்விடமாக புகழ்பெற்று விளங்குகிறது.

**13. அண்மையில், கீழ்காணும் எந்த இந்தியக் கடற்படை பாய்மரக்கப்பலில், இந்தியக் கடற்படையின் இரண்டு பெண் அதிகாரிகள் கிட்டத்தட்ட இரண்டு மாதகால கடல்கடந்த பயணத்தை மேற்கொண்டனர்?**

**அ. INSV தாரிணி** ✓




ஆ. INSV சரயு

இ. INSV காவேரி

ஈ. INSV கிர்பான்

★ இந்தியக் கடற்படையின் பாய்மரக்கப்பல் (INSV) தாரிணி சுமார் இரண்டு மாத கால வரலாற்றுச் சிறப்புமிக்க கடல் கடந்த பயணத்திற்குப் பின் கோவாவில் உள்ள அதன் தளத் துறைமுகத்திற்கு வெற்றிகரமாக திரும்பியது. இந்தியக் கடற்படையின் பெண் அதிகாரிகளான Lt. கமாண்டர் K தில்னா, Lt. கமாண்டர் A ரூபா ஆகியோர் இந்தப்பயணத்தை மேற்கொண்டனர். இதன்மூலம் இந்தியாவிலிருந்து இதுபோன்ற சாதனையை முதன்முறையாக நிகழ்த்தியவர்கள் என்ற பெருமையை இவர்கள் பெற்றுள்ளனர். INSV தாரிணி கப்பலில் இந்த ஆண்டு செப்டம்பரில் தொடங்கவுள்ள உலகைச்சுற்றிவரும் பயணத்திற்கு (சாகர் பரிக்கிரமா – 4) இரு பெண் அதிகாரிகளும் தயாராகி வருகின்றனர்.

**14. அண்மையில், இந்தியாவின் முதல் பாதுகாப்பு ஆலோசகராக Col. எடிசன் நாப்யோவை நியமித்த நாடு எது?**

அ. நியூசிலாந்து

ஆ. டோங்கா

இ. பிஜி

**ஈ. பப்புவா நியூ கினியா** ✓



★ பப்புவா நியூ கினியா, இந்தியாவின் முதல் பாதுகாப்பு ஆலோசகராக Col. எடிசன் நாப்யோவை நியமித்துள்ளது. இது 2 நாடுகளுக்கும் இடையிலான ஆழமான ஒத்துழைப்பைக் குறிக்கிறது. பாதுகாப்புப்படையின் இடைக்கால தலைவர் கமடோர் பிலிப் பொலேவாரா, இந்தியாவில் உள்ள PNG அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் இடையே பாலமாகப் பணியாற்றவுள்ள எடிசன் நாப்யோ பங்கேற்ற பிரியாவிடை விழாவிற்கு தலைமைதாங்கினார். Col. எடிசன் நாப்யோ, இந்தப் பதவியை வகிக்கும் முதல் நபராவார்.

**15. பசுமை நிதியளித்தலுக்கான இந்தியாவின் தேவையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட அதன் காலநிலை உத்தி – 2030 ஆவணத்தை வெளியிட்ட வங்கி எது?**

**அ. NABARD** ✓

ஆ. SIDBI

இ. SBI

ஈ. PNB

★ புவி நாளன்று, விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (NABARD) இந்தியாவின் பசுமை நிதி தேவைகளை இலக்காகக் கொண்டு, அதன் காலநிலை உத்தி – 2030 என்ற ஆவணத்தை வெளியிட்டது. பசுமைக் கடன்களை விரைவுபடுத்துதல், சந்தை உருவாக்கும் பாத்திரங்களை விரிவுபடுத்துதல், உள்ளக மாற்றம் மற்றும் வளங்களைத் திரட்டுதல் ஆகியவை அதன் உத்திகளுள் அடங்கும். 2030ஆம் ஆண்டுக்குள் மொத்தமாக 2.5 டிரில்லியன் டாலர்களை எட்டுவதற்கு இந்தியாவிற்கு ஆண்டுக்கு சுமார் $170 பில்லியன் தேவைப்படுகிறது, ஆனால் 2019–20 வரையில் $49 பில்லியன் மட்டுமே பசுமை நிதியாகப் பெறப்பட்டுள்ளது.

**16. 2024 – உலக மலேரியா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Zero Malaria starts with me

**ஆ. Accelerating the fight against malaria for a more equitable world** ✓

இ. Harness innovation to reduce the malaria disease burden

ஈ. Zero Malaria - Draw the line against Malaria




★ உலக மலேரியா நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.25 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Accelerating the fight against malaria for a more equitable world" என்பதாகும். கொசு கடித்தால் பரவும் மலேரியா, நடுக்கம் மற்றும் அதிக காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படுகிறது. இது வெப்பமண்டல பகுதிகளில் பரவலாக காணப்படுகிறது; முன்னெச்சரிக்கைகள்மூலம் இது தாக்காமல் தடுக்கலாம். நோய்த்தடுப்பு முறைகள் மற்றும் நோயின் தாக்கத்தை எதிர்த்துப்போராடுவதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்நாளினது நோக்கமாகும்.

**17. அண்மையில், இந்த ஆண்டின் சிறந்த பொதுத்துறை நிறுவனத்திற்கான விருது பெற்ற அமைப்பு எது?**

அ. BHEL

ஆ. ONGC

**இ. HAL** ✓

ஈ. IOCL

★ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் (HAL) ஆனது அகில இந்திய மேலாண்மை சங்கத்தின் (AIMA) நிர்வாக இந்திய விருதுகளில் ஆண்டின் சிறந்த பொதுத்துறை நிறுவனத்திற்கான விருதைப் பெற்றது. ஏப்ரல்.23 அன்று தில்லியில் நடந்த நிகழ்வில் குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் இந்த விருதை வழங்கினார். 2024 மார்ச்.31இல் முடிவடைந்த நிதியாண்டில் HAL ₹29,810 கோடிக்கு மேல் ஈட்டி சாதனை படைத்துள்ளது; இது 11% வளர்ச்சியாகும். 1957இல் நிறுவப்பட்ட AIMA, இந்தியா முழுவதும் சிறந்த நிர்வாகங்களை ஊக்குவிக்கிறது.

18. '*Stellaria mcclintockiae*' **என்றால் என்ன?**

**அ. ஒரு புதிய தாவர இனம்** ✓

ஆ. பாரம்பரிய நீர்ப்பாசன நுட்பம்

இ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

ஈ. கருந்துளை



★ ஸ்டெல்லாரியா (*Caryophyllaceae* இனங்கள்) குழுவைச் சேர்ந்த '*Stellaria mcclintockiae*' என்ற புதிய தாவர இனம், நெல்லியம்பதி மலைப்பகுதியில் உள்ள ஆராய்ச்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. மரபியல் நிபுணர் பார்பரா மெக்ளின்டாக்கிற்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்தப் பெயரிடப்பட்டுள்ளது; இது தென்னிந்தியாவில் இதுபோன்ற முதல் வகையாகும். காடுகளில் உள்ள பிற இனங்களுடன் ஒப்பிடும்போது இவ்வகைத் தாவர இனம் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றது.

19. **இராஷ்ட்ரிய ஆரோக்கிய நிதி (RAN) என்ற திட்டத்தை நிர்வகிக்கிற அமைச்சகம் எது?**

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்** ✓

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. விவசாய அமைச்சகம்

स्वास्थ्य एवं परिवार कल्याण मंत्रालय
MINISTRY OF HEALTH AND FAMILY WELFARE
सत्यमेव जयते

★ தில்லி உயர்நீதிமன்றம் அண்மையில் இராஷ்ட்ரிய ஆரோக்கிய நிதி (RAN) திட்டத்திற்கான புதிய வருமான வரம்பு "மிகக்குறைவு" என்று கருதியது. திருத்தப்பட்ட RAN திட்டத்தின்கீழ், பயன்பெறுவதற்கான மாத வருமான வரம்பு கிராமப்புறங்களுக்கு ₹1,571ஆகவும், நகர்ப்புறங்களுக்கு ₹1,605 ஆகவும் உள்ளது. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் RAN ஆனது இதயம், சிறுநீரகம், கல்லீரல் மற்றும் புற்றுநோய்போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்ட ஏழை நோயாளிகளுக்கு சிறப்பு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற ஒருமுறை நிதியுதவினை வழங்குகிறது.

20. **நீலகிரி வரையாடு திட்டத்தின் காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இரவிகுளம் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. கோவா



★ தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவை ஏப்.29 முதல் நீலகிரி வரையாட்டின் முதல் ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்பை நடத்தவுள்ளன. சுற்றுச்சூழல், தட்பவெப்பநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கான கூடுதல் தலைமைச்செயலாளர் சுப்ரியா சாஹு, இந்த முன்னெடுப்பிலிருந்து மதிப்புமிக்க நுண்ணறிவுகளை எதிர்பார்க்கிறார். இரவிகுளம் தேசியப் பூங்காவில் தென்மேற்குத்தொடர்ச்சி மலையை பூர்வீகமாகக்கொண்ட உள்ளூர் பறவையினங்களின் மிகப்பெரிய எண்ணிக்கை காணப்படுகிறது. தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு அழிவின் விளிம்பிலிருக்கும் உயிரினம் என்று IUCN தெரிவித்துள்ளது.

**21. அண்மையில், வெவ்வேறு உணவு வகைகளுக்கான உலகளாவிய சோடியம் வரையறைகளின் இரண்டாவது பதிப்பை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. FAO

**ஆ. WHO** ✓

இ. ILO

ஈ. WMO

★ உலக சுகாதார அமைப்பு (WHO) பல்வேறு உணவு வகைகளுக்கான உலகளாவிய சோடியம் வரையறைகளின் 2ஆம் பதிப்பை வெளியிட்டுள்ளது. சோடியம் உட்கொள்ளலைக் கட்டுப்படுத்தும் மற்றும் உயர் குருதியழுத்தம் மற்றும் உடற்பருமன் போன்ற நீண்டகால உடல்நலப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் முயற்சியின் ஒருபகுதியாகும் இது. இவ்வரையறைகள் சோடியம் நுகர்வைக் குறைப்பதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிப்பு மதிப்புகளாக செயல்படுகின்றன. சிறந்த உடல்நலஞ்சார் விளைவுகளுக்காக பெரியவர்கள் 2000 மிகி/நாள் சோடியத்திற்குக் (5கி/நாள் உப்புக்குச் சமம்) குறைவாக உட்கொள்ளுமாறு WHO அறிவுறுத்துகிறது.

**22. 2024 – சர்வதேச பிரதிநிதிகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Make the World a better place

**ஆ. Together, we challenge those in power** ✓

இ. People of the World

ஈ. Role of Delegates

★ ஐநா அவையில் தங்கள் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளின் முக்கிய பங்கை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.25ஆம் தேதி சர்வதேச பிரதிநிதிகள் நாள் கொண்டாடப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Together, we challenge those in power" என்பதாகும். ஐநா பிரதிநிதிகள் தங்களது ஒப்பந்தங்கள் குறித்து காலந்துரையாடுகிறார்கள், தங்கள் சொந்த நாடுகளுடன் ஒருங்கிணைக்கிறார்கள், கூட்டணிகளை உருவாக்குகிறார்கள் அல்லது சமரசம் செய்கிறார்கள்.

**23. கோங்ஜோம் நாளுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. ஜார்கண்ட்

ஆ. உத்தர பிரதேசம்

**இ. மணிப்பூர்** ✓

ஈ. ஹரியானா



★ ஆங்கிலேயர்களுக்கு எதிராக 1891இல் நடந்த கோங்ஜோம் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல்.23 அன்று மணிப்பூர் மாநிலம் கோங்ஜோம் நாளை அனுசரிக்கின்றது. தௌபல் மாவட்டத்தில் உள்ள கோங்ஜோம் போர் நினைவு வளாகத்தில் இந்த நிகழ்வு நடந்தது. மணிப்பூர் மாநில ஆளுநர் சுஸ்ரீ அனுசுயா உய்கே மற்றும் முதலமைச்சர் N பைரன் சிங் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து, தியாகிகளுக்கு மரியாதையும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தினர்.

**24. அண்மையில், பேரிடர் தாங்குதிறன் உள்கட்டமைப்பு குறித்த 6ஆவது சர்வதேச மாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. புது தில்லி** ✓

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு

★ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி தலைமையில் புது தில்லியில் பேரிடர் தாங்குதிறன் உள்கட்டமைப்பு குறித்த 6ஆவது சர்வதேச மாநாடு நடைபெற்றது. அப்போது, "நாளைய சிறந்த எதிர்காலத்திற்கான தாங்குதிறன்கொண்ட உள்கட்டமைப்பில் நாம் இன்று அவசியம் முதலீடு செய்ய வேண்டும்" என்பதைப் பிரதமர் வலியுறுத்தினார்.

★ "ஒவ்வொரு நாடும் தனித்தன்மையுடன் தாங்குதிறன் கொண்டதாக இருந்தால் மட்டுமே உலக நாடுகள் கூட்டாக தாங்குதிறனுடன் இருக்க முடியும்" என்று பிரதமர் நரேந்திர மோதி கூறினார். பகிரப்பட்ட அபாயங்கள் காரணமாக பகிரப்படும் தாங்குதிறனின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், பேரிடர் மீட்புத்திறன் உள்கட்டமைப்பு குறித்த இந்த மாநாடு கூட்டு இயக்கத்திற்காக உலகநாடுகள் ஒன்றிணைய உதவும் என்று கூறினார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. லதா மங்கேஷ்கர் விருது.**

பழம்பெரும் திரைப்பட பாடகியான லதா மங்கேஷ்கர் கடந்த 2022ஆம் ஆண்டு காலமானார். அவரின் நினைவாக 'லதா தீனநாத் மங்கேஷ்கர்' விருதை அவரது குடும்பத்தினர் மற்றும் அறக்கட்டளையினர் வழங்கி வருகின்றனர். அந்த வகையில் இந்த விருது 2022ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோதிக்கும் 2023ஆம் ஆண்டு திரைப்பட பாடகி ஆஷா போஸ்லேவுக்கும் வழங்கப்பட்டது. இதையடுத்து 2024ஆம் ஆண்டுக்கான லதா மங்கேஷ்கர் விருது நடிகர் அமிதாப் பச்சனுக்கு வழங்கப்பட்டது.

பல்வேறு பிரிவுகளின்கீழ் விருதுகள் வழங்கப்பட்ட இவ்விழாவில் இசையமைப்பாளர் ஏ ஆர் ரஹ்மானுக்கு, 'மாஸ்டர் தீனநாத் மங்கேஷ்கர்' விருது வழங்கப்பட்டது. இசைத்துறைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

---

**2. திரவ நைட்ரஜன் பயன்படுத்தினால் 10 ஆண்டுகள் சிறை; ₹10 இலட்சம் அபராதம்!**

திரவ நைட்ரஜன் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம், புகை பிஸ்கட் போன்ற உணவுப்பொருள்களை விற்பனை செய்தால் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ₹10 இலட்சம் அபராதமும் விதிக்கப்படும் என்று தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத்துறை எச்சரித்துள்ளது. மேலும், உலர்பனி (dry–ice) கலந்த பொருள்களையும் விற்கக்கூடாது என்றும், குழந்தைகளுக்கு உலர்பனி கொடுக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. இந்திய வரலாற்றுப் பதிவுகள் ஆணையத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

**அ. கலாச்சார அமைச்சகம்** ✓

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. மின்சார அமைச்சகம்

★ ஆவணக்காப்பக விவகாரங்களுக்கான உயர் ஆலோசனை அமைப்பான இந்திய வரலாற்றுப் பதிவுகள் ஆணையம் (IHRC), பதிவுகளை உருவாக்குபவர்கள், பாதுகாப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்களின் அகில இந்திய மன்றமாக செயல்படுகிறது. இது பதிவுகளின் மேலாண்மை & வரலாற்று ஆராய்ச்சிகள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது. 1919ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட IHRC, மத்திய கலாசார அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது. IHRCஇன் தனித்துவமான அடையாளம் மற்றும் அதன் நெறிமுறைகளைத் தெரியப்படுத்துவதற்காக, புதிய இலச்சினை மற்றும் குறிக்கோள் வாசக வடிவமைப்பு போட்டி நடைபெற்றது.

★ மைகௌ தளத்தில் 2023ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்போட்டியில், மொத்தம் 436 உள்ளீடுகள் பெறப்பட்டன. தில்லியைச் சேர்ந்த ஷௌர்யா பிரதாப் சிங் வடிவமைத்து சமர்ப்பித்த இலச்சினை மற்றும் குறிக்கோள் வாசகம் தேர்வு செய்யப்பட்டு இரண்டுக்குமான முதல் பரிசு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. 2024 – உலக அறிவுசார் சொத்துரிமை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Women and IP: Accelerating innovation and creativity

**ஆ. IP and the SDGs: Building our common future with innovation and creativity** ✓

இ. IP and Youth Innovating for a Better Future

ஈ. Taking your ideas to the market




★ உலக அறிவுசார் சொத்துரிமை நாளானது ஆண்டுதோறும் ஏப்.26 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது புதுமை மற்றும் படைப்பாற்றலை வளர்ப்பதில் அறிவுசார் சொத்துகளின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதற்காக WIPOஆல் அனுசரிக்கப்படுகிறது. "IP and the SDGs: Building our common future with innovation and creativity" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். 1974இல் ஐநாஇன் ஒரு சிறப்பு நிறுவனமாக WIPO மாறியது.

**3. அண்மையில், சமீபத்தில், 26ஆவது உலக ஆற்றல் காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. பெல்ஜியம்

**ஆ. நெதர்லாந்து** ✓

இ. ஜெர்மனி

ஈ. டென்மார்க்




★ 2024 ஏப்.24 அன்று நெதர்லாந்தின் ரோட்டர்டாமில் நடந்த 26ஆவது உலக ஆற்றல் மாநாட்டின்போது அமைச்சர்கள் அளவிலான வட்டமேசை மாநாடு கூடியது. துபாயில் நடந்த COP28 ஐநா காலநிலை மாற்ற மாநாட்டின் மாற்றத்தக்க தாக்கத்தை மையமாகக்கொண்ட விவாதங்கள் நடந்தேறின. "Redesigning Energy for People and Planet" என்ற கருப்பொருளின்கீழ் நடந்த இது, கணிக்கவியலா சூழலில் உலகளாவிய ஆற்றல் மாற்றங்களை வடிவமைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

**4. அண்மையில், இந்தியாவின் முதல் பன்னோக்கு பசுமை ஹைட்ரஜன் சோதனை திட்டம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

**அ. ஹிமாச்சல பிரதேசம்** ✓

ஆ. மத்திய பிரதேசம்

இ. ஒடிஸா

ஈ. அருணாச்சல பிரதேசம்




★ SJVN நிறுவனமானது இந்தியாவின் முதல் பன்னோக்கு பசுமை ஹைட்ரஜன் சோதனை திட்டத்தை ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள நாத்பா ஜாக்ரி புனல்மின்னுற்பத்தி நிலையத்தில் தொடக்கியது. தினசரி எட்டு மநே செயல்படும் இது, 14 கிகி பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் NJHPS–க்காக அதிவேகங்கொண்ட ஆக்ஸிஜன் எரிபொருள் பூச்சுப்பொருளையும் தயாரிக்கும். இதன் 20 Nm/மணி கார மின் பகுப்பி, சிம்லாவில் உள்ள 1.31 மெகாவாட் சூரிய மின் நிலையத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலால் இயக்கப்படுகிறது.

**5. எண்மமயமாக்கல்மூலம் விவசாயக்கடன் வழங்குவதில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக அண்மையில் RBIஉடன் கூட்டிணைந்த வங்கி எது?**

**அ. NABARD** ✓

ஆ. SBI

இ. SIDBI

ஈ. HDFC

NABARD

★ NABARD மற்றும் RBI புத்தாக்க மையம் ஆகியவை எண்மமயமாக்கல்மூலம் விவசாயக்கடன்களை நவீனமயமாக்க கூட்டிணைந்துள்ளன. இது இந்திய விவசாயிகளுக்கான அணுகலை மேம்படுத்தவும் கடனளிப்பு செயலாக்கத்தை மேம்படுத்தவும் நோக்கம் கொண்டுள்ளது. NABARD ஆனது அதன் e–KCC கடன் தொடக்க அமைப்பு போர்ட்டலை RBI இன்னோவேஷன் ஹப்பின் பொது தொழில்நுட்ப தளத்துடன் ஒருங்கிணைக்கும். இந்த ஒத்துழைப்பு NABARD வங்கியின் இலக்கான கிராமப்புற செழிப்பை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புறங்களில் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் ஒத்துப்போகிறது என்று தலைவர் ஷாஜி K V கூறியுள்ளார்.

**6. செர்னோபில் அணுமின் நிலையம் அமைந்துள்ள நாடு எது?**

அ. ரஷ்யா

ஆ. இஸ்ரேல்

**இ. உக்ரைன்** ✓

ஈ. ஈராக்



★ ஆண்டுதோறும் ஏப்.26 அன்று சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவுநாளாக அனுசரிக்கப்படுகிறது; செர்னோபில் பேரழிவு நிகழ்வில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. 1986 ஏப்.26இல், உக்ரைனில் நிகழ்ந்த செர்னோபில் அணுமின் நிலைய பெருவெடிப்பு ஒரு பெரிய கதிரியக்க மேகத்தை உமிழ்ந்தது; அது சுமார் 8.4 மில்லியன் மக்களை தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சுக்கு உட்படுத்தியது. பேரழிவின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் உதவுகிறது.

**7. அண்மையில், இந்தியாவில் நிலையான திட்டங்களை மேற்கொள்வதற்காக ஜப்பானிய யென் தொகையான 60.536 பில்லியனை பசுமைக்கடனாகப் பெற்ற மத்திய பொதுத்துறை நிறுவனம் எது?**

**அ. ஊரக மின்மயமாக்கல் கழகம் (REC)** ✓

ஆ. கனரக பொறியியல் கழகம் (HEC)

இ. பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)

ஈ. HMT லிட் (HMTL)

★ இந்தியாவில் நிலையான வளர்ச்சியை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, மத்திய பொதுத்துறை நிறுவனமும், மத்திய மின்சார அமைச்சகத்தின்கீழ் உள்ள முன்னணி வங்கிசாரா நிதி நிறுவனமுமான REC லிட், இந்தியாவில் தகுதியான பசுமை திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக ஜப்பானிய யென் தொகையான 60.536 பில்லியனை பசுமைக் கடனாகப் பெறுகிறது.

★ இத்தாலிய ஏற்றுமதி கடன் நிறுவனமா SACEஇடமிருந்து இந்தக் கடன்தொகை பெறப்படுகிறது. இந்திய அரசின் ஒரு நிறுவனத்திற்கும் SACE நிறுவனத்திற்கும் இடையே ஏற்படும் முதல் கடன் ஒத்துழைப்பு இதுவாகும். இந்தக் கடன் வசதி REC நிறுவனத்திற்கான உத்திசார் முதலீடாக அமையும். இது இந்நிறுவனத்தின் பசுமை நிதி கட்டமைப்புடன் இணைந்து, நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**8. அண்மையில், ஷென்சோ-18 விண்கலத்தை அதன் விண்வெளி நிலையத்திற்கு வெற்றிகரமாக செலுத்திய நாடு எது?**

அ. ரஷ்யா

ஆ. இஸ்ரேல்

**இ. சீனா** ✓

ஈ. ஜப்பான்



★ லாங் மார்ச் 2-F ஏவுகலத்தில் ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து மூன்று பேர்கொண்ட குழுவை சீனா தனது டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு அனுப்பியது. ஷென்சோ-18 குழுவினர் சுமார் ஆறு மாதங்கள் அந்நிலையத்தில் தங்கி, அறிவியல் சோதனைகளை நடத்தி, விண்வெளி குப்பைகள் பாதுகாப்பு உபகரணங்களை நிறுவி, அறிவியல் கல்வியை மேம்படுத்துவார்கள். 2030ஆம் ஆண்டளவில் நிலவில் விண்வெளி வீரர்களை நிலை நிறுத்துவதை சீனா நோக்கமாகக் கொண்டுள்ளது; அது நிறைவேறினால் சோவியத் யூனியன் (USSR) மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு அவ்வாறு நிகழ்த்தும் மூன்றாவது நாடு என்ற பெருமையை சீனா பெறும்.

**9. அண்மையில், "Gender report – Technology on her terms" என்ற தலைப்பிலான 2024 – உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNDP


ஆ. IMF

**இ. UNESCO** ✓

ஈ. UNICEF

★ ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது (UNESCO) 2024 – உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையை "Gender report – Technology on her terms" என்ற தலைப்பில் பிரான்சில் வெளியிட்டது. பெண்களின் கல்வி வாய்ப்புகள் மற்றும் எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சியில் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை இந்த அறிக்கை ஆய்வுசெய்கிறது. கென்யாவில் உள்ள M-shule தளத்தை மேற்கோள் காட்டி, பெண்களுக்கான கல்வித்தடைகளை கையாளுவதற்கான ICTஇன் திறனை இது எடுத்துக்காட்டுகிறது.

**10. அண்மையில், எந்த விண்வெளி அமைப்பு, நியூசிலாந்தில் இருந்து அதன் 'Advanced Composite Solar Sail System' விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது?**



அ. JAXA

**ஆ. NASA ✓**

இ. ISRO

ஈ. CNSA

★ அண்மையில் NASA நியூசிலாந்தில் இருந்து தனது 'Advanced Composite Solar Sail System' என்ற விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இவ்விண்கலம் சூரிய ஆற்றலை தன் உந்துதலுக்காகப் பயன்படுத்துகிறது; பூமிக்கு மேலே 1,000 கிமீ தொலைவில் 80 சதுர.மீ அளவுக்கு இது சுற்றிவருகிறது. இதன் முக்கிய நோக்கங்களில் சூரிய அழுத்தத்தின் செயல்திறன் மற்றும் திசையமைவு மாறுவீதத்தை வெளிப்படுத்துதல் அடங்கும்.

**11. அண்மையில், கொரியாவின் சாங்வோனில் நடைபெற்ற உலக துப்பாக்கி சுடுதல் பாரா ஸ்போர்ட் போட்டியில் பெண்களுக்கான 10 மீ ஏர் ரைபிள் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?**




அ. ஈஷா சிங்

ஆ. அவனி லேகரா

**இ. மோனா அகர்வால் ✓**

ஈ. சிப்ட் கௌர் ஷர்மா

★ கொரியாவின் சாங்வோனில் நடந்த உலக துப்பாக்கி சுடுதல் பாரா ஸ்போர்ட் போட்டியில் பெண்களுக்கான 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் இந்திய பாரா-ஷூட் வீராங்கனை மோனா அகர்வால் தங்கமும், 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் ராணுவ வீரர் அமீர் அகமது பட் வெள்ளியும் வென்றனர். 37 வயதான மோனா அகர்வால், R2-10மீ ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் SH1 தங்கப்பதக்கத்தை 250.8 மதிப்பெண்களுடன் வென்றார்; இது இந்த ஆண்டில் அவர் வெல்லும் இரண்டாவது உலகக்கோப்பை பட்டமாகும். சுலோவாக்கியாவின் வெரோனிகா வடோவிகோவா வெள்ளிப்பதக்கமும், சுவீடன் வீராங்கனை அன்னா பென்சன் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

**12. நீலகிரி வரையாடு திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ✓**

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. தெலங்கானா

★ பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கமானது (IUCN) 3-நாள் ஒத்திசைக்கப்பட்ட நீலகிரி வரையாடு எண்ணிக்கை கணக்கெடுப்பில் மூன்றாந்தரப்பு பார்வையாளராக இணையவுள்ளது. ஏப்.29 அன்று தொடங்கும் இக்கணக்கெடுப்பு, நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கான முதல் ஒருங்கிணைந்த முயற்சியாகும். கூட்டுப் பணியாளர்களில் WWF-இந்தியா, WII மற்றும் AIWC ஆகியவை அடங்கும். தமிழ்நாடு அரசால் தொடக்கப்பட்ட நீலகிரி வரையாடு திட்டம், 2022-2027 வரை, அவ்வுயிரினங்களைப் பாதுகாப்பதையும் அதன் உயிர்வாழ்வை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2024 மே.01இல் கிராம சபைக்கூட்டம் நடைபெறாது: மாண்புமிகு தமிழ்நாடு அரசு.**

மக்களவைத் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், மே.01 அன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறாது எனத் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. அதேநேரத்தில், உள்ளாட்சிகளின் வழக்கமான கூட்டங்கள், செயல்பாடுகளுக்கு எத்தடையும் இல்லை என்று தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு ஆறுமுறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதன்படி, குடியரசு நாள் (ஜன.26), உலக தண்ணீர் நாள் (மார்ச்.22 ), உழைப்பாளர் நாள் (மே.01), விடுதலை நாள் (ஆக.15), மகாத்மா காந்தி பிறந்தநாள் (அக்.02), உள்ளாட்சிகள் நாள் (நவ.01) ஆகிய நாள்களில் நடத்தப்படும் கிராம சபைக் கூட்டங்களில் ஊராட்சிகளின் வளர்ச்சிப்பணிகள், எதிர்காலத் திட்டங்கள் ஆகியன குறித்து விவாதிக்கப்படும்.

---

**2. தென்னிந்திய நீர்த்தேக்கங்களில் நீரிருப்பு: பத்து ஆண்டுகள் இல்லாத அளவுக்கு கடும் சரிவு.**

நாட்டின் பல்வேறு மண்டலங்களில் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரிருப்பு குறித்த விவரங்களை மத்திய நீராணையம் வெளியிட்டுள்ளது. அந்த விவரங்களின்படி தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களை உள்ளடக்கிய தென் மண்டலத்தில், மத்திய நீர் ஆணையத்தின் கண்காணிப்பில் 42 நீர்த்தேக்கங்கள் உள்ளன. அந்த நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 53.334 பில்லியன் கன மீட்டர்களாகும்.

தற்போது இந்நீர்த்தேக்கங்களில் நீரிருப்பு 8.865 பில்லியன் கனமீட்டர்களாக உள்ளது. இது இந்நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் 17 சதவீதமாகும். இந்த நீர் இருப்பு கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 29 சதவீதமாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளின் இதே காலகட்டத்தில், இந்நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் நீர் இருப்பு சராசரியாக 23 சதவீதம் இருந்தது. கடந்த ஆண்டு மற்றும் 10 ஆண்டுகால சராசரியுடன் ஒப்பிடுகையில், நிகழாண்டு இந்த நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு மிகவும் குறைந்துள்ளது. இது தென்மண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறை, பாசனம், குடிநீர் விநியோகம், நீர்மின்னுற்பத்தி ஆகியவற்றுக்கான சவால்கள் மோசமடையும் நிலையை சுட்டிக்காட்டுகிறது.

---

**3. பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தமிழ்நாட்டின் நேத்ரா குமணன் தகுதி.**

இந்திய படகோட்டும் வீராங்கனை நேத்ரா குமணன், பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளார். ஏற்கெனவே, விஷ்ணு சரவணன் அந்தப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள நிலையில், தற்போது இந்தியாவுக்கு அதில் 2ஆவது இடம் கிடைத்துள்ளது.

---

**4. தமிழ்நாட்டில் 1000 இடங்களில் நீர்ச்சத்து குறைபாட்டை போக்கும் மையங்கள்.**

தமிழ்நாட்டில் ஆயிரம் இடங்களில் நீர்ச்சத்து குறைபாட்டை போக்கும் ORS கரைசல் பாக்கெட்டுகளை வழங்கும் மையங்களை அமைக்க பொதுச் சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது. உடலில் உள்ள நீர்ச்சத்து குறைபாட்டை போக்குவதற்காக உப்பு, சர்க்கரை கரைசலான ORS கரைசலை வழங்க, 'Rehydration Points' என்னும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

---

**5. காலை உணவுத் திட்டத்தின் முன்னோடி தியாகராயர்: முதலமைச்சர் புகழாரம்.**

சர் பிட்டி தியாகராயரின் 173ஆவது பிறந்தநாளையொட்டி, காலை உணவுத் திட்டத்தின் முன்னோடி தியாகராயர் என்று முதலமைச்சர் மு க ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அழகர் திருக்கோவிலானது தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?**



**அ. மதுரை ✓**


ஆ. தேனி

இ. திண்டுக்கல்

ஈ. தென்காசி

★ கள்ளழகர் வைகை ஆற்றில் இருந்து ஊர்வலமாகத் திரும்பியதை அடுத்து சித்திரைத் திருவிழா நிறைவடைந்தது. தமிழ்நாட்டின் மதுரையில் உள்ள அழகர் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள அழகர் திருக்கோவில், 'கள்ளழகர்' என்று போற்றப்படும் திருமாலின் நூற்றெட்டு திருத்தலங்களில் ஒன்றாகும். கோட்டைச் சுவர்களுக்குள் ஆறு தாழ்வாரங்களைக் கொண்டுள்ள இத்திருக்கோவில், தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரம் மற்றும் ஆழ்வார்களின் பாசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோவிலின் மண்டபத்தூண்கள் நாயக்க கலைப்பாணியைக் காட்டுகின்றன.

**2. 21ஆவது U20 ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கப்பதக்கம் வென்ற ஹர்ஷித் குமார் சார்ந்த விளையாட்டு எது?**



அ. ஈட்டியெறிதல்


**ஆ. சுத்தியெறிதல் ✓**

இ. டென்னிஸ்

ஈ. செஸ்

★ 21ஆவது U20 ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பில் இந்திய தடகள வீரர்கள் மொத்தம் 18 பதக்கங்களை வென்றனர். சுத்தியெறிதலில் ஹர்ஷித் குமார் தங்கமும், ஆடவர் வட்டெறிதலில் ரித்திக் வெள்ளியும் வென்றனர். 800 மீ ஓட்டப் பந்தயத்தில் லக்சிதா சாண்டிலியா வெள்ளிவென்றார். கலப்பு ரிலே அணி வெள்ளியும், பெண்களுக்கான 400 மீட்டர் தடையோட்டத்தில் ஸ்ரேயா ராஜேஷ் வெண்கலமும் சுத்தியெறிதல் போட்டியில் பிரதீக் வெண்கலமும் வென்றனர்.

**3. சிறுநீரகிய இணைப்போக்கு (Nephrotic Syndrome) என்றால் என்ன?**



அ. ஒரு தோல் கோளாறு

**ஆ. சிறுநீரில் அதிகப்படியான புரதத்தை உண்டுபண்ணும் ஒரு சிறுநீரக கோளாறு ✓**

இ. ஒரு சுவாச நிலை

ஈ. ஒரு நரம்பியல் கோளாறு

★ அழகுதரும் பூச்சுகளை தவறாமல் பயன்படுத்துவதால் சிறுநீரகிய இணைப்போக்கு (Nephrotic Syndrome) ஏற்படும் எனக் கேரள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறுநீரகிய இணைப்போக்கு என்பது ஒரு சிறுநீரகக் கோளாறு ஆகும்; இது குளோமருலி அழற்சியின் காரணமாக சிறுநீரில் அதிகப்படியான புரதத்தை ஏற்படுத்துகிறது. நலமான சிறுநீரகங்கள் கழிவுகளை வடிகட்டுகின்றன; ஆனால் வீக்கமடைந்த குளோமருலி புரதத்தை சிறுநீரில் கசியவிடும். இது குறிப்பிடும் அளவுக்கு ஒரு சிறுநீரக நோய் அன்று என்றாலும் சிறுநீரக வடிகட்டிகளை சேதப்படுத்தும் பல்வேறு நிலைமைகளின் விளைவுக்குக் காரணமாக அமைகிறது.

**4. அறிவுசார் குறைபாடுகள் உள்ளோரின் அதிகாரமளித்தலுக்கான தேசிய நிறுவனம் (NIEPID) சார்ந்த அமைச்சகம் எது?**

அ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ✓**

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

★ இந்தியாவிலுள்ள வயதுவந்தோரில் குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகளை கண்டறிவதற்காக, அறிவுசார் குறைபாடுகள் உள்ள நபர்களின் அதிகாரமளித்தலுக்கான தேசிய நிறுவனம் உருவாக்கிய புதிய சோதனையை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. 1984இல் நிறுவப்பட்ட NIEPID, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது; இது அறிவுசார் குறைபாடுகள் உள்ள தனிநபர்களுக்கான சேவைகளில் கவனம் செலுத்துகிறது. தெலுங்கானாவின் செகந்திராபாத்தை தலைமையிடமாகக் கொண்டு, நாடு முழுவதும் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு சேவைகளை இது வழங்குகிறது.

**5. UNCTAD அறிக்கையின்படி, 2023இல் இந்திய சேவைத்துறை ஏற்றுமதியின் வளர்ச்சி வீதம் என்ன?**

**அ. 11.4%** ✓

ஆ. 9.2%

இ. 8.1%

ஈ. 10.7%




★ UNCTAD அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டில், இந்திய சேவைத்துறை ஏற்றுமதிகள் 11.4% அதிகரித்து $345 பில்லியன் டாலராகவும், சீன சேவைத்துறை ஏற்றுமதிகள் 10.1% குறைந்து $381 பில்லியன் டாலராகவும் உள்ளது. இந்தியாவின் சேவை இறக்குமதி 0.4% குறைந்து $248 பில்லியன் டாலராக உள்ளது. உலக அளவில் சேவை ஏற்றுமதியில் இந்தியா 7ஆவது இடத்தில் உள்ளது; அமெரிக்கா முன்னணியில் உள்ளது. கூடுதலாக, இந்தியா 9ஆம் பெரிய சேவை இறக்குமதி செய்யும் நாடாக உள்ளது. UNCTADஇன் அறிக்கையின்படி, அமெரிக்காவும் சீனாவும் சேவை இறக்குமதியாளர்களாக உயர் இடத்தில் உள்ளன.

**6. சமீபத்தில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. புது தில்லி, இந்தியா

**ஆ. அஸ்தானா, கஜகஸ்தான்** ✓

இ. பெய்ஜிங், சீனா

ஈ. தெஹ்ரான், ஈரான்

★ 2024 ஏப்.26 அன்று கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பாதுகாப்புச் செயலாளர் கிரிதர் அர்மானே பங்கேற்றார். அனைத்து உறுப்புநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும் நெறிமுறையில் கையெழுத்திட்டனர். 'வசுதைவ குடும்பகம்' என்ற இந்தியத்தத்துவத்தை எதிரொலிக்கும், "ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்" என்ற கருத்தை உறுப்பினர்கள் ஆமோதித்தனர்.

**7. அண்மையில், 'இந்தியாவில் காப்புரிமைப் போக்குகள்' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. NASSCOM** ✓

ஆ. CSIR

இ. IRDAI

ஈ. நிதி அமைச்சகம்

★ உலக அறிவுசார் சொத்துரிமை நாளுடன் இணைந்து போகும் விதமாக, அண்மையில் NASSCOMஆல் இந்தியாவில் காப்புரிமைப் போக்குகள் என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. ஆண்டுதோறும் ஏப்ரல்.26 அன்று கொண்டாடப்படும் உலக அறிவுசார் சொத்துரிமை நாள், புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை வளர்ப்பதில் அறிவுசார் சொத்துரிமைகளின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. WIPOஆல் கடந்த 2000ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நாளுக்கான நடப்பு 2024ஆம் ஆண்டுக்கானக் கருப்பொருள், "IP and the SDGs: Building Our Common Future with Innovation and Creativity" என்பதாகும்.

8. **அண்மையில், உணவுப்பொருட்களில் திரவ நைட்ரஜனைப் பயன்படுத்துவதற்கு தடை விதித்து அறிவித்த மாநில அரசு எது?**



**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கர்நாடகா

இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ உணவுப்பொருட்களில் திரவ நைட்ரஜனைப் பயன்படுத்துவதைக் கண்காணிக்கவும், உணவுப்பாதுகாப்பு மற்றும் தரநிலைச்சட்டம், 2006ஐ அமல்படுத்தவும், தமிழ்நாட்டின் உணவுப் பாதுகாப்பு ஆணையர் மற்றபிற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். திரவ நைட்ரஜன் என்பது –320°F (–196°C) கொதிநிலையுடன் கூடிய ஒரு மந்தமான, நிறமற்ற, மிகவும் குளிர்ந்த வாயுநிலை தனிமமாகும்; இதனை உண்ணும்பொழுது வாயில் காயங்கள், உறுப்பு சேதம் மற்றும் துளைகள் உள்ளிட்ட உடல்நல இடர்களை ஏற்படுத்துகிறது. பல்வேறு தொழிற்துறை செயல்முறைகளில் உணவை விரைவாக குளிர்விக்க மற்றும் உறைய வைக்க இவ்வாயு பயன்படுத்தப்படுகிறது.

9. **'பாம்பி பக்கெட்' என்றால் என்ன?**



**அ. வான்வழியாகத் தீயை அணைக்கும் கருவி** ✓

ஆ. பாரம்பரிய நீர்ப்பாசன நுட்பம்

இ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

ஈ. கருந்துளை

★ நைனிடாலில் காட்டுத்தீயை அணைப்பதற்காக இந்திய வான்படை, 'பாம்பி பக்கெட்டுகள்' பொருத்திய MI 17 V5 ஹெலிகாப்டர்களை பயன்படுத்தியது. 'பாம்பி பக்கெட்' என்பது ஹெலிகாப்டர் வாளி என்றும் அழைக்கப்படுகிறது; இது 1980களில் இருந்து பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு தீயணைக்கும் கருவியாகும். ஹெலிகாப்டரின்கீழ் பொருந்தி இருக்கும் இது, ஆறுகள் அல்லது குளங்களில் இருந்து நீரை நிரப்பிக்கொண்டு வந்து தண்ணீரை வெளியிடுகிறது. அணுகமுடியாத காட்டுத்தீயை எதிர்த்துப் போராட இது உதவுகிறது.

10. **இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய தரவுகளின்படி, 2022-23 நிதியாண்டில் இந்தியாவின் நிகர குடும்ப சேமிப்பு வீதம் என்ன?**



அ. 4.5%


**ஆ. 5.3%** ✓

இ. 6.7%

ஈ. 7.1%

★ இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய தரவு, 2022-23 நிதியாண்டில் இந்தியாவின் நிகர குடும்ப சேமிப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3%ஆக 47 ஆண்டுகளில் மிகக்குறைந்த அளவை எட்டியதாக தெரிவிக்கிறது. 2022இல் இது 7.3%ஆக இருந்தது. அதே நேரத்தில், குடும்பக்கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.8%ஆக உயர்ந்துள்ளது; இது 1970 காலகட்டத்திற்குப் பிறகு இரண்டாவது அதிகபட்சமாகும். வீட்டுச் சேமிப்பு விகிதம் என்பது நிதிச்சொத்துகள், அசையா சொத்துக்கள் மற்றும் தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் போன்ற விலைமதிப்பற்ற உலோகங்களை உள்ளடக்கிய செலவழிப்பதற்குப் பதிலாக சேமிக்கப்படும் செலவழிப்பு வருமானத்தின் விகிதமாகும்.

11. **அண்மையில், 2024 – கேம்பிரிட்ஜ் அர்ப்பணிப்பு ஆசிரியர் விருதுகளில் மத்திய கிழக்கு & வட ஆப்பிரிக்காவின் (MENA) பிராந்திய வெற்றியாளராக அறிவிக்கப்பட்டவர் யார்?**



**அ. ஜினா ஜஸ்டஸ்** ✓

ஆ. ரேவதி அத்வைதி

இ. சுப்ரியா சாஹு

ஈ. மிருதுளா கர்க்

★ 2024 – கேம்பிரிட்ஜ் அர்ப்பணிப்பு ஆசிரியர் விருதுகளில், UAE, ஷார்ஜா பெண்கள் கிளை ஆங்கில உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியை ஜினா ஜஸ்டஸ், MENA பிராந்தியத்திற்கான விருதினை வென்றார். கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இவர், 2005ஆம் ஆண்டு முதல் ஐக்கிய அரபு அமீரகத்தில் பணிபுரிந்து வருகிறார். வழிகாட்டுதல் மற்றும் தொண்டு பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஜினா ஜஸ்டஸ், 141 நாடுகளில் இருந்து பெறப்பட்ட 14,840 பரிந்துரைகளில் தனித்துவமாக நின்றார். இந்த விருதுகள் உலக அளவில் தொடக்கநிலை மற்றும் இடைநிலைக் கல்வியாளர்களை கௌரவிக்கின்றன.

12. **அண்மையில், ICC ஆடவர் T20 உலகக்கோப்பை–2024இன் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் யார்?**




**அ. யுவராஜ் சிங்** ✓

ஆ. ஹர்பஜன் சிங்

இ. சுரேஷ் ரெய்னா

ஈ. இர்பான் பதான்

★ பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், 36 நாட்களில் தொடங்கவுள்ள ICC ஆடவர் T20 உலகக்கோப்பை – 2024 போட்டிக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் 2007ஆம் ஆண்டு வெற்றியின்போது ஓர் ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்ததற்காகப் புகழ் பெற்ற யுவராஜ் சிங், கிறிஸ் கெய்ல் மற்றும் உசைன் போல்ட் ஆகியோருடன் தூதுவர்களாக இணைகிறார். ஜமைக்காவின் ஓட்டப்பந்தய வீரரும், எட்டு முறை ஒலிம்பிக் தங்கம் வென்றவருமான உசைன் போல்ட், இந்நிகழ்விற்கு மேலும் உற்சாகமூட்டுகிறார். 42 வயதான யுவராஜ் சிங், இந்தியாவின் 2007ஆம் ஆண்டு வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார். வரும் ஜூன்.01ஆம் தேதி தொடங்கும் பத்து அணிகள்கொண்ட T20 போட்டிக்கான போட்டிக்கு முந்தைய விளம்பரங்களில் அவர் பங்கேற்பார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது.**

சமுதாய வளர்ச்சிக்கு சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில், 'முதல்வரின் மாநில இளைஞர் விருது' ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர நாளன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. விருதுடன் ₹1 இலட்சம் ரொக்கத்துடன், பாராட்டுப்பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவையும் வழங்கப்படும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – உலக கால்நடை மருத்துவ நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Value of Vaccination

**ஆ. Veterinarians are essential health workers** ✓

இ. Promoting Diversity, Equity, and Inclusiveness in the Veterinary Profession

ஈ. Environmental protection for improving animal and human health

★ உலக கால்நடை மருத்துவ நாளானது ஆண்டுதோறும் உலகளவில் கால்நடை மருத்துவர்களின் பங்களிப்புகளைப் போற்றுகிறது. பொதுச் சுகாதாரம் மற்றும் விலங்கு நலனில் அவர்களின் பங்கை இந்நாள் வலியுறுத்துகிறது. ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று கடைப்பிடிக்கப்படும் உலக கால்நடை மருத்துவ நாள், விலங்குகள் மற்றும் மனித நலத்தை பராமரிப்பதில் கால்நடை மருத்துவர்களின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. 2024ஆம் ஆண்டில், ஏப்.27 அன்று கடைப்பிடிக்கப்பட்ட இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Veterinarians are essential health workers" என்பதாகும்.

**2. அண்மையில், வில்வித்தை உலகக்கோப்பையில் ஆடவருக்கான ரீகர்வ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற நாடு எது?**

**அ. இந்தியா** ✓

ஆ. தென் கொரியா

இ. மலேசியா

ஈ. இந்தோனேசியா

★ வில்வித்தை உலகக்கோப்பை நிலை–1இல் தென்கொரியாவை தோற்கடித்து, 14 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஆடவர் ரீகர்வ் அணி வரலாற்றுச் சிறப்புமிக்க தங்கத்தை வென்றது. வெற்றி பெற்ற தீரஜ் பொம்மதேவரா, தருண்தீப் ராய் மற்றும் பிரவின் ஜாதவ் ஆகிய மூவரும் தென் கொரியாவின் உலக சாம்பியன் அணியை 5–1 என்ற கணக்கில் தோற்கடித்தனர். இதன்மூலம் வில்வித்தை உலகக்கோப்பையில் ஐந்து தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் என மொத்தம் எட்டுப் பதக்கங்களை இந்தியா பெற்றது. 8 ஆண்கள் மற்றும் 8 பெண்கள் அடங்கிய 16 பேர்கொண்ட இந்திய அணி போட்டியில் பங்கேற்பதற்காக ஷாங்காய்க்குச் சென்றது.

**3. பசுமை வகைப்பாட்டியல் என்றால் என்ன?**

**அ. சுற்றுச்சூழலுக்குகந்த முதலீடுகளை வகைப்படுத்துவதற்கான ஓர் அமைப்பு** ✓

ஆ. நிதி சொத்துக்களை அவற்றின் நிறத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பு

இ. சுற்றுச்சூழல் திட்டங்கள் தொடர்பான அரசாங்க வரவு செலவுத்திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கான ஒரு முறை

ஈ. வெப்பமண்டல மழைக்காடுகளில் காணப்படும் ஒரு வகை தாவர இனம்

★ இந்திய ரிசர்வ் வங்கியும் நிதியமைச்சகமும் ASEANஇன் வளர்ந்து வரும் பசுமை வகைப்பாட்டிலிருந்து நிலையான பாதைகளுக்கு மாறுவதற்காக அதிலிருந்து வெளியேறலாம் எனக் கருதப்படுகிறது. பசுமை வகைப்பாட்டியல் என்பது சுற்றுச்சூழலுக்குகந்த முதலீடுகளை வரையறுக்கிறது; பசுமைக் கண்துடைப்பு செய்வதைத் தடுக்க உதவுகிறது. இது தட்பவெப்பநிலை தணிப்பு, தழுவல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய நீடித்த நிலையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதிகளை வழங்குகிறது.

**4. இராஜா இரவிவர்மாவுடன் தொடர்புடைய துறை எது?**



அ. விளையாட்டு ஆ. மருத்துவம்

இ. இசை **ஈ. ஓவியம் மற்றும் கலை** ✓

★ இராஜா ரவிவர்மாவின், "இந்துலேகா" ஓவியத்தின் முதல் மெய்ப்பிரதி, அவரது 176ஆவது பிறந்தநாளில், கேரளாவில் உள்ள கிளிமானூர் அரண்மனையில் வெளியிடப்படவுள்ளது. 1848இல் பிறந்த இராஜா இரவிவர்மா, ஒரு புகழ்பெற்ற இந்திய ஓவியராவார்; இந்திய கருப்பொருள்களுடன் ஐரோப்பிய நுட்பங்களை இணைப்பதற்காக அவர் புகழப்பட்டார். இந்து புராணங்களை மேற்கத்திய கலவையுடன் கலந்து சுமார் 7,000 ஓவியங்களைப் புனைந்தார். ராஜா ரவிவர்மா அவர்களின் குறிப்பிடத்தக்க படைப்புகளில், 'தமயந்தி அன்னத்துடன் பேசுதல்' மற்றும் 'துஷ்யந்தை தேடும் சகுந்தலா' ஆகியவை அடங்கும்.

**5. அண்மையில், 2024 – 'முக்கிய கனிமங்கள் தொடர்பான உச்சிமாநாடு' நடைபெற்ற இடம் எது?**



அ. சென்னை

**ஆ. புது தில்லி ✓**

இ. ஹைதராபாத்

ஈ. போபால்

★ நிலையான எரிசக்தி அறக்கட்டளை, எரிசக்தி, சுற்றுச்சூழல், நீர் கவுன்சில் மற்றும் நிலையான மேம்பாட்டு நிறுவனம் (IISD) ஆகியவற்றுடன் எரிசக்தி அமைச்சகம் இணைந்து, 2024 ஏப்.29–30 வரை இரு நாட்களுக்கு புது தில்லியில், "முக்கிய கனிமங்கள் உச்சிமாநாடு: பயன்கள் மற்றும் செயலாக்கத் திறன்களை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் உச்சிமாநாட்டை நடத்தின.

★ தொழிற்துறை பிரதிநிதிகள், புத்தொழில் நிறுவன பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பவர்கள் உள்ளிட்ட பல்வேறு இந்திய மற்றும் சர்வதேச வல்லுநர்களை இந்த உச்சிமாநாடு ஒருங்கிணைத்தது. கனிம ஏல முன்னேற்றம், சுற்றுச்சூழல் ரீதியாக நீடித்த தீர்வுகளை மேம்படுத்துதல் போன்ற முக்கியமான பிரச்சினைகளை மையமாகக்கொண்ட கலந்துரையாடல் மற்றும் பயிலரங்குகள் இதில் நடைபெற்றது. கிளாக்கோனைட் (பொட்டாஷ்), லித்தியம், குரோமியம், பிளாட்டினம், கிராபைட், கிராபைட்டுடன் தொடர்புடைய டங்ஸ்டன், உள்ளிட்ட 8 முக்கிய கனிமங்கள் குறித்த தொழில்நுட்ப அமர்வுகள் இந்த உச்சிமாநாட்டில் இடம்பெற்றது.

**6. அண்மையில், புத்தொழில் நிறுவனங்களுக்கான பெருநிறுவன ஆளுகை சாசனத்தை அறிமுகப்படுத்தியுள்ள வர்த்தக சங்கம் எது?**

அ. இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு (ITPO)

**ஆ. இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) ✓**

இ. ASSOCHAM

ஈ. இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு (FICCI)

★ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பானது (CII) வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மைபோன்ற கொள்கைகளை வலியுறுத்தி, புத்தொழில் நிறுவனங்களுக்கான பெருநிறுவன ஆளுகை சாசனத்தை வெளியிடவுள்ளது. நிலைப்புத் தன்மை மற்றும் வெற்றியை நோக்கி புத்தொழில் நிறுவனங்களை வழிநடத்தும் நோக்கில், இது பாரத்பே மற்றும் கோமெக்கானிக் போன்ற உயர்தர நிகழ்வுகளில் காணப்படும் நிர்வாகத் தோல்விகளுக்குத் தீர்வுகாண்கிறது. நிறுவனங்கள் சட்டம், 2013இன்கீழ் புத்தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தும் இந்தப் புதிய சாசனம், பல்வேறு நிலைகளுக்கான வழிகாட்டுதல்களை கோடிட்டுக் காட்டுகிறது.

**7. அண்மையில், "உடல்சார் தண்டனை முறைகளை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களை (GECP)" வெளியிட்ட மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ✓** ஆ. தெலுங்கானா

இ. கேரளா ஈ. மேகாலயா

★ கல்வி உரிமைச்சட்டம், 2009இன்படி மாணாக்கர்க்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்காக பள்ளிகளில் உடல்சார் தண்டனை முறைகளை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களை மாண்புமிகு தமிழ்நாடு அரசு வெளியிட்டது. பள்ளி மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர்கள் இணைந்து வெளியிட்ட இந்த வழிகாட்டல்கள், உடல் மற்றும் மன ரீதியான (பாகுபாடு) பாதிப்புகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சிறார் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் குறித்த விழிப்புணர்வும் இதில் அடங்கும். புகார்களை உடனடி நிவர்த்தி செய்தல் மற்றும் பள்ளிகளில் கண்காணிப்புக் குழுக்களை உருவாக்குதல் ஆகியவை நடவடிக்கைகளில் அடங்கும்.

**8. அண்மையில், 2024 – 'கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசுக்குத்' தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?**



அ. இராஜேந்திர சிங்

ஆ. துளசி கவுடா

**இ. அலோக் சுக்லா** ✓

ஈ. இரமேஷ் அகர்வால்

★ சத்தீஸ்கர் மாநிலத்தின் சுற்றுச்சூழல் ஆர்வலரான அலோக் சுக்லாவுக்கு அவரது அடிமட்ட முயற்சிகளுக்காக 2024 – கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. "பசுமை நோபல் பரிசு" என்று அறியப்படும் இது, சத்தீஸ்கரின் சுற்றுச்சூழல் அமைப்பின் ஹஸ்தியோ அரந்த் காடுகளைப் பாதுகாப்பதற்காக அவராற்றிய பணியைப் போற்றுகிறது. நிலக்கரிச் சுரங்க அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட அலோக் சுக்லா, உள்ளூர் பழங்குடியினரை ஒன்றுதிரட்டி, 2022இல் 21 நிலக்கரிச்சுரங்கங்களின் ஏலத்தை இரத்துசெய்யுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தார். அவரது அமைப்பான, 'ஹஸ்திய ஆரண்ய பச்சாவோ சங்கர்ஷ் சமிதி', அப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்தது.

**9. INS விக்ராந்த் என்றால் என்ன?**



அ. நீர்மூழ்கிக்கப்பல்

**ஆ. விமானந்தாங்கிக்கப்பல்** ✓

இ. பீரங்கிகள்

ஈ. போர்க்கப்பல்கள்

★ இந்தியக் கடற்படை அண்மையில் அதன் இரண்டு விமானந்தாங்கிப்போர்க்கப்பல்களான INS விக்ரமாதித்யா மற்றும் INS விக்ராந்த் ஆகியவற்றின் இரட்டைத் தாங்கு செயல்பாடுகளை காட்சிப்படுத்தியது. இந்த விமானந்தாங்கிகளை இந்தியா இயக்குகிறது. INS விக்ராந்த் என்பது கடந்த 1960களிளிருந்து செயல்பாட்டில் உள்ள இங்கிலாந்தில் இருந்து வாங்கப்பட்ட முதல் விமானந்தாங்கிக்கப்பலாகும். INS விராட் என்பது இந்தியாவின் இரண்டாவது விமானந்தாங்கி ஆகும்; அதன் அசல் பெயர் HMS ஹெர்ம்ஸ் ஆகும். 2013இல் இந்தியக் கடற்படையில் சேர்ந்த INS விக்ரமாதித்யா என்பது இந்தியாவின் மூன்றாவது விமானந்தாங்கிக்கப்பலாகும்.

**10. அண்மையில், இந்திய இமயமலை ஆற்றுப்படுகைகளின் நீர்ப்பிடிப்புகளில் பனிப்பாறை ஏரிகளின் விரிவாக்கம் குறித்த செயற்கைக்கோள் தரவு அடிப்படையிலான பகுப்பாய்வை வெளியிட்ட அமைப்பு எது?**



**அ. ISRO** ✓

ஆ. DRDO

இ. CSIR

ஈ. NDMA

★ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) அண்மையில் இந்திய இமயமலை ஆற்றுப்படுகைகளின் நீர்ப்பிடிப்புகளில் பனிப்பாறை ஏரிகளின் விரிவாக்கம் குறித்த செயற்கைக்கோள் தரவு அடிப்படையிலான பகுப்பாய்வை வெளியிட்டது. இப்பகுப்பாய்வு ஏரிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காட்டுவதற்காக 1984 முதல் 2023 வரையிலான நீண்டகால செயற்கைக்கோள் நிழற்படங்களைப் பயன்படுத்துகிறது.

★ ISROஇன் கூற்றுப்படி, 2016–17இல் அடையாளம் காணப்பட்ட 10 ஹெக்டேருக்கும் அதிகமான 2,431 ஏரிகளில் 676 ஏரிகள் 1984 முதல் கணிசமாக விரிவடைந்துள்ளன. பனிப்பாறை ஏரி விரிவாக்கத்தின் அபாயங்கள் மற்றும் அதன் உள்கட்டமைப்பு மற்றும் அத்தகைய ஏரிகளின்கீழ் உள்ள குடியிருப்புகளில் அவற்றின் தாக்கத்தை இந்தப் பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகிறது.

11. **அண்மையில், ஓரினச்சேர்க்கை உறவுகளைக் குற்றமாக அறிவிக்கும் சட்டத்தை நிறைவேற்றிய நாடு எது?**

அ. ஈரான்

**ஆ. ஈராக்** ✓

இ. வியட்நாம்

ஈ. எகிப்து




★ ஈராக் நாடாளுமன்றம் அண்மையில் ஓரினச்சேர்க்கை உறவுகளை குற்றமாகக்கருதும் சட்டத்தை நிறைவேற்றியது; அத்தகைய செயல்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அந்நாடு அறிவித்துள்ளது. ஓரினச்சேர்க்கை அல்லது விபச்சாரத்தை ஊக்குவிப்பது குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு வழிவகுக்கும் என அந்நாடு எச்சரித்துள்ளது. கூடுதலாக, ஒருவரின் அசல் பாலினத்தை மாற்றுவது (அ) பெண்ணின் ஆடை அணிந்து கொள்வது போன்றவை 1–3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனைக்கு வழிவகுக்கும். சமயஞ் சார்ந்த விழுமியங்களை நிலைநிறுத்தவும், தார்மீகச் சிதைவிலிருந்து ஈராக்கிய சமுதாயத்தைப் பாதுகாக்கவும் இந்தச் சட்டம் பழமைவாத ஷியா இசுலாமிய கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ளது.

12. **அண்மையில், முதன்முறையாக மக்களவைத் தேர்தலில் வாக்களித்த புரூ பழங்குடியினம் சார்ந்த மாநிலம் எது?**

அ. மிசோரம்

**ஆ. திரிபுரா** ✓

இ. நாகாலாந்து

ஈ. கர்நாடகா



★ அண்மையில் நடந்தேறிய 2024 – மக்களவைத் தேர்தலில், வடகிழக்கு இந்திய மாநிலமான திரிபுராவைச் சேர்ந்த புரூ சமூகத்தினர், முதன்முறையாக வாக்களித்தனர். முதன்மையாக திரிபுரா, மிசோரம் மற்றும் அசாமில் வசிக்கும் அவர்கள், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுவாக உள்ளனர். இனரீதியாக இந்தோ–மங்கோலாய்டு இனத்தைச் சார்ந்த அவர்கள் ஆஸ்ட்ரோ–ஆசிய மொழியியல் குழுவைச் சேர்ந்தவர்களாவர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உதகமண்டலம், கொடைக்கானல் செல்பவர்களுக்கு இ–பாஸ்!**

COVID–19 காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இ–பாஸ் நடைமுறையை மே.07 முதல் ஜூன்.30 வரை உதகமண்டலம், கொடைக்கானல் செல்பவர்களுக்கு அமல்படுத்த வேண்டும் என நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

---

**2. பறவைக் காய்ச்சல்: தமிழ்நாட்டில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு.**

கேரளத்தில் பறவை காய்ச்சல் பாதிப்பு பரவி வருவதால், தமிழ்நாட்டில் வழிகாட்டு நெறிமுறைகளை பொது சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது.

H5.N1 என்ற வகை பறவைக் காய்ச்சல், தமிழ்நாட்டிலும் சில இடங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பறவைக் காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்றுபரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கு எளிதில் பாதிப்பு பரவும். காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சுத்திணறல் போன்றவை பறவைக் காய்ச்சலுக்கான அறிகுறிகளாகும்.

தனிநபர் சுகாதாரம் பேணுதல், கை கழுவுதல், பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து மற்றவர்களுக்கு பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்க முகக்கவசம் அணிதல் இந்நோய்க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக கூறப்பட்டுள்ளன.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8